www.padippakam.com

www.dalithmurasu.com



# தலித் முரசு

சமூக நீதித் திங்களிதழ்
ஆகஸ்ட் 2005 ■ ரூ.8
Vol : 2 - Issue : 10




## வரலாறாகும் வாழ்க்கை

வீரஞ்செறிந்த மக்கள்

www.padippakam.com



# இந்தியாவில் ஒருவனுடைய பிறப்பே அவனை ஆளும் வர்க்கமாக மாற்றுகிறது - X

காங்கிரஸ், பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்பாக இருக்கலாம். ஆனால், இந்தியாவின் அரசியலமைப்புச் சட்டம், பட்டியலின வகுப்பினருக்குப் பாதுகாப்புகளைக் கொண்டதாக இருக்க வேண்டுமா, வேண்டாமா என்ற பிரச்சினையைத் தீர்மானிப்பதற்கும் - இதற்கும் எந்தத் தொடர்பும் இல்லை. இப்பிரச்சினையைத் தீர்மானிக்கும் விஷயம், காங்கிரசின் பிரதிநிதித்துவத் தன்மைக்கு முற்றிலும் அப்பாற்பட்டது. இந்த முடிவு, தேவைகளை அடிப்படையாகக் கொண்டதாகவே இருக்க முடியும். இங்கு எழும் கேள்வி இதுதான்: பட்டியலின வகுப்பினர் கோரும் பாதுகாப்புகள் அவர்களுக்குத் தேவைதானா, அவசியம்தானா? காங்கிரஸ் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்பு என்ற காரணத்துக்காக, பட்டியலின வகுப்பினருக்கு எதிராக காங்கிரசை வெளிநாட்டினர் ஆதரிப்பது நியாயமல்ல. பாதுகாப்புகள் தங்களுக்குத் தேவை என்பதை நிரூபிக்குமாறு வெளிநாட்டினர், பட்டியலின வகுப்பினரைக் கேட்டால் அதில் நியாயமிருக்கிறது.

இந்தியாவில் ஆதிக்க வகுப்பு இருந்து வருவதாகக் கூறுவது மட்டும் போதாது. மாறாக, வயது வந்தோர் வாக்குரிமை சக்திகளுக்குக்கூட அடிபணிந்து போகாத அளவுக்கு தம்மை வலுப்படுத்திக் கொண்டுவிட்ட இழிந்த, வெறுக்கத்தக்க, பழி பாவத்துக்கு அஞ்சாததாக இந்த ஆதிக்க வகுப்பு ஓங்கி வளர்ந்துள்ளது என்பதை மெய்ப்பித்துக் காட்ட வேண்டும் என்று அவர்கள் கோருவதிலும் கூடத் தவறில்லை. இத்தகைய நிலையை அயல் நாட்டவர் மேற்கொள்வது முறையானதே. பட்டியலின வகுப்பு மக்கள் இதனை எதிர்கொள்ளவும் தயாராக இருக்கிறார்கள்.

உண்மையில், உலகின் பிற நாடுகளில் ஆதிக்க வகுப்பினர் வகிக்கும் நிலைக்கு மாறுபட்டதொரு நிலையை, இந்தியாவிலுள்ள ஆதிக்க வகுப்பினர் வகித்து வருகிறார்கள். இதில் எள்ளளவும் அய்யமில்லை. பிற நாடுகளில் ஆதிக்க வகுப்பினருக்கும், மற்றவர்களுக்கும் இடையே நிலவுவது அதிகப்பட்சம் பிரிவினை; இரு சொற்களைப் பிரித்துக் காட்டுவதற்கு 'ஹைபன்' என்னும் கோடு போடுகிறோமே அது போன்றது இது. ஆனால், இந்தியாவிலோ, இவ்விரு தரப்பினருக்குமிடையே வானெட்டும் ஒரு தடைச்சுவரே எழுந்து நிற்கிறது. 'ஹைபன்' என்பது பிரிவினை மட்டும்தான்; ஆனால், தடுப்பு என்பதோ நலன்களும், உணர்ச்சி ஒருமைப்பாடும் முற்றிலும் துண்டிக்கப்பட்ட ஒன்று.

மற்ற நாடுகளில் ஆதிக்க வர்க்கம் தொடர்ந்து அதிகரிக்கப்பட்டே வருகிறது. அவர்கள் அந்த வர்க்கத்தில் ஏற்கெனவே இடம் பெறாதவர்கள். ஆனால், அதற்கு இணையாக உச்ச நிலையை அடைந்திருப்பவர்கள்; இப்போது இதில் இணைத்துக் கொள்ளப்படுகின்றனர். ஆனால், இந்தியாவில் உள்ள ஆதிக்க வகுப்பினர், மற்றவர்களுக்கு கதவை முழுவதுமாக மூடிவிட்ட அமைப்பினராவர். அந்த வகுப்புக்குள் பிறக்காத எவரும் அதில் அனுமதிக்கப்படுவதில்லை. இந்த வேறுபாடு மிகவும் முக்கியமானது. ஆதிக்க வகுப்பு எங்கு ஒரு குறிப்பிட்ட பகுதியினருக்கு மட்டுமே உரித்தானதாக இருக்கிறதோ, அங்கு பாரம்பரியமும், சமூக சித்தாந்தமும், சமூகக் கண்ணோட்டமும் உடைபடாதவையாகவே இருக்கும். முதலாளிகளுக்கும் அடிமைகளுக்கும், சலுகை பெற்றவர்களுக்கும் சலுகை பெறாதவர்களுக்கும் இடையேயான வேறுபாடு - வடிவத்தில் மாறாததாகவும், சாரம்சத்தில் வலிமைமிக்கதாகவும் இருந்து வரும்.

ஆனால், அதேநேரம் ஆதிக்க வகுப்பினர், ஒரு மூடப்பட்ட காப்பிடம் போல் இல்லாமல், அவர்களுக்கும் மற்றவர்களுக்கும் இடையே சமூக ஒத்துணர்வு எங்கு நிலவுகிறதோ, அங்கு ஆதிக்க வகுப்பினர் பெரிதும் வளைந்து கொடுக்கக் கூடியவர்களாகவும், அவர்களது சித்தாந்தம், குறைந்த அளவு சமூக விரோதப் போக்குடையதாகவும் இருக்கும். இந்த வேறுபாடுகள் பற்றிய உண்மையை உணர்ந்து கொண்ட வெளிநாட்டினர், பிற நாடுகளில் ஆதிக்க வர்க்கத்தினரை ஒரு கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதற்கு, வெறும் வயதுவந்தோர் வாக்குரிமையே போதுமானதாக இருப்பதையும் - இந்தியாவில் வயதுவந்தோர் வாக்குரிமையால் அத்தகைய பலனை ஏற்படுத்த முடியாமல் போவதையும் காண்பார்கள்.

இதனால் சுதந்திர இந்தியாவை ஜனநாயகத்துக்குப் பெரிதும் பாதுகாப்பானதாக ஆக்கும் ஆர்வத்தில், அரசியலமைப்புச் சட்டத்தில் கூடுதல் பாதுகாப்புகளைக் கோரிவரும் தீண்டத்தகாத மக்களும், இந்தப் பாதுகாப்பை எதிர்த்து வருபவர்களும், சுதந்திர இந்தியாவை ஆதிக்க வகுப்பினர் கைகளில் தாரை வார்த்திட நினைக்கும் காங்கிரசை விடவும் - அதிக ஆதரவு பெற வெகுவாகத் தகுதியுடையவர்களாகின்றனர்...

ரத்தினச் சுருக்கமாகக் கூறினால், வகுப்பு சித்தாந்தம், வகுப்பு நலன்கள், வகுப்புப் பிரச்சினைகள், வகுப்பு மோதல்கள் இவற்றை அடிப்படையாகக் கொண்ட ஓர் அரசியல் இயக்கம் - தனக்கு சாவுமணி அடிக்கும் என்பதை ஆதிக்க வகுப்பு நன்கு உணர்ந்துள்ளது. அடிமை வகுப்புகளை திசைதிருப்புவதற்கும், அவற்றை ஏமாற்றுவதற்கும் மிகச் சிறந்த வழி - தேசிய உணர்வையும், தேச ஒற்றுமையையும் நன்கு பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்பதை ஆதிக்க வகுப்பு நன்கு அறியும். ஆதிக்க வகுப்பினருடைய நலன்களைப் பெரிதும் பயனுள்ள முறையில் பாதுகாப்பதற்கு ஒரே மேடை, காங்கிரஸ் மேடைதான் என்பதையும் அது தெரிந்து வைத்துள்ளது...



**❝ பணக்காரனுக்கும் ஏழைக்கும், பார்ப்பனருக்கும் பார்ப்பனர் அல்லாதவருக்கும், நிலப்பிரபுவுக்கும் குத்தகைக்குப் பயிர் செய்பவருக்கும், லேவாதேவிக்காரருக்கும் கடன்பட்டவருக்கும் இடையே உள்ள மோதல்களைப் பற்றிப் பேசுவது, ஆதிக்க வகுப்புக்குப் பிடிக்காத ஒன்று. காங்கிரஸ் மேடையில் தேசியத்தையும், தேச ஒற்றுமையையும் பற்றிதான் பிரச்சாரம் செய்ய முடியும். இதன் மேடையிலிருந்து தேசியத்துக்கு முரண்பாடான - வேறு எதையும் பிரச்சாரம் செய்ய முடியாது. இதைத்தான் ஆதிக்க வகுப்பு விரும்புகிறது. இதில்தான் அதன் பாதுகாப்பு முழுவதுமே அடங்கியுள்ளது. ❞**

*'டாக்டர் அம்பேத்கர் ஆங்கில நூல் தொகுப்பு' : 9 பக்கம் : 232*



படிப்பகம்

www.padippakam.com



தலித் முரசு

யாழன் ஆதி

தீராத தாகத்தின்
தவிப்புகளில் ஊற்றெடுக்கிறது
வாழ்க்கையின் வேட்கை

ஓடை புரண்டுவந்து
நனைத்த பாதங்கள் உலர்ந்து
அலைகின்றன வெப்ப நிலங்களில்

கழனிகளில் துள்ளிய
ஆரல் மீன்களைக் கொத்திய
கொக்குகள்
வெண்மேகங்களாகி திரிகின்றன
ஈரப்பதமற்ற காற்றின் திசைகளில்

கானல் மிதக்கும் தெருக்களில்
வாய்பிளந்து கிடக்கின்றன
நகரத்து குடங்கள்
வரப்போகும் தண்ணீர் லாரிக்காய்

மரம் வெட்டியும்
நிலம் உறிஞ்சியும் முடித்த
வாழ்க்கைக் குடங்கள்
நிரம்புகின்றன கண்ணீர்த் துளிகளால்



படிப்பகம்

www.padippakam.com




- தேசிய அவமானத்திற்கு எதிரான உரிமை மீட்பு மாநாடு — 7
- ஹோண்டா : உலகமயமாக்கல் சிந்த வைத்த ரத்தம் - **எஸ்.வி. ராஜதுரை** — 8
- செங்கல் சூளையில் வேகும் இருளர் வாழ்க்கை - **முருகப்பன்** — 10
- தலித் பிரச்சினை : புரிந்து கொள்ள மறுக்கும் அரசியல் தலைமைகள் - **சூரியதீபன்** — 12
- மவுனக் கொலைகள் - **என் .டி. ராஜ்குமார்** — 15
- பவுத்தப் புரட்சியாளர் 'தமிழன்' ஜி. அப்பாதுரையார் - **ஏபி.வள்ளிநாயகம்** — 16
- வரலாறாகும் வாழ்க்கை வீரஞ்செறிந்த மக்கள் - **பூங்குழலி** — 22
- தமிழ்த் தொன்மை மாயைகளை உடைத்த முதல் சிந்தனையாளர் - **இன்குலாப்** — 28
- பறை வெல்லும் - **கே. எஸ். முத்து** — 32
- சாதியை எதிர்ப்பதும் ஏகாதிபத்திய எதிர்ப்பே! - **ஆனந்த் தெல்தும்டே** — 36



- அட்டை வடிவமைப்பு : **யாக்கன்**
- இதழ் வடிவமைப்பு : **ஜெமிமா ஆலிஸ், பிரேமா**
- அலுவலக ஒருங்கிணைப்பு : **ஆர். ஜோன்ஸ், மு. ரமேஷ் குமார், சி. ராமன்**




படிப்பகம்

www.padippakam.com

தலித் முரசு

Volume : 2 Issue : 10

ஆகஸ்ட், 2005

9 - 7

•

ஆசிரியர்

புனித பாண்டியன்

ஆசிரியர் குழு

இளங்கோவன்

அழகிய பெரியவன்

யாக்கன்

காவ்யா

விழி.பா. இதயவேந்தன்

•

ஆண்டுக் கட்டணம் : ரூ.100/-
நூலகக் கட்டணம் : ரூ. 200/-
வாழ் நாள் கட்டணம் : ரூ.1000/-

•

தொடர்பு முகவரி

203, ஜெயம் பிரிவு - சித்ரா அடுக்ககம்
9, சூளைமேடு நெடுஞ்சாலை
சென்னை - 600 094

பேசி : 2374 54 73

E-mail : ambedkar@md4.vsnl.net.in

# 'முதல் உதவி' செய்க

''இன்றைய பத்திரிகைகள் செய்திகளுக்குப் பதில் பரபரப்பூட்டுதல், அறிவார்ந்த கருத்துரைகளின் இடத்தில் பகுத்தறிவுக்கு ஒவ்வாதவாறு உணர்வுகளைத் தூண்டிவிடுதல், கண்ணியமானவர்களின் சிந்தனையைத் தூண்டுவதற்குப் பதில், பொறுப்பற்ற வாசகர்களிடம் மனக்கிளர்ச்சியூட்டுதல் - இவற்றையே செய்கின்றன... பெருமைப்படத்தக்க சில விதிவிலக்குகள் இருப்பினும், அவை போன்ற பத்திரிகைகள் சிறிதளவே உள்ளன. மேலும், அவற்றின் குரல் எடுபடுவதில்லை.''

*- டாக்டர் அம்பேத்கர்*

பல ஆண்டுகளுக்கு முன்பே பத்திரிகைகள் குறித்து அம்பேத்கர் விடுத்த எச்சரிக்கை, இன்றளவும் நூற்றுக்கு நூறு பொருந்தி வருகிறது. அது மட்டுமல்ல, அவை கேவலத்திலிருந்து கழிசடைக்குச் சென்று கொண்டிருக்கின்றன. ஆனால், சமூகப் பொறுப்புணர்வுடனும், இதழியல் அறத்துடனும் மக்களிடையே விழிப்புணர்வை ஊட்டி - சமூக மாற்றத்திற்கு வித்திடும் பத்திரிகைகளின் குரல் எடுபடாதது மட்டுமல்ல; அவை விரைவில் காணாமலும் போகின்றன. சற்றேறக்குறைய இதே நிலையை அண்மைக்காலங்களாக 'தலித் முரசு'ம் சந்தித்து வருகிறது என்பதே உண்மை!

சென்ற இதழில் 'தலித் முரசு' எதிர்கொண்டிருக்கும் நிதி நெருக்கடி பற்றி குறிப்பிட்டிருந்தோம். இருப்பினும், இவ்விதழ் (103 ஆவது இதழ்) அச்சேறும் வரை - வாசகர்கள் மற்றும் ஆர்வலர்களிடமிருந்து எவ்வகையான உதவிகளும் வரவில்லை (விதிவிலக்குகள் உண்டு). தொல் தமிழர்களின் இதழியல் பாரம்பரியம் பற்றி சிலாகிப்போர் எண்ணிக்கை கூடியிருக்கிறது. ஆனால், இப்பாரம்பரியத்தைத் தக்க வைத்துக் கொள்ளப் போராடும் 'தலித் முரசின்' நெருக்கடி நிலை குறித்துப் பேச எவருமில்லை. தலித் அரசியலை முன்வைத்து வெளிவந்த வேறு எந்த இதழும் தொடர்ச்சியாக வெளிவந்து, ஒன்பது ஆண்டுகளைக் கடந்ததில்லை.

இந்திய அரசின் 'பத்திரிகை தகவல் மய்யம்' (Press Information Bureau) வெளியிட்டுள்ள பட்டியலின்படி, இந்தியா முழுவதும் 'சான்றளிக்கப்பட்ட பத்திரிகையாளர்'கள் (Accredited Journalists) 686 பேர் உள்ளனர். இருபது கோடி தலித்துகள் வாழும் இந்நாட்டில், சான்றளிக்கப்பட்ட ஒரு தலித் பத்திரிகையாளர்கூட இல்லை. இது, 1996 ஆம் ஆண்டு புள்ளிவிவரம் எனினும், இந்த எட்டு ஆண்டுகளில் எந்தத் தலைகீழ் மாற்றமும் ஏற்பட்டுவிடவில்லை. தற்பொழுதுள்ள மய்ய நீரோட்ட இதழ்களிலும், பத்திரிகை ஆசிரியராக எந்த தலித்தும் இல்லை என்று உறுதியாகக்கூற முடியும். இவ்வணிக ஏடுகளில், விரல்விட்டு எண்ணக்கூடிய அளவிலேயே தலித் பத்திரிகையாளர்கள் பணிபுரிகிறார்கள்.

அண்டவெளிக்கு அப்பாலுள்ள செய்திகளையும், உலகின் மூலைமுடுக்கில் நடக்கும் ரகசியங்களையும் அம்பலப்படுத்தும் ஏடுகள் - பத்திரிகைத் துறையில் தலித் பிரதிநிதித்துவம் முற்றாக மறுக்கப்பட்டிருப்பது குறித்து, ஒருவரிச் செய்திகூட வெளியிடுவதில்லை. 'தனியார் துறையில் இடஒதுக்கீடு வேண்டும்' என்ற கோரிக்கையை மட்டும் செய்தியாக்கும் ஏடுகள், தங்கள் இதழ்களில் மருந்துக்குக்கூட இடஒதுக்கீடு கடைப்பிடிக்கப்படாத சமூக அநீதி குறித்து முழு அமைதி காக்கின்றன. இதைத்தான் அம்பேத்கர், 'உண்மைகளை மறைப்பதற்கு, திட்டமிட்டுச் செய்யப்படும் கூட்டுச் சதி' - A Conspiracy of Silence என்று குறிப்பிட்டார்.

ஜனநாயகத்தின் நான்காவது தூணாகக் கருதப்படும் ஊடகங்கள், இன்றளவும் தீண்டாமையைக் கடைப்பிடிப்பதால்தான் - குரலற்றவர்களின் குரலாக 'தலித் முரசு' ஒலிக்கத் தொடங்கியது. அத்துடன் அது நின்றுவிடவில்லை. முப்பதுக்கும் மேற்பட்ட தலித் பத்திரிகையாளர்களையும் அது உருவாக்கி இருக்கிறது. கட்சி, அமைப்பு, இயக்கங்களைக் கடந்து - ஒரு சிந்தனைத் தளத்தை 'தலித் முரசு' உருவாக்கி இருக்கிறது. ஒரு மாற்று இதழுக்கான வெளியை, நம்பிக்கையை அது தமிழ்ச் சமூகத்தில் ஏற்படுத்தி இருப்பதை எளிதில் மறுத்துவிட முடியாது.

ஆனால், நடந்தது என்ன? முதல் ஆண்டு சந்தாதாரராக இருந்தவர், அதற்கடுத்த ஆண்டுகளில் சந்தாதாரராக இல்லை. ஒரு வாசகர் மற்றொருவரை சந்தாதாரராக மாற்றினாலே - தலித் முரசின் எண்ணிக்கை இருமடங்கு உயரும் என்று வலியுறுத்தினோம். இதற்குப் பலரும் செவிசாய்க்கவில்லை. ஆதலால், ஓராண்டு சந்தா செலுத்தியவர் அடுத்துவரும் ஆண்டுகளிலும் கண்டிப்பாக சந்தா செலுத்துங்கள் என்று நமது வேண்டுகோளையே மாற்ற வேண்டியிருக்கிறது. முகவர்கள், விற்பனைத் தொகையை நிலுவையின்றி செலுத்தினாலே - மூன்று மாத காலத்திற்கு இதழைக் கொண்டுவர முடியும்.

'தலித் முரசு' தொடர்ச்சியாக வெளிவர வேண்டும் எனில், வாசகர்களும் / ஆர்வலர்களும் - தங்களின் பங்களிப்பை விரைந்து செலுத்திட வேண்டும். முதல் கட்டமாக, ஒவ்வொரு மாவட்டத்திலும் (பத்துபேர் கொண்ட குழு) நூறு வாழ்நாள் உறுப்பினர்களைச் சேர்க்க முன்வாருங்கள். இதற்குரிய சந்தா புத்தகங்களை 'தலித் முரசு' அளிக்கும். அவசர சிகிச்சைப் பிரிவில் இருக்கும் தலித் முரசுக்கு 'முதல் உதவி' செய்யுங்கள். இதழ் தொடர்ந்து வெளிவருவது, உங்களுடைய ஆதரவைப் பொறுத்துதான் இருக்கிறது. •



படிப்பகம்

www.padippakam.com

# வாக்குமூலம்










அனைவரும் சமம் என்று அரசியல் சாசனம் கூறுகிறது. ஆனால், புராணங்களில் தலித்துகளை இழிவுபடுத்தும் வரிகள் இருப்பதை அனுமதிப்பது, இந்த உரிமையை மறுப்பதாக உள்ளது. இதன் மூலம் தீண்டாமை ஊக்குவிக்கப்படுவது போலாகிறது. எனவே, தலித்துகளை இழிவுபடுத்தும் வரிகளை நீக்கிவிட்டு, புராணங்களின் புதிய பதிப்புகள் வெளியிடப்பட வேண்டும். இந்த விஷயத்தில் சங்கராச்சாரி அவதேஷானந்தாவின் உதவியை நாடியுள்ளேன். பிற சங்கராச்சாரிகளையும் சந்தித்துப் பேச உள்ளேன்.

**சூரஜ்பான்,** தலைவர், பட்டியலின மக்கள் மற்றும் பழங்குடியினருக்கான தேசிய ஆணையம், டெல்லியில் செய்தியாளர்களிடையே

எங்கள் 'டாடா' நிறுவனம் மேற்கொண்ட ஆய்வு முடிவுகளின்படி, இந்தியாவில் 2012 ஆம் ஆண்டில் 40 கோடி பேர் வேலை தேடும் சூழ்நிலை உருவாகும். இதில் மத்திய, மாநில அரசு மற்றும் தனியார் நிறுவனங்களால் - ஆறு கோடி பேருக்கு மட்டுமே வேலைவாய்ப்பு அளிக்க முடியும் என்று கண்டறியப் பட்டுள்ளது. இந்தப் பிரச்சினைக்கு உடனடியாக தீர்வுகாணும் முயற்சிகளை இப்போதே தொடங்க வேண்டும்.

**கே.ஏ. சவுகார்,** டாடா நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர், சென்னையில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில்

தமிழ் நாட்டில் பகுத்தறிவுப் பிரச்சாரத்தை செய்யக்கூடிய அமைப்புகளாக, பெரியார் இயக்கங்கள் மட்டுமே இருக்கின்றன. மனித உரிமை அமைப்புகளானாலும், தலித் விடுதலை அமைப்புகளானாலும், இடதுசாரி அமைப்புகளானாலும் - மக்களிடம் மண்டிக்கிடக்கும் மூடநம்பிக்கைகளை எதிர்த்துப் பிரச்சாரம் செய்வதைத்தவிர்த்தே வருகின்றன. இது, வேதனையானஉண்மை. 'நேர்த்திக் கடனும்', 'வேண்டுதலும்' கடமை தவறாமல் நடத்தப்படும் சடங்குகளும் - தங்களது பிரச்சினைகளைத் தீர்த்துவிடும் என்ற நம்பிக்கையை உள்ளத்தில் பதிய வைத்துக் கொண்டுள்ள மக்கள், எப்படி சமூக மாற்றத்திற்கு அணிதிரளுவார்கள்? இந்த நம்பிக்கைகள் தகர்க்கப்படாதவரை, இயக்கங்களில் பங்கு பெறுவதும்கூட, மற்றொரு 'நேர்த்திக் கடன்' என்ற உளவியல்தானே அவர்களிடம் மேலோங்கி நிற்கும்?

**'புரட்சிப் பெரியார் முழக்கம்' (14.7.2005)** இதழின் தலையங்கத்திலிருந்து

பாரதிய ஜனதா கட்சி இனியும் ஒரு குடும்பமாக இருக்க முடியாது. அதற்கு பதில், தங்களைத் தாங்களே நியமித்துக் கொள்ளும் மேலாண்மை இயக்குநர்களைக் கொண்ட, ஒரு தனியார் கம்பெனியாக அது மாறிவிட்டது.

**மதன்லால் குரானா,** பா.ஜ.க. தலைவர், டெல்லியில் செய்தியாளர்களிடையே

சமூகத்தின் மூடப்பழக்க வழக்கங்களுக்கும், சாதி இழிவுகளுக்கும் எதிராக சுயமரியாதை இயக்கம் கண்டு - இறுதிவரை பணியாற்றியவர் பெரியார் ஈ.வெ. ராமசாமி. அவரது வாழ்வும் பணியும் சமூகத்தைச் சீர்திருத்துவதில் குறிப்பிடத்தக்க சாதனை படைத்துள்ளது. வகுப்புவாத சக்திகள், இந்திய நாட்டின் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றின. தேர்தலில் தோற்கடிக்கப்பட்ட பின்னரும் மீண்டும் ஆட்சியைப் பிடிக்க முயன்று வரும் காலத்தில், குறுகிய கண்ணோட்டத்துடன் உருவாகி வரும் - சாதிய அரசியலும், சமுதாய அமைப்புகளின் செயல்பாடுகளும் மோசமான விளைவுகளை ஏற்படுத்தி வருகின்றன. இந்நிலையில், சாதி மறுப்பில் உறுதி கொள்வதும், உணர்வு பெறுவதும், விழிப்புணர்வு ஊட்டுவதும் அவசியத் தேவையாகியுள்ளன. இதனை நிறைவேற்றும் வகையில், எதிர்வரும் செப்டம்பர் 17 பெரியார் பிறந்த நாளை - சாதி மறுப்பு எழுச்சி நாளாகக் கடைப்பிடிக்க வேண்டும்.

**இந்திய கம்யூனிஸ்ட் கட்சி - 19.7.2005** அன்று நடைபெற்ற ஈரோடு மாவட்டக் குழு கூட்டத்தில் நிறைவேற்றிய தீர்மானம்



படிப்பகம்

www.padippakam.com

## தேசிய அவமானத்திற்கு எதிரான

# உரிமை மீட்பு மாநாடு



இந்திய அரசமைப்புச் சட்டத்திற்கு சவால் விடும் - பாப்பாபட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம் மற்றும் கொட்டகாச்சியேந்தல் ஊராட்சிகளில் தலித் மக்களின் ஜனநாயக உரிமையை, ஊர்க்கட்டுப்பாடு என்ற பெயரில் தட்டிப் பறிக்கும் ஆதிக்கச் சக்திகளை, வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் உடனடியாக கைது செய்ய வேண்டும் என்ற தீர்மானத்தை முன்வைத்து - 'தலித் ஜனநாயக உரிமை மீட்பு மாநாடு' 16.7.05 அன்று மதுரையில் 'நீதியரசர் கிருஷ்ணய்யர் அரங்கத்தில்' நடைபெற்றது.

இம்மாநாட்டில், ஆ. குருவிஜயன் - புரட்சி வேங்கைகள், த. பாண்டியன், பூ. சந்திரபோசு - தியாகி இம்மானுவேல் சேகரன் பேரவை, பெ. மணியரசன் - தமிழ்த் தேசிய முன்னணி, பழ. நீலவேந்தன் - ஆதித் தமிழர் பேரவை, கலைவாணன் - விடுதலைச் சிறுத்தைகள், சங்கர் - தந்தை பெரியார் திராவிடர் கழகம், பாஸ்கர் - புதிய தமிழகம், வழக்குரைஞர் ரஜினி, ராதாகிருஷ்ணன் - சி.பி.அய்., சி. பாலசுந்தரம் - இந்திய கம்யூனிஸ்ட்டு (மாவோ) மற்றும் பலர் பங்கேற்று கண்டன உரை நிகழ்த்தினர்.

பாப்பாபட்டி, கீரிப்பட்டி, நாட்டார் மங்கலம் ஆகிய மூன்று ஊராட்சிகளும் உசிலம்பட்டி வட்டத்தில் உள்ளன. தலித் தலைவர்கள் இவ்விடத்தில் தங்கள் இயக்க நிகழ்ச்சிகளில் பங்கேற்க - ஆதிக்க சாதியினர் அனுமதிப்பதில்லை. தலித் மக்கள் மீது இழைக்கப்படும் குற்றங்கள் கொலைக் குற்றங்களாயினும், காவல் நிலையங்களில் வழக்குப் பதிவு செய்வதில்லை. வருவாய்த்துறை அதிகாரிகள் இப்பிரச்சினையைக் கண்டுகொள்வதில்லை. மேலும், 58 ஆண்டுகளாக சுதந்திரம் பெற்ற இந்த நாட்டில், கவண்டம்பட்டி என்ற கிராமத்தில் தலித்துகள் செருப்புப் போட்டு நடக்க அனுமதி இல்லை. தேநீர்க் கடைகளில் இரட்டைக்குவளை முறை இன்னும் நடைமுறையில் உள்ளது.

இந்த அநீதிகளுக்கு எதிராக அரசியல் கட்சிகள் அமைதி காப்பது, அமைதியான ஒத்துழைப்பேயன்றி வேறில்லை. எனவே, அரசியல் சட்டத்தையும் - நிர்வாக எந்திரத்தையும் முறைப்படி இயங்க வைக்க, ஆகஸ்ட் 15 முதல் மதுரையிலிருந்து உசிலம்பட்டி நோக்கி தீண்டாமை எதிர்ப்புப் பயணம் மேற்கொள்வது என இம்மாநாட்டில் பிரகடனப்படுத்தப்பட்டது. 'சித்திரவதைக்கு எதிரானப் பிரச்சாரக் குழு' தலைவர் சி.கே. ராசன் தலைமையில் செல்லும் இப்பயணத்தில், தலித், இடதுசாரி, தமிழ்த்தேசிய, பெரியார் இயக்கங்கள் பங்கேற்க உள்ளன.

இம்மாநாட்டில், கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:

- உசிலை நகராட்சியில் உள்ள கவண்டம்பட்டியில், செருப்புப் போட்டுச் செல்ல அனுமதி மறுத்ததை எதிர்த்துக் கேட்டதின் விளைவாக - குடிநீர் மற்றும் கழிப்பறை வசதிகள்கூட இல்லாமல் துன்புறும் தலித் மக்களுக்கு, அடிப்படை வசதிகள் செய்துதர - அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அதே போல் தலித் மக்களுக்கான வேலைவாய்ப்புகளை உருவாக்க, அரசு உறுதியான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.
- ஒன்பது ஆண்டுகளாக 19 முறை உள்ளாட்சித் தேர்தல் நடத்தியும், ஊராட்சித் தலைவர் பதவி காலியாக இருக்கும் - நான்கு ஊராட்சிகளிலும் உடனடியாகத் தேர்தல் நடத்தி, ஊராட்சித் தலைவர்கள் பதவியை தமிழக அரசு உறுதிப்படுத்த வேண்டும். அடுத்த பத்து ஆண்டுகள் பதவிக் காலம் முடிந்த பிறகே இது மாற்றப்பட வேண்டும்.
- வாடிப்பட்டி வட்டம் - காடுபட்டியில் தலித் மக்களின் வீடுகளைத் தாக்கி, காடுபட்டி காவல் நிலையத்திலேயே தலித் மக்களைத் தாக்கிய சாதி வெறியர்களைத் தண்டிப்பதுடன் - அவர்களுக்குத் துணைபோகும் அதிகாரிகள் மீது வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டும். உள்ளூரில் வேலைவாய்ப்பளிக்கும் மற்ற சமூகத்தினரை அச்சுறுத்தியும், ஊர்க் கட்டுப்பாடு விதித்தும், ஆதிக்கம் செய்யும் சாதி வெறியர்களைக் கைது செய்ய வேண்டும் என்று இம்மாநாடு கோருகின்றது.
- பேரையூர் காவல்நிலையத்தில் அடித்துக் கொலை செய்யப்பட்ட அன்னக்கொடியின் குடும்பத்திற்கு - உரிய நிவாரண நிதியும், அவரது மனைவிக்கு அரசுப் பணியும் வழங்கிட வேண்டும் என இம்மாநாடு கோருகின்றது.
- சாதிவெறியால் இழிவுபடுத்தப்பட்டு, தற்கொலைக்குத் தள்ளப்பட்ட கோவை - நாகம நாயக்கன்பாளையம் சம்பத் சாவுக்குக் காரணமான 'கல்யாண் டெக்ஸ்டைல் மில்' உரிமையாளர் சண்முக (கவுண்டர்) மீது வழக்குப் பதிவு செய்யாமல் சாதிவெறிக்குத் துணை நின்றதுடன் இழிவாக நடத்திய கோவை - சூலூர் காவல் நிலைய ஆய்வாளர் சுப்பிரமணியத்தையும் - வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்து உடனடியாகக் கைது செய்ய வேண்டும். சம்பத் குடும்பத்திற்கு உரிய நிவாரணமும், அவரது மனைவிக்கு அரசு வேலையும் உடனடியாக வழங்க வேண்டும் என இம்மாநாடு கோருகின்றது.

> **“58 ஆண்டுகளாக சுதந்திரம் பெற்ற இந்த நாட்டில், கவண்டம்பட்டி என்ற கிராமத்தில் தலித்துகள், செருப்புப் போட்டு நடக்க அனுமதி இல்லை. ஆகஸ்ட் 15 முதல் மதுரையிலிருந்து உசிலம்பட்டி நோக்கி - தீண்டாமை எதிர்ப்புப் பயணம் மேற்கொள்வது என இம்மாநாட்டில் பிரகடனப்படுத்தப்பட்டது.”**



படிப்பகம்

www.padippakam.com



# ஹோண்டா : உலகமயமாக்கல் சிந்த வைத்த ரத்தம்

எஸ்.வி. ராஜதுரை

'உலகமயமாக்கல்' என்னும் சொல் இன்று பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது. எனினும், அது எல்லாருக்குமே ஒரே அர்த்தத்தைத் தருவதில்லை. ஹோண்டாய் காரைப் பயன்படுத்துகிறவர்களுக்கு - அது 'உலகமயமாக்கலால்' கிடைத்த சொகுசாகத் தெரியலாம். ஆனால், நிர்வாகத்தினரின் ஒடுக்குமுறைக்கும் சுரண்டலுக்கும் எதிராகப் போராடி 25.7.2005 அன்று, டெல்லிக்கு அருகில் உள்ள குர்கவோன் நகரில் ஹரியானா காவல் துறையினரால் கொடூரமாகத் தாக்கப்பட்ட 'ஹோண்டா' - இரு சக்கர வண்டிகள் உற்பத்தித் தொழிற்சாலைத் தொழிலாளிகள் சிந்திய ரத்தம் - 'உலகமயமாக்கல்' என்பது, உலக முதலாளியத்தின் ஒடுக்குமுறையின், சுரண்டலின் மற்றொரு வடிவம் என்பதை இந்தியாவிலுள்ள அனைத்து உழைக்கும் மக்களுக்கும் எடுத்துக்காட்டியுள்ளது.

> **“ குர்கவோன் நகரம், உலக முதலாளியம் நடைமுறைப் படுத்தும் தாராளவாதப் பொருளாதாரக் கொள்கையின், இந்தியப் பெருமுதலாளி வர்க்கத்தினதும், இந்திய அரசினதும் தரகுத்தன்மையின் தீய விளைவுகளுக்கான எடுத்துக் காட்டாக விளங்குகிறது. ”**

குர்கவோன் நகரம், உலக முதலாளியம் நடைமுறைப்படுத்தும் தாராளவாதப் பொருளாதாரக் கொள்கையின், இந்தியப் பெருமுதலாளி வர்க்கத்தினதும், இந்திய அரசினதும் தரகுத்தன்மையின் தீய விளைவுகளுக்கான எடுத்துக்காட்டாக விளங்குகிறது. இந்த நகரில் அமைந்துள்ள சிறப்புப் பொருளாதார வளையத்தில் (Special Economic Zone) உள்ளடங்கியவையும், பெரிதும் வெளிநாட்டு முதலீட்டுடன் இயங்கி வருபவையுமான பல்வேறு தொழிற்சாலைகள் - தொழிலாளர் உரிமைகளையும் பாதுகாப்பையும் உத்திரவாதம் செய்யும் இந்தியச் சட்டங்களிலிருந்து விதிவிலக்குப் பெற்றுள்ளன.

அமெரிக்க - அய்ரோப்பியப் பன்னாட்டு நிறுவனங்களோடு இணைந்து, உலக மக்களைச் சுரண்டிவரும் ஜப்பானியப் பன்னாட்டு நிறுவனமான ஹோண்டா நகரத்தில் அமைந்துள்ள தொழிற்சாலையில், இங்குள்ள பிற தொழிற்சாலைகளைப் போலவே, தொழிற்சங்கம் அமைக்கும் உரிமை தொழிலாளர்களுக்குக் கிடையாது.

வேலை நேரத்தில் சிறுநீர் கழிக்க கழிப்பறைக்குச் செல்வதற்குக்கூட, எழுத்து மூலமாகவே விண்ணப்பிக்க வேண்டும். வெளிநாட்டு மூலதனத்தைக் 'கவர்வதற்கான' இந்திய அரசின் பொருளாதாரக் கொள்கை, உழைக்கும் மக்கள் எதிர்ப்பேதுமின்றி சுரண்டலுக்கு சம்மதிக்க வேண்டுமென்பதற்காகச் செய்துள்ள இந்த ஏற்பாட்டை ஒப்புக் கொள்ள மறுத்து போராடத் தொடங்கிய ஹோண்டா தொழிற்சாலைத் தொழிலாளிகள் அனைவரையும் - 26.6.2005 அன்று ஆலை நிர்வாகம் தொழிற்சாலைக்குள் நுழைய விடாமல் ஆலைக் கதவுகளைப் பூட்டி வைத்தது. சரியான நாளைத்தான் முதலாளிகள் தேர்ந்தெடுத்திருக்கின்றனர்! அது, இந்திரா காந்தி பிறப்பித்த அவசர நிலையின் 30ஆம் ஆண்டு நிறைவு நாள். போராடிய தொழிலாளர்களில் நால்வரை நிரந்தர வேலை நீக்கம் செய்ததுடன், 50 தொழிலாளர்களைப் பணி இடை நீக்கம் செய்தது ஆலை நிர்வாகம்.

இவர்கள் அனைவரையும் திரும்பவும் வேலைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும்; தமது தொழிற்சங்கத்திற்கு அங்கீகாரம் வழங்க வேண்டும் என்ற கோரிக்கைகளுடன் ஹரியானா மாநிலத்தின் குட்டித் தலைமையகம் என்றழைக்கப்படும் இடத்தில் போராடக் குவிந்த தொழிலாளர்கள் மீது - 'மதச்சார்பற்ற' காங்கிரஸ் ஆட்சி நடத்தும் ஹரியானா மாநிலக் காவல்துறை, கண்மூடித்தனமான தாக்குதல் நடத்தி, நூற்றுக்கணக்கானோரைப் படுகாயப்படுத்தியது. மேலும், நூற்றுக்கணக்கானோரைக் கைது செய்துள்ளது.

தாக்குதலில் மரணமடைந்த தொழிலாளியொருவர் அந்த சம்பவம் நடை



படிப்பகம்

www.padippakam.com

பெறுவதற்கு ஒரு நாள் முன்னதாகவே இயற்கை மரணமடைந்து விட்டதாக அறிவித்தார், அந்த மாநிலத் தலைமைச் செயலாளர். இந்தக் கொடிய ஒடுக்கு முறைக்கு அஞ்சாத தொழிலாளிகளும் அவர்கள் குடும்பத்தினரும் - குறிப்பாகப் பெண்கள் வெளிப்படுத்தி வரும் போர்க்குணம், சுரண்டும் வர்க்கங்களுக்கும் அவர்களின் காப்பரண்களான மத்திய, மாநில அரசாங்கங்களுக்கும் கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளன.

வழக்கம் போலவே பா.ஜ.க. முதல் தி.மு.க. வரை, எல்லா எதிர்க்கட்சிகளும் தமது ஓநாய், முதலைக் கண்ணீர் மடைகளை சில நிமிடங்கள் திறந்து விட்டன. அ.தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள், தேவையற்ற இந்த வேலையைத் தவிர்த்துக் கொண்டு 'மன்னரைவிட அதிக விசுவாசிகளாகக்' காட்டிக் கொண்டனர். இந்த நிகழ்ச்சிக்கு சோனியா காந்தியும் மன்மோகன் சிங்கும் 'வருத்தம்' தெரிவிப்பதாகக் கூற, உள்துறை அமைச்சர் சிவராஜ் பாட்டிலோ - காவல் துறையினரின் நடவடிக்கையை முற்றாக நியாயப்படுத்தினார்.

ஒரு நாட்டின் உள்விவகாரங்களில் வெளிநாட்டுத் தூதர்கள் தலையிடக் கூடாது என்னும் மரபை மீறி டெல்லியிலுள்ள ஜப்பானியத் தூதர், ஹோண்டா தொழிற்சாலைத் தொழிலாளர்களின் போராட்டம், வெளிநாட்டு மூலதனம் இந்தியாவிற்குத் தாராளமாக வருவதற்கு உகந்த சூழலைப் பாதிக்கும் என்றும், அது இந்தியாவின் 'இமேஜை'க் கெடுக்கும் என்றும் கூறினார். இந்திய வெளியுறவு அமைச்சகத்தைச் சேர்ந்த உயரதிகாரிகள் விரைந்து வந்து, 'வெளிநாட்டு முதலீட்டாளர்கள் கவலைப்படவோ - அஞ்சவோ தேவையில்லை, அவர்களுடைய சட்டரீதியான நலன்கள் பாதுகாக்கப்படும் என்றும் வாக்குறுதியளித்தனர்.

**“ கொடிய ஒடுக்குமுறைக்கு அஞ்சாத தொழிலாளிகளும் அவர்கள் குடும்பத்தினரும் - குறிப்பாகப் பெண்கள் வெளிப்படுத்தி வரும் போர்க்குணம், சுரண்டும் வர்க்கங்களுக்கும் அவர்களின் காப்பரண்களான மத்திய, மாநில அரசாங்கங்களுக்கும் கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. ”**



காவல் துறையின் விலங்காண்டித் தனத்தை எதிர்க்கும் பெண்கள்

மன்மோகன் சிங்கை சந்தித்துப் பேசியும், நாடாளுமன்றக் கூட்டத்திலிருந்து வெளியேறியும் - 26.7.2005 அன்று ஹரியானா மாநிலம் தழுவிய 'பந்த்' நடத்தியும், இந்தியாவின் பல்வேறு நகரங்களில் ஆர்ப்பாட்டங்களை நடத்தியுள்ள நாடாளுமன்ற இடதுசாரிகள், ஹரியானா முதலமைச்சர் பதவி விலக வேண்டும் என்னும் கோரிக்கையையும் விடுத்துள்ளனர். அவரோ ஒரு நீதி விசாரணைக்கு உத்தரவிட்டுவிட்டு, வழக்கமான அலுவல்களை நிம்மதியாகப் பார்த்துக் கொண்டிருக்கிறார்.

இடதுசாரிகளின் ஆட்சியிலுள்ள மேற்கு வங்க சட்டமன்றமும் ஹரியானா அரசாங்கத்தின் 'அரசு பயங்கரவாதத்தை' (இந்த சொற் பிரயோகங்களை அது பயன்படுத்தவில்லைதான்) கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. ஆனால், மேற்கு வங்கத் தொழிற்துறை அமைச்சர் நிருபம் சென், ''தொழில் உறவுகளில் ஜப்பானியர் கடைப்பிடித்து வந்துள்ள 'மரபினை' பாராட்டியுள்ளதுடன், ஜப்பானியர்கள் கவலைப்படத் தேவையில்லை; குர்கவோனில் நடந்தது மேற்கு வங்கத்தில் ஒருபோதும் நடைபெறாது'' என்றும் கூறியிருக்கிறார். வெளிநாட்டு முதலீடுகளுக்குக் குந்தகம் எதும் ஏற்படா வண்ணம் தொழில் அமைதியை உத்திரவாதம் செய்வதில் கண்ணும் கருத்துமாக இருக்கும் இடதுசாரிகளின் ஆட்சியிலுள்ள மேற்கு வங்கம்தான் - ஜப்பானிய மூலதனத்திற்கான முதன்மையான இலக்காக விளங்குகிறது என்பது குறிப்பிடத்தக்கது. ●





நான், 'தலித் முரசு' ஆண்டு / வாழ்நாள் கட்டணம் செலுத்துகிறேன்

தலித் முரசு

பெயர் ....................................................

முகவரி ....................................................

....................................................

....................................................

....................................................

பவுத்தம் ஏற்போம்
இந்து மதம் மாய்ப்போம்

ஆண்டுக் கட்டணம் : ரூ. 100
வாழ்நாள் கட்டணம் : ரூ. 1,000

பணவிடை, கேட்போலை அனுப்புவோர்
DR. AMBEDKAR CENTRE
என்ற பெயருக்கு அனுப்பவும்.




படிப்பகம்

www.padippakam.com

■ முருகப்பன்

# செங்கல் சூளையில் வேகும் இருளர் வாழ்க்கை

குறைந்து வரும் மக்கள் தொகை, அறிவியல் கண்டுபிடிப்புகளை பயன்படுத்தாமல் பாரம்பரிய முறையில் விவசாயம் செய்வது, கல்வியில் மிகவும் பின்தங்கிய நிலை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு - பழங்குடி இனங்களில் மிகவும் பின்தங்கிய பழங்குடிகள் என்று சில இனங்களை அண்மையில் மத்திய அரசு வரையறுத்துள்ளது. இப்பட்டியலில் தமிழகத்தில் உள்ள விழுப்புரம், கடலூர், திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களில் உள்ள இருளர் இனமும் அடங்கும். இந்த இருளர்கள் ஊருக்கு ஒன்று, இரண்டு அல்லது மிகச் சிறிய எண்ணிக்கையில் கிராமங்களில் ஏரி, குளக்கரைகளில் குடிசை போட்டு வாழ்ந்து வருகின்றனர்.

பாம்பு, எலி, முயல் பிடிப்பது, தோப்புகளில் காவல் காப்பது, கூலி வேலை செய்வது போன்றவைதான் இவர்களுடைய அன்றாட வாழ்க்கையாக இருக்கிறது. இன்று இந்த வேலைகளுக்ும் நெருக்கடி வந்த நிலைகளில் பெரும்பாலான இருளர்கள் குடும்பத்துடன் - சென்னை, திருச்சி, சேலம், ஈரோடு ஆகிய பகுதிகளுக்கு செங்கற்சூளைகளில் செங்கல் அறுக்கின்ற வேலைக்குச் சென்று விடுகிறார்கள். கிராமங்களில் ஒருசில குடும்பங்களே வாழ்வதால், மிகவும் பாதுகாப்பற்ற சூழலிலேயே வாழ்ந்து வருகின்றனர்.

விழுப்புரம் அருகே உள்ள போரூர் கிராமத்தைச் சேர்ந்த பழங்குடி இருளரான 40 வயதாகும் முருகன் என்பவர், தன் மனைவி பொன்னி, மகன்கள் மணிகண்டன் (12), மணிவேல் (7), சக்திவேல் (3), சூர்யா (2) மற்றும் 9 மாத கைக்குழந்தையுடன் திருச்சி அருகே அன்பில் கிராமத்திலுள்ள காவேரி செங்கற்சூளையில் குடும்பத்தோடு போய் தங்கியிருந்து செங்கல் அறுத்து வந்தானர். முருகன், அவர் மனைவி, அவருடைய 12 வயது மகன் மூவரும் சேர்ந்து ஒன்றரை ஜதை. இரண்டு பேர் சேர்ந்த 1 ஜதை, ஒரு நாளைக்கு ஆயிரம் செங்கல் அறுக்க வேண்டும். முருகன் தன்னுடைய உறவினர்களில் இருந்து 10 ஜதைகளுக்கு முன் பணம் வாங்கிக் கொடுத்து அவர்கள் எல்லாம் சேர்ந்து, கடந்த நவம்பர் மாதம் முதல் அந்த செங்கற்சூளையில் வேலை செய்து வந்தார்கள். இந்த இருளர்கள் இல்லாமல் வேறு 10 ஜதைகளும் அங்கே வேலை செய்து வந்தனர்.

இவர்களுடைய மேஸ்திரி சிவக்குமார் என்பவர், சென்னைக்கு அருகில் வேறுசில செங்கற்சூளைக்கும் மேஸ்திரியாக இருப்பதால், இங்கு எப்போதாவது ஒருமுறைதான் வருவார். இவருடைய மகன் முருகன் என்பவர்தான் இந்த செங்கற் சூளைக்கு வந்து, இவர்களை அவ்வப்போது மேற்பார்வை செய்வார். இவர் இல்லாத நேரத்தில் அதே சூளையில் செங்கல் அறுத்துவரும் கோவிந்தன், சங்கர், கண்ணன் ஆகியோர் - மேற்கண்ட இருளர்கள் எங்கு சென்றாலும் பின் தொடர்ந்து சென்று கண்காணித்து மிரட்டுவார்கள். இவர்கள் மூவரும் கவுண்டர் சாதியை சேர்ந்தவர்கள்.

இவர்களை ஊரில் இருந்து அழைத்து வரும்போது, 1000 செங்கல்லுக்கு 200 ரூபாய் சம்பளம் என்று கூறி, இங்கு வந்து 180 ரூபாய் மட்டுமே தந்துள்ளார்கள். அதுவும் தினமும் அறுக்கின்ற 1000 செங்கற்களுக்கு 950 மட்டுமே அறுத்ததாக கணக்கு வைத்துக் கொண்டுள்ளார்கள். மீதி 50 செங்கல்லை அந்த மேஸ்திரிகள் மூவரும் தங்கள் கணக்கில் வைத்துக் கொண்டனர். இவர்கள் தினமும் அறுக்கின்ற செங்கலை கணக்குக் காட்டுவதில்லை. ஒவ்வொரு வாரமும் செவ்வாய் கிழமை மாலை சம்பளம் தருவார்கள். அப்போது மேஸ்திரியின் கையாளாக இருக்கின்ற அந்த மூவரும் தருகின்ற சம்பளம்தான் இவர்களுக்கு.

சம்பளம் வாங்குகின்ற இந்த செவ்வாய் கிழமை மட்டும்தான் - இவர்கள் ஒவ்வொரு வாரமும் வெளியில் சென்று சமையலுக்கு அரிசி, பருப்பு, எண்ணெய் போன்றவைகளை வாங்கி வரமுடியும். அப்போதும் அந்த மூவரும் இவர்களைப் பின் தொடர்ந்து செல்வார்கள். அதுவும் சரியாக 2 மணி நேரம் மட்டுமே. உடனே சூளைக்குத் திரும்ப வேண்டும். மற்ற நாட்களில் என்ன தேவை என்றாலும் இவர்களால் செங்கல் சூளையைவிட்டு வெளியே செல்ல முடியாது. மீண்டும் அடுத்த செவ்வாய் கிழமைதான். இப்படித்தான் பெரும்பாலான இருளர்களின் வாழ்க்கை செங்கல் சூளையில் வேகிறது.

கடந்த பிப்ரவரி மாதம் ராஜேந்திரன் (ஒன்றரை ஜதை), ஏப்ரல் மாதம் குமார் (இரண்டரை ஜதை) ஆகிய இருவரும் உடல் நிலை சரியில்லாத தங்கள் மனைவிகளை கவனிக்க செங்கல் சூளையை விட்டுச் சென்றுவிட்டார்கள். செங்கல் சூளைக்கு வந்த மேஸ்திரி சிவக்குமார் முருகனை அழைத்து, ஓடிப்போன ஜதைக்கெல்லாம் நீதான் பொறுப்பு என்று கடுமையாக மிரட்டியுள்ளார். அதற்கு






பயந்து, ஒரு வாரத்திற்குள் எல்லோரையும் கூட்டி வருகிறேன் என்று முருகன் கூறியுள்ளார். இதற்கு அடுத்து வந்த செவ்வாய் கிழமை (21.6.2005) மாலை அந்த வார சம்பளம் கொடுக்கப்பட்டது. முருகனின் அண்ணி ரஞ்சிதம் குடும்பத்தினர் (இரண்டு ஜதை) ஆரம்பத்தில் முன்பணம் வாங்கிக் கொண்டு வராமலிருக்கின்ற மணியை அழைத்து வருவதாக கூறிச் சென்றனர். இதனையறிந்த கோவிந்தன், சங்கர், கண்ணன் மூவரும் முருகனை அன்பில் கிராமத்திற்கு அழைத்துச் சென்று மிரட்டி, கட்டாயப்படுத்தி பிராந்தி குடிக்க வைத்துள்ளனர்.

அவர்களும் குடித்துவிட்டு, ''ஏற்கனவே 4 ஜதை போயிடுச்சி; இப்போ உன் அண்ணியும் இரண்டு ஜதையோடு போயிட்டா. எல்லாம் நீதான் திட்டமிட்டு வேறு சேம்பர்ல அனுப்பிட்ட. எங்க இருக்காங்க சொல்லு'' என்று அடித்துள்ளனர். செங்கல் சூளைக்கு இழுத்து வந்தும் அடித்து



படிப்பகம்

www.padippakam.com

சித்திரவதை செய்துள்ளனர். இதனை தடுத்த முருகனின் மனைவி பொன்னியையும் மேற்படி மூவரும் அடித்துள்ளனர். இதைத் தடுத்த அவர் மனைவி பொன்னியின் சேலையை கண்ணன் உருவியுள்ளார். கத்திய பொன்னியை - 'ஏண்டி கத்துற' எனக் கூறிக் கொண்டே கோவிந்தன் பெரிய தடியால் அடித்ததில் பொன்னி மயக்கமடைந்திருக்கிறார்.

அதன் பிறகு, மூவரும் மீண்டும் குடித்துவிட்டு கண்ணன், கோவிந்தன் இருவரும் சூளையில் இருந்த நெருப்பில் நன்றாகப் பழுத்திருந்த கம்பியுடன் முருகனை அடைத்து வைத்திருந்த கொட்டகைக்குள் நுழைந்து, முதலில் கோவிந்தன், ''ஜதைகளை எந்த சேம்பரில் விட்டுவச்சிருக்க சொல்லுடா'' என்று கூறிக் கொண்டு முருகனின் வலது முழங்களில் நான்கு இடங்களில் சூடு வைத்தார். வலிதாங்க முடியாமல் முருகன் அலறியுள்ளார். அதன்பிறகு கண்ணன், ''இப்போதாவது உண்மையைச் சொல்லு'' என்று கூறிக் கொண்டே முருகனின் இடது தொடையில் சூடு வைத்து, முருகனையும் அவரது பிள்ளைகளையும் அதே கொட்டகையில் வைத்துப் பூட்டி உள்ளார். அன்று இரவு 3 மணியளவில் முருகன், மனைவி, பிள்ளைகளுடன் அங்கிருந்து தப்பித்துச் செல்லும்போது மீண்டும் பிடித்துக் கொண்டு வந்துள்ளார்கள். அதன்பிறகு முருகனின் மகன்களான மணிகண்டனை கண்ணனும், மணிவேலை கோவிந்தனும் தங்கள் வீடுகளில் பிடித்து வைத்துக் கொண்டனர்.

இதற்குப் பிறகு, தாங்களாவது உயிரோடு தப்பித்தால் போதும் என வேறு வழியில்லாமல், மறுநாள் 22.6.2005 அன்று முருகன், பொன்னி, மூன்று சின்னக் குழந்தைகளுடன் தப்பித்து, படுகை என்கிற கிராமத்தில் அன்பழகன் வீட்டில் தங்கியுள்ளனர். அவரிடம் தங்களுடைய இரு மகன்களையும் மீட்டுத் தரும்படி கேட்டுள்ளனர். அவரும் விரைவில் மீட்டுத் தருவதாகக் கூறியதை அடுத்து, அங்கேயே தங்கி முருகனின் சூடுபட்ட காயம் கொஞ்சம் ஆறும் வரையிலும், தங்களுடைய மகன்கள் கிடைத்துவிடுவார்கள் என்ற நம்பிக்கையுடனும், பொன்னி அவர் வீட்டில் விவசாய வேலைகள் செய்து வந்தார்.

அதன்பிறகு, விசாரித்ததில் அவர்களுடைய மகன்கள் செங்கல் சூளையில் இல்லை என்பதை அறிந்து, 'பழங்குடி இருளர் பாதுகாப்புச் சங்க' ஒருங்கிணைப்பாளரான பேராசிரியர் பா. கல்யாணியை திண்டிவனத்தில் சந்தித்து நடந்ததை கூறியுள்ளனர். அதன் பிறகு பேராசிரியர் பா. கல்யாணி முன்முயற்சியில், திருச்சி வழக்குரைஞர் அலெக்ஸ் உதவியுடன், திருச்சி மாவட்ட ஆட்சியர், காவல் கண்காணிப்பாளர் ஆகியோருக்கு நேரில் புகார் தரப்பட்டு, குழந்தைகள் இருவரும் மீட்கப்பட்டு, 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

செங்கல் சூளைகளில் கொத்தடிமைகளாகவும், சூடு போடப்பட்டும், சித்திரவதை செய்யப்பட்டும், தன் மனைவி மானபங்கப்படுத்தப்பட்டும், இரு மகன்களின் நிலை என்ன எனத் தெரியாமல் அவர்களைப் பிரிந்தும் ஒரு மாதமாக - இந்த இருளர்கள் அனுபவித்த கொடுமைகளுக்கு இவர்களின் அறியாமை மட்டுமா காரணம்? இக்கட்டுரையை எழுதிக் கொண்டிருக்கின்ற இன்றும் (26.7.2005) விழுப்புரம் மாவட்டம் பாப்பனப்பட்டு கிராமம் மாரி என்கிற இருளர், தன் மனைவி, உறவினர்களுடன் செங்கல் சூளையில் பாதிக்கப்பட்டது தொடர்பாக, பழங்குடி இருளர் பாதுகாப்பு சங்கத்தை அணுகியுள்ளார்.

இதுகுறித்து பேராசிரியர் பா. கல்யாணியிடம் கேட்ட போது, ''நாங்கள் சங்கம் தொடங்கிய முதல் மூன்று ஆண்டுகளுக்கும் சேர்த்தே எங்களுக்கு மொத்தம் 17 புகார்கள்தான் வந்தன. ஆனால், 2004 ஆம் ஆண்டு மட்டும் மொத்தம் 19 புகார்கள் வந்தன. தற்பொழுது 2005 ஆம் ஆண்டு சூலை மாதம் வரை, மொத்தம் 21 புகார்கள் வந்துள்ளன. இதில் 8 வழக்குகள் செங்கற்சூளையில் இருளர்கள் சித்திரவதை செய்யப்பட்ட வழக்குகளாக உள்ளன. சங்கம் தொடங்கிய 10 ஆண்டுகளில், இதுவரை ஒன்று, இரண்டு என வந்தது செங்கற்சூளை வழக்கு; மற்றவை எல்லாம் சாதி இந்துக்களாலும், காவல் துறையினராலும் பாதிக்கப்பட்ட வழக்காகவே இருந்தது'' என்று கூறினார்.

மேலும், ''பழங்குடி இருளர்கள் மீது சாதி இந்துக்களின் தாக்குதல்கள், பொய் வழக்குகள், பாலியல் வன்முறைகள், கொலைகள், உழைப்புச் சுரண்டல், அடிப்படை உரிமைகளை மறுத்தல் போன்ற கொடுமைகள் தொடர்கின்றன. இந்த இனத்தின் எழுத்தறிவு வெறும் 12 சதவிகிதம் மட்டும்தான். இவர்களில் ஏறக்குறைய 80 சதவிகிதத்தினர் பழங்குடி சான்று பெற முடியாமல் உள்ளனர். இதன் காரணமாக, இவர்களின் வாழ்வாதார உரிமைகள் மறுக்கப்பட்டு, சலுகைகள் எதுவும் பெற முடியாமல் உள்ளனர். இவர்களில் பெரும்பான்மையினர்,



முருகன் அவர் மனைவி பொன்னி, ரஞ்சிதம்

அரசின் இடஒதுக்கீட்டுக் கொள்கையினால் எவ்வித நன்மையையும் பெறவில்லை. இவர்கள் கல்வியில் மேம்படவும், பொருளாதார முன்னேற்றம் பெறவும் நிலமே ஆதாரம். இவர்களில் ஒரு சதவிகிதத்திற்கும் குறைவாகவே நிலம் வைத்துள்ளனர். விதி விலக்காக, விழுப்புரம் மாவட்டம் கஸ்பாகாரணை மற்றும் வீரமடைப் பகுதியில் வசிக்கும் 50 குடும்பங்களில் சிலர், கடந்த 50 ஆண்டுகளாக சிறிதளவு நிலம் வைத்திருந்த காரணத்தால் அங்கிருந்து 26 பேர் படித்து மத்திய, மாநில அரசுப் பணிகளில் சேர்ந்துள்ளனர். கல்வி, பொருளாதார மேம்பாட்டிற்கு நில உரிமை அடிப்படை என்பதற்கு இதுவே சிறந்த எடுத்துக்காட்டு. ஆனால், பெரும்பான்மையோருக்கு இவ்வுரிமை மறுக்கப்பட்டுள்ளது. நில உச்சவரம்புச் சட்டம், பூமிதான இயக்கம் மூலம் பழங்குடிகள் குறிப்பாக இருளர்கள் எவ்விதப் பலனும் அடையவில்லை'' என்று கூறிமுடித்தார்.

பழங்குடி இருளர் பாதுகாப்புச் சங்கத்தின் சார்பில் 27.7.2005 அன்று, கடலூர் வட்டம் தொட்டித் தோப்பு கிராமத்தில் பழங்குடி இருளர்களின் நிலவுரிமை மற்றும் கோரிக்கை கருத்தரங்கம் நடைபெற்றது. பலகட்ட போராட்டங்களுக்குப் பிறகு, மீண்டும் 'பஞ்சமி நில மீட்பு' கோரிக்கை வலுவடைந்து வருகின்ற இந்த நேரத்தில், நாடோடிகளாகவும், அடிமைகளாகவும் வாழ்ந்து வருகின்ற இருளர் என்கிற பழங்குடி இனத்தைக் காப்பாற்ற - அவர்களுக்கான நில வுரிமை குறித்தும் பேசப்பட வேண்டும். ●



படிப்பகம்

www.padippakam.com


முரசொலி

'தலித்'என்பது உரிமைகாத்திடப் பயன்படும் சொல்

'தமிழ் செம்மொழி' ஆக்கம்; முழுமை பெறவேண்டும்!

மலையாள 'மாத்ருபூமி' ஏட்டுக்கு தலைவர் கலைஞர் பேட்டி (1)

**தலித் இலக்கியம் என்று தனியாக வேறுபடுத்துவதில் கருணாநிதிக்கு உடன்பாடில்லை. இக்கருத்து, தலித் அரசியல், தலித் விடுதலை எனத் தனியாக இல்லை; அதற்காகத்தான் இல்லை என்ற கருத்தாக்கத்திலிருந்து வருகிறது. தங்களின் எல்லா அரசியல் செயல்பாடுகளிலும் இதுவும் ஒரு பகுதி என்று - எல்லா அரசியல்வாதிகளும் கருதுவதும், கருணாநிதி கருதுவதும் வேறுவேறல்ல.**

# தலித் பிரச்சினை: புரிந்து கொள்ள மறுக்கும் அரசியல் தலைமைகள்

■ சூரியதீபன்

இருபதாம் நூற்றாண்டின் முதல் கால் நூற்றாண்டு வரை வரலாற்றுப் பாத்திரம் வகித்த, வரலாற்றில் மதிக்கத்தக்க பெரியவர்கள் அந்த இனம் பற்றிப் பேசியதில்லை. இலக்கியத்திலும் அந்த மக்கள் பற்றி ஒரு மவுனம் கட்டமைக்கப்பட்டிருந்தது. கட்டமைக்கப்பட்ட மவுனத்தின் பின்னால் திட்டமிடப்பட்ட சதி உறைந்து நின்றது. யாரும் எவரும் வராதபோது, தங்களுக்காக தாங்களே பேசுதல் தவிர்க்க முடியாததொரு வரலாற்று விதியாயிற்று. கருத்த மைக்கூடுகளாய்க் கெட்டியான மேகங்களை உடைத்து மழை வீசியடித்தது போல, தமக்காகப் பேசி உடைத்து வெளிப்பட்டார்கள். கட்டமைக்கப்பட்ட மவுனத்தின் உடைப்பு, கொந்தளிப்பின் மொழியாக இருந்தது.

சிந்திப்புத் தளத்தில் தொடர்ந்து இயக்குவோர் அல்லது அவ்வாறு எண்ணப்படுகிற அரசியல் தலைமையினர், தலித் விடுதலை பற்றி என்ன கருத்துகளுக்கு ஆட்பட்டிருக்கிறார்கள்?

தி.மு.க. தலைவர் மு. கருணாநிதி, மலையாளத்தில் வெளிவரும் புகழ்பெற்ற வார இதழான 'மாத்ருபூமி' இதழுக்குத் தனது 81 ஆவது பிறந்த நாள் நிகழ்வு தொடர்பாக அளித்த நேர்காணல், மொழியாக்கம் செய்யப்பட்டு - 'முரசொலி' இதழில் சூலை 21, 22, 23 - 2005 ஆகிய மூன்று நாட்களில் வெளிவந்துள்ளது. முக்கியத்துவம் வாய்ந்த அவருடைய கருத்துகள், அவர் போன்ற அரசியல் கட்சித் தலைமைகள், ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலை பற்றி என்ன கருத்து கொண்டுள்ளார்கள் என்பதைத் தெளிவாக உணர்த்துகின்றது.

''தலித் இலக்கியம்...?'' - பற்றி அவர் முன் கேள்வி வைக்கப்படுகிறது.

*''தலித் இலக்கியமென்பது, தனியாக வேறுபடுத்திப் பார்ப்பது சரியென எனக்குத் தோன்றவில்லை. இவர்கள் தலித் இலக்கியமென்று கூறுவதற்கு முன்னரே நான் எழுதிய 'ஒரே ரத்தம்' போன்ற கதைகளெல்லாம் - தலித்துகளுடைய வாழ்க்கையையும், வளர்ச்சியையும் பிரச்சினைகளையும், அடிப்படையாகக் கொண்டுள்ளவைதான்.''*

மு. கருணாநிதி எழுதிய 'ஒரே ரத்தம்' போன்ற கதைகள், அந்தப் பாத்தியதை கொண்டாடுகிற அளவுக்கு - உண்மையான அர்த்தம் கொண்டவைதானா என்பது, ஆழமாக ஆராயப்பட வேண்டும். கருணாநிதியின் இந்த உரிமை கோரலின் நியாயப்பாடு பற்றி அதன் பின்னரே தீர்மானிக்க முடியும். தீண்டத்தகாதவர்கள் என்று சாதி ஒடுக்குதலுக்கு ஆளான மனிதக் கூட்டம் - இந்திய பூமியைத் தவிர வேறெந்த பூமியிலும், இந்து மதத்தைத் தவிர வேறெந்த மதத்திலும் காணப்படவில்லை. உழைக்கும் வர்க்கத்தை விட கூடுதலாக இன்னொரு கொடுமைக்கு ஆளானவர்கள் இவர்கள். அடிப்படையில் சாதிக் கொடுமைதான் - பொருளாதாரத்தில், வாழ் நிலையில், எல்லா வகையிலும் தாழ் நிலைக்குக் கொண்டுபோய் நிறுத்தியது.

எனவே, தங்களை அடையாளப்படுத்திக் கொள்ள ஒரு சொல்லைத் தேடினார்கள். அது எந்த அகராதிக்குள்ளும் இல்லை. அகராதி கடந்த ஒரு சமுதாய வார்த்தையாக அது இருந்தது. 'தலித்' என்ற சொல்லை அடையாளமாகக் கொண்டார்கள். தலித் இலக்கியம், அவர்களின் அந்த வாழ்வுக்குள்ளிருந்துதான் பிறந்தது. தலித் இலக்கியம் என்று தனியாக வேறுபடுத்திப் பார்ப்பது, தனக்கு சரியாகத் தோன்றவில்லை என்கிறார் கருணாநிதி. தங்களை வேறுபடுத்திக் கொள்ளத் தான் தலித் என்ற சொல்லை கைக் கொண்டார்கள். தலித் இலக்கியம் என்ற சொற் பயன்பாடு, தங்களை வேறுபடுத்திக் கொண்ட விழிப்பிலிருந்து பிறந்ததுதான்.

தீண்டாமை அவர்களுக்கு சாதியில் மட்டுமில்லை; அரசியலில், கல்வியில், அறிவுசார் துறைகளில், இலக்கியத்தில் நிரந்தரமாக நிலவுகிறது. எனவே, தலித் இலக்கியம் என்ற தனிப்பகுப்பு தேவையா, இல்லையா என்ற கேள்வி, தலித் விடுதலை தேவையா, இல்லையா என்ற கேள்வியின் தொடர் ஒலிப்பாகவே தோன்றுகிறது.

இலக்கியத்திலும் தீண்டாமை ஒரு கோட்பாடாகவே கடைப்பிடிக்கப்பட்டு வந்தது. இலக்கியவாதிகள் சாதியத்திற்கு எதிரான ஒரு போராட்டத்தை முன்னெடுக்க வேண்டியிருக்கிறது; அல்லது அதில் தங்களை இணைத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது என்பதை சிறிதளவும் உணராதவர்களாகவே செயல்பட்டனர். இதுகாலம் வரை இருந்த பழைய மரபுகளையே இலக்கியம் எனக் கொண்டனர். அவ்வாறானவற்றை போஷித்து வளர்ப்பது தம் எழுத்துக்குப் பெருமை சேர்க்கும் என நினைத்தனர். சமூகத்தின் கடைநிலை மக்களுக்கு இடையே ஊடுருவி, கலந்து வாழ்ந்து, வாழ்வனுபவங்களைப் பெற முயலவோ, படைக்கவோ செய்தாரில்லை. இவ்வாறான இலக்



படிப்பகம்

www.padippakam.com

கியவாதிகளின் தொடர்ச்சியே என்பதை - இவ்வாறான பார்வைகளையே தானும் கொண்டிருக்கிறார் என்பதையே, தலித் இலக்கியம் என தனி வகைமை தேவையில்லை என்ற கருணாநிதியின் கூற்று வெளிப்படுத்துகிறது.

தலித் இலக்கியம் பற்றியது 'மாத்ரு பூமி'யின் கேள்வி. ஆனால், தலித்துகளுக்கு வேறெவரையும்விட தான் அதிக காரியங்கள் ஆற்றியதாகப் பட்டியலிடுகிறார்: ''நான் ஆட்சியிலிருந்தபோது தலித்துகளுக்கு மிகவும் அதிக அளவில் நன்மைகள் செய்திருக்கிறேன்...'' எனத் தொடங்கி வழக்கம் போல ஓராயிரம் முறை பத்திரிகைகளிலும், கூட்டங்களிலும் சொன்ன (தனது குடும்பத்தில் கலப்புத் திருமணம் செய்த) பட்டியலை மீண்டும் விரிவாகச் சொல்கிறார்.

நாமே சூடிக்கொள்வதல்ல மகுடம்; சமுதாய விடுதலையை முன்னெடுக்கும் ஒவ்வொரு போராட்ட காலடி வைப்பும், அவரவர் தலைக்கு மகுடம் கொண்டு வந்து சூடும். அடிப்படை முரணைத் தீர்க்க முயலாத எந்தச் செயலும், சமுதாயத்தின் அங்கீகாரம் பெற முடியாமல் போலிமை நீரில் மிதந்து தள்ளாடுகிறபோது, தானே பட்டியலிடுவது தவிர்க்க முடியாதது. எந்த ஒரு பிரச்சனை மேலெழும்போதும், தான் என்ன செய்தேன் என்று தன்னோடு தொடர்புபடுத்தி வெளிப்படுத்திக் கொள்வது, அவரது அரசியல் பாணி. இந்த பாணி அவரிடமிருந்து வெளிப்பட்டு, திராவிட அரசியல் கட்சிகள் அனைத்தையும் ஆக்கிரமிப்பு செய்திருக்கும் (இன்றுள்ள ஜெயலலிதா, வைகோ வரை) அரசியல் மரபாகவே மாறிவிட்டது.

எந்தக் கிராமத்திலும் ஊருக்கு நடுவிலில்லை சேரி; ஊருக்கு வெளியே ஒதுக்குப்புறமாய்க் கிடக்கிறது. அந்த மக்களுடைய சுவாசக் காற்றும் தம்மை அசுத்தம் செய்துவிடும் என்று ஊரின் ஒதுக்குப்புறமாய் கிடக்கிற அந்தத் தீண்டாமையின் தொடர்ச்சியால் - இலவச வீடுகள், தொகுப்பு வீடுகள் என்ற நவீன சேரி உருவாக்கப்பட்டது. ஊருக்கு நடுவே சாதி இந்துக்கள் வாழும் பகுதிகளில் இடமிருந்தாலும் கட்டித்தரப்படவில்லை. அது வாழ்நாள் உரசலை உண்டாக்கும். ஆனால், சாதி ஒழிப்பு - ஊருக்கு நடுவிலிருந்து தொடங்கப்பட வேண்டும். ஊர் நடுவே மய்யம் கொண்டு, ஊர் முழுவதும் கவிந்து நிற்கும் சாதிப் பிரிவினைக்குத் தோதாய் அதற்கு முதுகு தட்டிக் கொடுக்கும் காரியமாய் - நவீன 'காங்க்ரீட்' சேரியை உருவாக்கிய முன்னோடிப் பெருமை கருணாநிதிக்குரியது.



'காங்க்ரீட்' சேரியாக இருக்கும் வரை தொல்லை இல்லை. அதுவே 'சமத்துவபுரமாக' பளபளப்புக் கொண்டபோது, சாதிப் பாகுபாடு அங்கேயும் தொடர் கதையானது; சாதி நாற்றம் மேலெழுந்து ஆடுகிற இடமாக 'சமத்துவபுரம்' ஆனது. சிவகங்கை மாவட்டம் அரசனூர் சமத்துவபுரத்தில், பொதுக்குழாயில் தண்ணீர் பிடித்த தலித் குடும்பத்தினரைத் தாக்கி ஓட ஓட விரட்டியடித்த சம்பவம் கருணாநிதியின் ஆட்சிக் காலத்திலேயே நடந்தது. சாதிப்பாகுபாட்டை ஒழிக்காமல், சாதி தர்மத்தை அப்படியே வைத்துக் கொள்ளும்வரை - எந்த சமத்துவபுரமும் உண்மையான சமத்துவத்தை அளிக்காது.

வேரை வெட்டாமல் முள்செடியின் பிராண்டலுக்கு மருந்து பூசுகிற தொடர் வேலை - எல்லா அரசியல் கட்சிகளுக்கும் உவப்பானதுதான். சாதியைத் தக்க வைக்கும் நடவடிக்கையை, ஒடுக்கப்பட்ட ஜாதியின் மேம்பாடு என்று பெயர் ஈட்டிக் கொள்கிற சாதுரியமான முயற்சி இது. கருணாநிதியில் தொடங்கிய இந்த சாதியம், மாறி மாறி தமிழகத்தை அலைக்கழிக்கும் திராவிட அரசியல் கட்சிகளின் புனைவாக இன்றளவும் நிற்கிறது. தலித் பிரச்சினைகள் பற்றி கருணாநிதியிடம் மூன்று கேள்விகள் முன்வைக்கப்பட்டன. சுந்தரராமசாமி எழுதிய ஒரு கதையை சுட்டிக் காட்டி, ''இப்போது தலித்துகளுக்கு எதிரான இலக்கிய நூற்கள் எழுதப்படுகின்றன என்ற குற்றச்சாட்டு உண்டல்லவா... சுந்தரராமசாமி எழுதிய ஒரு கதைக்கு எதிராக தலித் அமைப்புகள் கண்டனப் பேரணிகள் நடத்தின... '' என்பது இரண்டாவது கேள்வி.

"எம்மைப் பொறுத்தவரையிலும், எமது அமைப்பைப் பொறுத்தவரையிலும், எல்லா வகையிலும் தலித்துகளுக்கு அனுகூலமாக இருக்க வேண்டும். நாங்கள் தலித்துகளைத் தனிப்பட்ட பிரிவினராக தரம் பிரித்து வேறுபடுத்திக் காண்பதில்லை. ஆனால், அவர்களே தங்களை வேறுபடுத்திக் கூறிக்கொள்ளும்போது, நாமும் அவ்வாறு தலித் என்று பயன்படுத்த வேண்டியிருக்கிறது. இது, அவர்களுடைய உரிமைகளைக் காத்திடப் பயன்படுத்தப்படும் சொல்லாகவும் இப்போது இருக்கிறது."

கருணாநிதி கூறுவது போல, தங்களை வேறுபடுத்திக் கொள்ளத்தான் தலித் என்ற சொல்லாக்கத்தை முன்னெடுத்தார்கள். மேல்நிலை வர்க்கத்தினருக்காக, மேல் சாதியினருக்காக, மேன்மக்கள் அரசியலை முன்வைக்கிற எல்லோரிடமிருந்தும் தலித்துகள் வேறுபடுகிறார்கள். வேறுபடுதல், வித்தியாசப்படுதல் என்பது அவர்களின் இயல்பு. அது அவர்களுக்கு வாழ்க்கை. வேறுபடுதலில்லாது அவர்களின் இருப்பு இல்லை. இந்த சொற்பயன்பாடு தங்களை அடையாளப்படுத்திக் கொள்ள மட்டுமல்ல; எல்லா நிலைகளிலும், எல்லா துறைகளிலும், எல்லா இழிவுகளிலிருந்தும் விடுதலை பெறுவது என்பதைக் குறிக்கும் கலக மொழி.


தலித் இலக்கியம் என்று தனியாக வேறுபடுத்துவதில் கருணாநிதிக்கு உடன்பாடில்லை. இக்கருத்து, தலித் அரசியல், தலித் விடுதலை எனத் தனியாக இல்லை. அதற்காகத் தான் இல்லை என்ற கருத்தாக்கத்திலிருந்து வருகிறது. தங்களின் எல்லா அரசியல் செயல்பாடுகளிலும் இதுவும் ஒரு பகுதி என்று எல்லா அரசியல்வாதிகளும் கருதுவதும், கருணாநிதி கருதுவதும் வேறுவேறல்ல. எல்லா வகையிலும் தலித்துகளுக்கு அனுகூலமாக இருக்க வேண்டும் என்ற கூற்றின் மூலம் இதைத் தெளிவுபடுத்திக் கொண்டிருக்கிறார். 'அனுகூலமாக இருத்தல்' என்பதை விளக்க வேண்டியதில்லை. எல்லாவகையிலும் முதன்மையாக வைத்தல் என்பது அதன் அர்த்தமல்ல; அது பத்தோடு பதினொன்றாகவும் இருக்கும். நூறோடு நூற்றியொன்றாகவும் இருக்கும் என்பது பொருள். அரசியல் ஏற்கனவே அப்படியிருந்தது; இனி அப்படி இருக்க முடியாது.


படிப்பகம்

www.padippakam.com

தொழிலாளி வர்க்கம் விடுதலையாகிற போது, தன்னை விடுதலை செய்து கொள்வது மட்டுமல்ல; முதலாளி என்ற இழிவையும் அது போக்கிவிடுகிறது. முதலாளி என்ற ஒரு சொல்லே இல்லாமல் ஆக்குவதன் மூலம் - அதைச் செய்யும் என்கிறது மார்க்சிய சாரம். அதுபோல் எந்தப் பிரதான இழிவைத் தூக்கியெறிந்தால் முழுச்சமுதாயமும் விடுதலை பெறுமோ, அதைத் தூக்கி எறிவது - இதன் காரணமாய் தாழ்த்தப்பட்டவர் என்ற இழிவு நீக்குதல் மட்டுமல்ல, மேன்மக்கள், உயர் சாதியினர் என்ற இழிவும் இல்லாமல் போகும்.

இழிவில் பிறந்து, இழிவில் வளர்ந்து, இழிவிலேயே வாழ்ந்து சுவாசமாகக் கொண்ட மனித சமூகப் பிரிவின் விடுதலை அது. இந்திய சமூகத்தில் குறிப்பாக தமிழ்ச் சமுதாயத்தில் அதைத் தாண்டிய மனித விடுதலை என்பது இருக்க முடியாது. பொத்தாம் பொதுவாக மனித குல விடுதலை என்பது இல்லை. தலித் விடுதலை என்பது, இந்த நூற்றாண்டின் குறிப்பான விடுதலையாக இருக்கிறது. இந்த நூற்றாண்டு, அதற்கான முன்னோடித் திசையைக் கொண்டிருக்கிறது. ஏற்கனவே விடுதலை நிகழ்த்தப்பட்டிருக்குமாயின் தலித் விடுதலை, எதிர்வரும் நூற்றாண்டுகளின் விடுதலையாக - நூற்றாண்டுகளை விடுதலை செய்வதாக உலக வரலாற்றுத் தொகுப்பில் பதிவாகி இருக்கும்.


செந்தில் செல்வன்

அந்த கிராமத்தின் உயர் சாதியினரான இந்துக்களில் சிலர் ஒன்றாய் இணைந்திருக்கிறார்கள். அப்போது தலித்துகள் அச்சப்படுகின்றனர். அவர்கள் பிரசிடெண்ட் (தலைவர்) ஆகலாம். ஆனால், பிரசிடெண்டானால், நாளை உனது தலை வெட்டப்படுமென்று அவர்கள் அச்சுறுத்தப்படுகின்றனர். தலையை இழப்பதற்கு யாருக்கும் விருப்பம் இருக்காதல்லவா?

உடனே கையெழுத்திட்டுக் கொடுத்து விடுகின்றனர். அது இப்போது அன்றாட நிகழ்ச்சியாகிவிட்டது. அரசு அதற்கெதிராகக் கடுமையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்பதாலோ, காவல் துறையை இறக்கி விடுவதால், சட்ட விதிகளுக்கு ஒத்த நடவடிக்கைகளை மேற்கொள்வதாலோ எந்தப் பயனும் இல்லை. அந்தக் கிராமத்தில் அனைத்து முக்கிய நபர்களையும் அழைத்துப் பேசி, சுமூகமான முறையில் அவர்களுக்கு விஷயங்களை விளக்கிப் புரிய வைக்க வேண்டும். அவசர கோலத்தில் ஏதாவது முடிவெடுத்து சட்டத்தை நடைமுறைப்படுத்த முயன்றால், அராஜகம்தான் உருவாகும்.''

சட்டப் பூர்வ நடவடிக்கைக்குகூட தான் தயாரில்லை. மக்கள்முன் நின்று, மக்களுக்குப் பதில் சொல்லும் வேலை தமக்கில்லை என்று கருதினார்கள் அதிகாரிகள்.

பொதுவிசாரணை மாநாட்டில், தமிழ் நாட்டின் பேரெடுத்த அரசியல் தலைமைகள் எவரும் கலந்து கொள்ளவில்லை. எல்லோருக்குமாய் அழைப்பு விடுக்கப்பட்டபோதும், கருணாநிதி போலவே இறுக்கமாய் அமர்ந்து கொண்டார்கள். இவர்கள் பெரும்பாலும் இடைநிலைச் சாதிகளிலிருந்து உருவானவர்கள். ஆனால், எல்லோருக்குள்ளும் ஓடுகிற சாதி இந்து மனோபாவம் ஓட்டுச் சேகரிப்பு அரசியலோடு இணைந்து தடுத்து, எல்லோரும் முன்னெடுப்பு என்று ஒன்று இல்லாமலே - தானாகவே வரும் விடிவுக்காகக் காத்திருக்கிறார்கள்.

ஆதிக்க சாதிகள், ஆட்சித் தலைமை (எவர் வந்த போதும்), அரசியல் தலைமைகள் மூன்றும் கூட்டாக எதைக் கடக்கப் போய்க் கொண்டிருக்கிறார்கள்? பாப்பாபட்டி, கீரிப்பட்டி ஊராட்சிகளில் ஆதிக்க சாதிகள் பத்தாவது ஆண்டைக் கடக்கக் காத்திருக்கிறார்கள். பத்து ஆண்டுகள் முடிந்து போனால், சுழற்சி முறையில் ஆதிக்கசாதி தலைவருக்கான ஊராட்சியாக மாறும் என்று அவர்கள் காத்திருக்கிறார்கள். அவர்கள் பைத்தியம் இல்லை; காரியக்காரர்கள். ஆனால், கருணாநிதி அவர்களை பைத்தியக்காரர்களாகப் பார்த்து ஒதுங்கிக் கொள்கிறார். இந்த ஒதுக்கம் தான் அவருக்கும் வேண்டியது; அந்த சாதிக்கும் ஊட்டம் தருவது.

❝ பாப்பாபட்டி - பொது மக்கள் விசாரணை மாநாட்டில், தமிழ் நாட்டின் பேரெடுத்த அரசியல் தலைமைகள் எவரும் கலந்து கொள்ளவில்லை. எல்லோருக்குமாய் அழைப்பு விடுக்கப்பட்ட போதும், கருணாநிதி போலவே இறுக்கமாய் அமர்ந்து கொண்டார்கள். ❞

அரசியலில் நிறையபேர் சமகால சிந்தனையோட்டத்தில் இல்லை. எதிர்கால விடுதலை பற்றிய கண்ணோட்டமும் இல்லை என்பதை பாப்பாபட்டி, கீரிப்பட்டி பற்றிய மூன்றாவது கேள்விக்கான கருணாநிதியின் பதில் உறுதிப்படுத்துகிறது. கேள்வி: ''உங்களது அமைப்புசாதிக்கெதிராகப் போராடும் போதும், மதுரை மாவட்டத்தில் பாப்பாபட்டி, கீரிப்பட்டி போலுள்ள பஞ்சாயத்துகளில் தலித்துகள் தேர்தலில் கூடப் பங்கேற்பதற்கு அச்சப்படுகின்ற நிலையுள்ளதல்லவா?''

பதில்: ஒரு கிராமம் அப்படியிருப்பதால், தமிழ் நாடு முழுவதும் அப்படித்தான் என்று அர்த்தமல்ல. ஒரு கிராமத்தில் அனைவரும் பைத்தியக்காரர்களாகி விட்டனர் என்பதால், மற்ற இடங்களில் உள்ளவர்களுக்கெல்லாம் பைத்தியம் வரவேண்டும் என்பதில்லை. அது போலவே அரசும் நிர்வாகமும் இருக்க வேண்டுமென்று கருதுகிறார். அவருடைய ஆசையை, ஜெயலலிதா அரசும் நிறைவேற்றி வருகிறது; இதுவரை அவர் வாய் திறந்து ஏதொன்றையும் பேசாமைக்கும், ஏதொன்றையும் செய்யாமைக்கும், இந்த செயலின்மைதான் அடிப்படை. புலிகளுக்கும் மான்களுக்குமான சமரசத்தை உண்டாக்க தீவிரமாக முயல்கிறார். முயல்வதுபோல் 'பாவலா' காட்டி பிரச்சனையை அப்படியே படுக்கை நிலையிலேயே கிடத்தி, இரண்டு பக்க வாக்கு வங்கியையும் தனக்குச் சாதகமாக்கும் முனைப்பு வெட்டவெளிச்சமாகிறது.

இந்த ஊராட்சிகளில் நடக்கும் ஜனநாயகப் படுகொலையைக் கண்டித்து, 14.6.2005 அன்று மதுரையில் விடுதலைச் சிறுத்தைகள், பிற அமைப்புகளுடன் இணைந்து, தேசிய அளவில் பொது விசாரணையை ஏற்பாடு செய்திருந்தனர். நாள் முழுவதும் நடைபெற்ற மாநாட்டில் ஆதிக்க சாதியினர் பங்கேற்கவில்லை. பொதுவிசாரணையில் பங்கேற்க 18 உயரதிகாரிகளுக்கு அழைப்பு அனுப்பப்பட்டது. ஒருவர்கூட பங்கேற்கவில்லை.

அந்த ஒரு கிராமத்தில் உள்ளவர்கள் அனைவரும் பைத்தியமாகிவிட்டனர் என்பதால், மற்ற இடங்களில் உள்ளவர்களுக்கெல்லாம் பைத்தியம் வரவேண்டுமென்பதில்லை என்கிறார். உண்மைதான். எல்லாக் கிராமங்களும் இந்தப் பைத்தியம் பிடித்துதான் ஆடிக் கொண்டிருக்கின்றன. அவசர கோலத்தில் ஏதாவது முடிவெடுத்து சட்டத்தை நடைமுறைப்படுத்திட முயன்றால் அராஜகம்தான் உருவாகும் என்று, ஏதொன்றையும் அசைக்காமல் பாதுகாப்பாக அமர்ந்து கொள்ளச் செய்திருக்கிறது.

மு. கருணாநிதி, அடுத்த தேர்தலுக்காகக் காத்திருக்கிறார் மற்றவர்கள் போலவே. ஆங்கிலத்தில் ஒரு வாசகம் உண்டு: ''அரசியல்வாதிகள் அடுத்த தேர்தலைப் பற்றி சிந்திக்கிறார்கள். மேதைகள் அடுத்த தலைமுறைகளைப் பற்றி சிந்திக்கிறார்கள்'' ●



படிப்பகம்

www.padippakam.com

# மவுனக் கொலையாளிகள்

■ என்.டி. ராஜ்குமார்

நாம் செல்லுவோம் என்கிறது
அரவம் நுழைந்த காவியோசை

மசூதிகளையும் தர்க்கா பறவைகளையும்
அடித்து நொறுக்க

நாமென்பது நாமா

நீ வேறு நான் வேறு
நீங்கள் வேறு நாங்கள் வேறு

எல்லோரும் பற்பல இனம்
எல்லோர்க்கும் பலப்பல கடவுள்கள்

பனங்கள்ளும் தென்னங்கள்ளும்
கலந்தடித்த போதை கிறுக்கில்
கருவாடு சுட்டுத் தின்னுகிறாள் எனதம்மை

வலம்புரிச் சங்கிலும் கெண்டியிலும்
மாட்டு மூத்திரம் பிடிப்பவர்களே

பசுக்களை நடுக்காட்டிலிட்டு பின்புறம் தடவும்
ரிஷிமார்கள் கதைக்கிறார்கள்

அஷ்வமேத யாகத்தில் குதிரைகளைப் போட்டு
சுட்டுத் தின்ற கதையை

வரலாறை விழுங்காதே மாமிசப் பாம்பே

எல்லோரும் ஓர் குலம்
எல்லோரும் ஓரினம்
எல்லோரும் ஓர் மக்களென்பதொரு

பரிகாசச் சொல்தானே
மவுனக் கொலையாளிகளே!





படிப்பகம்

www.padippakam.com



■ ஏபி. வள்ளிநாயகம்



# பவுத்தப் புரட்சியாளர் 'தமிழன்' ஜி. அப்பாதுரையார்

அப்பாதுரையார், பிறவிப் பேதம் காரணமாக நேரும் இழிவு மற்றும் ஏழ்மை முடுக்கிவிடப்பட்டு எழுத்துலகிற்கு வந்தவர் அல்ல. முதற்குடிகளின் வாழ்வின் நிச்சயமின்மையையும் - போதாமைகளையும் மட்டுமே அவர் உள்ளீடுகளாகக் கொள்ளவில்லை. அவரது எழுத்துகள், ஒருபோதும் பரிதாப உணர்வை பற்றச் செய்ததில்லை. அனுதாபங்களை அண்ட விட்டதில்லை. சமூக மனிதன் என்ற வீராப்பும், சமூக விடுதலைக்கான பராக்கும், விடுதலைக் கருத்தியல் பற்றிய ஆற்றலுமே அவரை எழுத வைத்தது.

எழுத்தை தனிமனிதனின் உன்னதங்களைச் சுமக்கும் அடிமையாக இல்லாமல், சமூகத்தை விடுதலை செய்யும் நெருப்பாக நிலைக்கச் செய்தவர் அப்பாதுரையார். அவர், 'தமிழனில்' மட்டும் எழுதவில்லை. அவரது எழுத்துகளில் மானுட வேட்கை, தீவிரம், செய்நேர்த்தி இருந்ததால் - 'குடி அரசு', 'நவசக்தி', 'திராவிடன்', 'விலாசினி' போன்ற இதழ்கள் தங்கள் கனபரிமாணத்திற்காக அப்பாதுரையாரை எதிர்பார்த்திருந்தது. அப்பாதுரையாரின் அறிவு நுட்பமும், ஆற்றல் திட்பமும் - தங்கவயல் தமிழ் மக்களை மட்டுமல்ல, பெரியார், திரு.வி.க. போன்ற இன, மொழித் தலைவர்களையும் கவர்ந்திருந்தது. இவர்களின் நட்பும் தோழமையும், திருப்பத்தூரில் 1919 இல் ஏ.பி. பெரியசாமிப் புலவர் கூட்டிய தாழ்த்தப்பட்டோர் மாநாட்டின் மூலம் ஏற்பட்டது.

> "அப்பாதுரையார் எழுத்துகள், ஒருபோதும் பரிதாப உணர்வை பற்றச் செய்ததில்லை; அனுதாபங்களை அண்டவிட்டதில்லை. சமூக மனிதன் என்ற வீராப்பும், சமூக விடுதலைக்கான பராக்கும், விடுதலைக் கருத்தியல் பற்றிய ஆற்றலுமே அவரை எழுத வைத்தது."

காங்கிரசை விட்டொழித்த பெரியார், சுயமரியாதை இயக்கம் கண்டு 'குடி அரசு' இதழினைத் தொடங்கி பகுத்தறிவு - சமதர்மப் பிரச்சாரம் செய்யத் தொடங்கிய காலத்தில், பெரியாரின் 'குடி அரசி'ல் அப்பாதுரையார் தொடர்ந்து எழுதினார். இதனால், பெரியாருக்கும் அப்பாதுரையாருக்கும் தோழமை வளர்ந்தது. மேலும், 1925 களில் 'குடி அரசு' இதழின் கோலார் தங்கவயல் முகவராக இருந்த பகுத்தறிவு சமத்துவச் சிந்தனையாளர் வி.எம். ராஜரத்தினத்துடனும் அப்பாதுரையாருக்கு நட்பு கிடைத்தது.

தாழ்த்தப்பட்ட மானுட வாழ்வின் வடிவங்களை, வருங்காலங்களில் ஆக்கப்பூர்வமான திசைகளில் நகர்த்திச் செல்வதற்கு ஆயத்தமான அப்பாதுரையார், கோலார் தங்கவயலெங்கும் சுயமரியாதைச் சங்கம், சீர்திருத்த வாலிபர் கழகம் ஆகிய அமைப்புகளைத் தோற்றுவித்து, பகுத்தறிவு சமதர்மப் பிரச்சாரத்திற்கு வலுவையும் பொலிவையும் ஏற்படுத்தினார். 'குடி அரசு' இதழை வரவழைத்து விற்பனை செய்வதை, இந்துக்களும் கிறித்துவர்களும் கடுமையாக எதிர்த்து வந்தனர். இவ்வெதிர்ப்பினை ராஜரத்தினம், அப்பாதுரையாரின் தோழமை பலத்தைக் கொண்டே முறியடிக்க முடிந்தது.

'தமிழன்' தொய்வடைந்து இரண்டாம் கட்டமாக 1926 இல் வெளிவந்தபோது, ஆசிரியரான அப்பாதுரையாருக்கு ராஜரத்தினம் பின்புலமாக இருந்தார். 'தமிழனை' அச்சிட்டு வெளியிடும் பொறுப்பினை அவர் ஏற்றிருந்தார். 'தமிழனை' அச்சிடும் அச்சகத்திற்கு புத்தரின் பெயரால் 'சித்தார்த்தா' என்று அப்பாதுரையாரும், ராஜரத்தினமும் பெயர் சூட்டினார்கள். 'சித்தார்த்தா அச்சகம்', 'தமிழன்' இதழினை வெளியிடும் அச்சுக் கூடமாக மட்டுமின்றி, தங்கவயல் பகுத்தறிவு - சமத்துவவாதிகளின் பட்டறையாகவும் விளங்கியது.

தலைவர் பெரியாரின் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனம் போலவே, கோலார் தங்கவயலில் சித்தார்த்தா அச்சகம் விளங்கியது. கட்டுரைகள், கதை, கவிதை, கேள்வி - பதில் வடிவங்களின் வாயிலாக அப்பாதுரையார் பகுத்தறிவிற்கான, சமத்துவத்திற்கான இலக்கியங்களைப் படைத்தார். அரிச்சந்திரன் பொய்கள், கடவுள் விவரம், விபூதி ரகசியம், திருக்குறள் விளக்க உரை, வர்ணபேத விளக்கம், இந்தியர் விவாத விளக்கம், அவ்வையார் திரிவாசகம், மனிதர் அடைந்த ஏமாற்றம், மின்சார மாலி



படிப்பகம்

www.padippakam.com

கையின் ரகசியம் போன்ற 50க்கும் மேற்பட்ட நூல்களை - மக்களின் அறிவுப் பசியின் ஆக்க வழிக்குப் படைத்தளித்தார்.

1929 ஆம் ஆண்டில் பெரியார் முதன் முதலாக மலேசியா நாட்டிற்கு அழைக்கப்பட்டு, பார்ஸ்டன் என்ற அமெரிக்கப் பகுத்தறிவாளர் தலைமையில் நிகழ்ந்த பொதுக் கூட்டத்தில் சிறப்புரையாற்றும்போது - அமெரிக்கப் பெண்மணி மேயோ, இந்தியாவில் நடக்கும் சமூக ஊழல்கள், சமூக அவலங்கள் குறித்து எழுதிய நூலை மேற்கோள் காட்டிப் பேசும்போது, கூட்டத்தினுள் குழப்பம் விளைவிக்கப்பட்டது. இந்த சம்பவத்தைப் பற்றி 'தமிழன்' வார இதழில் அப்பாதுரையார், 'மேயோ கூற்று மெய்யோ பொய்யோ' எனும் தலைப்பில், இரண்டு கிழமைகள் தொடர்ந்து எழுதிய கட்டுரை - அன்றைய சமூக ஊழல்களை மட்டுமல்ல; இன்றைய சமூக ஊழல்களையும் அன்றே படம் பிடித்துக் காட்டுவதாக இருந்தது.

'தமிழன்' இதழில் கலந்துரையாடல் பகுதி மூலம் சமூக நிகழ்ச்சிகளையும், நாட்டு நடப்புகளையும் மக்களுக்கு படம் பிடித்துக் காட்டுவதாய் 'வைதிக / லவுகீக சம்வாதம்' என்ற தலைப்பில், சமூக சீர்கேடுகளை விளங்கப்படுத்தி மக்களைப் பகுத்தறிவுக்கு ஆட்படுத்தினார். 'தமிழன்' இதழில் இடம் பெற்ற கேள்வி - பதில் பகுதி, அறிவு வளர்ச்சிப் பகுதியாகவே அமையப் பெற்றிருந்தது. எடுத்துக் காட்டாக, 1.4.1931 அன்று வெளிவந்த 'தமிழன்' இதழில், சிவன் பெரியவரா? விஷ்ணு பெரியவரா? என்ற கேள்விக்கு, பூஜ்ஜியம் பெரியதா? சைபர் பெரியதா? என்று கேட்பது போல் இக்கேள்வி இருக்கிறது என்று பதிலளித்தார்.

சந்தேகித்தலே அறிவின் தொடக்கம் என்பதில், அப்பாதுரையார் மிகச் சரியாக இருந்தார். மூடநம்பிக்கை விலக விலகத்தான் பகுத்தறிவை மூடியிருக்கும் திரை விலகும் என்பதில் உறுதியாக இருந்தார். அவர் காலத்தில் மந்திரவாதிகள், அவதாரப்புருஷர்கள், தங்கவயல் பக்கம் தலை காட்டாமலே இருந்தார்கள். இன்றைய சாய்பாபாக்கள் போல் எவரும் வந்துவிடக் கூடாது என்பதில், அப்படியான முன்னோடி புரட்டு மனிதர்களை மக்களிடமிருந்து ஓரம் கட்டுவதில் தனிக் கவனம் எடுத்துக் கொண்டார். பிற்காலத்தில் சாய்பாபா போன்றவர்களுக்கு சிம்ம சொப்பனமாகத் திகழ்ந்த கோவூர், கர்நாடக துணைவேந்தர் நரசிம்மய்யா போன்றோருக்கு - அப்பாதுரையார் முன்னோடி என்றால், அது மிகைக் கூற்றாக இருக்காது.

வேற்றுமையை சுவாசிக்கும் பார்ப்பனியச் சமூக அமைப்பின் நகலாக, தங்கவயல் ராபர்ட்சன் பேட்டையில் வெங்கடேசுவரா உணவு விடுதி அமைந்திருந்தது. இந்த உணவு விடுதியில் தாழ்த்தப்பட்ட தமிழரொருவர் சாப்பிட நுழைந்த போது, அவரைத் தடுத்து நிறுத்தி அனுப்பி விட்டனர். இந்நிகழ்ச்சியினை அப்பாதுரையாரும், பி.எம். ராஜரத்தினமும் அறிந்து, உடனடியாக உணவு விடுதியின் உரிமையாளர் மீது தங்கவயல் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர். இந்த வழக்கு, கர்நாடகம் மற்றும் வட தமிழகம் எங்கும் பெரும் பரபரப்பையும் பதட்ட நிலையையும் ஏற்படுத்தியது. இவ்வழக்கு குறித்து அப்பாதுரையார் 'தமிழனில்' எழுதிய



**“ தமிழன்' இதழில், சிவன் பெரியவரா? விஷ்ணு பெரியவரா? என்ற கேள்விக்கு, பூஜ்ஜியம் பெரியதா? சைபர் பெரியதா? என்று கேட்பது போல் இக்கேள்வி இருக்கிறது என்று அப்பாதுரையார் பதிலளித்தார். ”**

கட்டுரை, தங்கவயலில் தீண்டாமை ஒழிப்பிற்கானப் போரை முன்னெடுத்தது.

தாழ்த்தப்பட்ட தமிழர்களின் குடும்ப, சமூக வளர்ச்சிக்கு மதுவிலக்கை ஒரு முக்கிய காரணியாய் கொண்ட அப்பாதுரையார், மதுவை மறுத்தலின் பொறுப்புணர்வில், 27.4.1931 அன்று மது ஒழிப்பு மாநாட்டினைக் கூட்டினார். இந்த மாநாட்டிற்கு அன்றைய சென்னை மாகாண சட்டமன்ற உறுப்பினர் டி.வி. ராசகோபால் தலைமை தாங்கினார். இம்மாநாட்டில் சிறப்புரையாற்றிய அப்பாதுரையார், குடிப்பழக்கம் நம்மை உடல் - உள்ள பொலிவிழக்கச் செய்து குடும்பத்திற்கும், சமூகத்திற்கும் வேண்டாத மனிதர்களாக்கிவிடும் என்று எச்சரிக்கை செய்தார். இம்மாநாட்டின் விளைவால் தாழ்த்தப்பட்ட தமிழர்கள் மதுவின் எதிர்தரிசனத்தில் நிறுத்தப்பட்டார்கள். 'மது அருந்துவதில்லை' என்று சபதமேற்கும் கூட்டங்கள், கோலார் தங்கவயலெங்கும் நடைபெற்றன.

அயோத்திதாசர் காலம் தொட்டு தென்னிந்திய பவுத்த சங்கமும் 'தமிழன்' இதழும், தாழ்த்தப்பட்ட வகுப்பாரின் அரசியல் பிரதிநிதித்துவ உரிமையை தொடர்ந்து வலியுறுத்தி வந்தது குறிப்பிடத்தக்கது. பவுத்த சங்கத்தின், தமிழனின் நீண்டகால கோரிக்கைக்கு ஒரு வாய்ப்பு ஏற்பட்டதாகவே, பிரிட்டிஷ் அரசு அறிவித்த லண்டன் வட்டமேசை மாநாட்டினை (1930 - 32) அப்பாதுரையார் வரவேற்றார். தாழ்த்தப்பட்டோரின் உண்மையான பிரதிநிதிகள், அம்பேத்கரும் சீனிவாசனாரும்தான் என்று தங்கவயல் பவுத்த சங்கத்தின் சார்பில், பிரிட்டிஷ் பிரதமர் ராம்சே மெக்டொனால்டுக்கு - பவுத்த சங்க முக்கிய பிரமுகர் வி.வி. டேவிட் பெருமாள் அவர்களையும் இணை சேர்த்து அப்பாதுரையார் தந்தி கொடுத்தார்.

அப்பாதுரையாரின் வழிகாட்டுதலில் வி.கே. ஆறுமுகம் மாநாட்டுச் செயலாளர் பொறுப்பேற்பில், 1932 ஆம் ஆண்டு மே மாதம் 21 ஆம் நாள் கோலார் தங்கவயல் சாம்பியன் ரீப்ஸ் பவுத்த சங்கத்தின் முகப்பில் - நான்காவது தென்னிந்திய பவுத்த மாநாடும், 23 ஆம் நாள் மூன்றாவது ஆதி திராவிடர் மாநாடும், 25 ஆம் நாள் முதலாவது சுயமரியாதை மாநாடும் - பவுத்த அறிஞர் பேராசிரியர் பி. லட்சுமி நரசு, திருப்பத்தூர் ஏ.பி. பெரியசாமி புலவர், குத்தூசி எஸ்.குருசாமி ஆகியோர் தலைமையின் கீழ் நடத்தப்பட்டன. இம்மூன்று மாநாடுகளிலும் பவுத்த மார்க்க - ஆதிதிராவிடர் இயக்க - சுயமரியாதை இயக்க முன்னணித் தலைவர்கள் கே. பிரம்மாச்சாரி, குஞ்சிதம் குருசாமி, வி.வி. டேவிட் பெருமாள், திருப்பத்தூர் கவுரவ மாஜிஸ்டிரேட் டி.என். அனுமந்து, எம்.பி. சங்கரசாமி, ஆர்.டி. அய்யாக்கண்ணு



படிப்பகம்

www.padippakam.com

# "பெண்ணடிமைச் சின்னமான தாலி கூடாது"

*சென்னை எழும்பூர் உயர்தரப் பள்ளிக் கூடத்தில், 31.3.1945, 1.4.1945 ஆகிய நாட்களில், தமிழ்ப் பண்டிதர் திரு. ஜி. அப்பாதுரையார் தலைமையில் நடந்தேறிய - அய்ந்தாவது தென்னிந்திய பவுத்த மாநாட்டின் முக்கியத் தீர்மானங்கள்:*

○ பவுத்த மார்க்கம், புத்தரால் போதித்த திரிபிடகங்களை ஆதாரமாகக் கொண்டு அனுசரிக்கப்படுவதாகும். இந்து மதம் வேதஸ்மிருதிகளை ஆதாரமாகக் கொண்டு அனுஷ்டிக்கப்படுவதாகும். ஆகையால் பவுத்த மார்க்கம், இந்து மதத்தோடு சேர்ந்ததல்ல என்பதை இம்மாநாடு வற்புறுத்துகிறது. ○ வெளிதேயங்களிலிருந்து வரும் பவுத்த பிட்சுகள், தென்னிந்திய பவுத்த சங்கத்தில் ஓர் அங்கத்தவராக இருந்து, சங்க விதிகளுக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டுமேயன்றி, பிற மதஸ்தருக்குரிய குரு ஸ்தானத்தை அவர்கள் மேற்கொள்ளக்கூடாதென்று இம்மாநாடு தீர்மானிக்கிறது.

○ பவுத்த தன்மம் ஆண் - பெண் சமத்துவ உரிமையையும், சகோதரத்துவத்தையும் வற்புறுத்தும் அருளறத்திற்குரிய அன்பின் மார்க்கமாதலால், ஆண்களுக்கும் பெண்களுக்கும் சொத்துரிமையும், சமூக உரிமையும் சமத்துவமென்ற முறையிலேயே சட்டங்களை அமைத்துத் தர வேண்டுமென்றும், பர்மியருடைய சொத்துரிமைச் சட்டம் இம்முறைக்கு முரண்படாததாக இருக்குமேயானால், அதையே தென்னிந்திய பவுத்தர்களுக்குரிய சொத்துரிமைச் சட்டமாக அமைத்துத்தர வேண்டுமென்று, இந்து சட்டத் தொகுப்புக் கமிட்டியாரையும், கவர்ன்மெண்டாரையும் இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.



○ பவுத்தர்கள் திருமணத்திற்குரிய அடையாளமாக வட்டவடிவத்தில், தம்பதிகள் பெயரையும், காலத்தையும் அதில் குறிப்பிட்டுத் திருமணப் பரிசாக மணமகன் - மணமகள் கையில் கொடுத்துவிட வேண்டுமே தவிர, பெண் அடிமையெனும் பொருளில் தாலி கட்டுவது போல் உபயோகப்படுத்தக் கூடாதென்று இம்மாநாடு தீர்மானிக்கிறது. ○ பவுத்தர்கள் திருமணம் முதலிய பத்திரங்களில், எவ்வித பவுத்த சின்னங்களையும் பிரசுரிக்காதிருக்க இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

○ இந்தியாவின் புருஷோத்தமராகிய புத்தரின் ஜெயந்தி திருநாளை இந்தியா முழுமைக்கும் 'பொது விடுமுறை நாளாக' அங்கீகரித்து அனுசரணைக்குக் கொண்டு வரவேண்டுமென்று இம்மாநாடு மாட்சிமை தாங்கிய இந்திய கவர்ன்மெண்டாரைக் கேட்டுக் கொள்வதுடன், மைசூர் சமஸ்தானத்தில் பவுத்த மார்க்கம் அடைந்து வருவதால் - புத்தர் பிறந்த நாளைப் பொது விடுமுறை நாளாக ஏற்படுத்தும்படி மைசூர் கவர்ன்மெண்டாரையும் கேட்டுக் கொள்கிறது.

○ பிரோபஸர் பி. லட்சுமிநரசு அவர்களால் எழுதப்பட்டிருக்கும் 'எஸன்ஸ் ஆப் புத்திசம்' எனும் ஆங்கில நூலை ஆதாரமாகக் கொண்டு, திரு. ஜி. அப்பாதுரையார் அவர்களால் எழுதப்பட்டிருக்கும் 'பவுத்த தரும விளக்கம்' என்ற நூலைப் பிரசுரித்து எல்லா பவுத்த சங்கங்களின் பொது நூலாக அங்கீகரிக்க வேண்டுமென்றும் இம்மாநாடு தீர்மானிக்கிறது. ○ இந்திய சட்டசபை, சென்னை சட்டசபை, ஸ்தல ஸ்தாபனங்கள், மைசூர் சட்ட சபை, ஜனப் பிரதிசபை முதலிய எல்லா சபைகளிலும் பவுத்தர்களுக்கென்று தனிமையான பிரதிநிதி ஸ்தானங்கள் கொடுக்கப்பட வேண்டுமென்று இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

○ தங்கவயல், மாரிக்குப்பம், சாம்பியன் ரீப்ஸ் முதலிய இடங்களில் நடந்து வரும் பவுத்த பாடசாலையின் கவர்ன்மெண்ட் கிராண்ட் பணத்தை, உயர்த்திக் கொடுக்கும்படி இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது. ○ கல்வி அபிவிருத்தியே தேசத்தின் முன்னேற்றத்திற்கு அவசியமாகக் காணப்படுவதால், 500 பேர் கொண்ட கிராமத்திலேயே கல்விச் சாலை அமைக்க வேண்டுமென்ற சட்டத்தை நிராகரித்து, ஒவ்வொரு சிறு கிராமத்திலேயும் ஆரம்ப பாடசாலைகளை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறது.

**ஜி. அப்பாதுரையார்** - மாநாட்டுத் தலைவர், **வி.பி.எஸ். மணியார்** - வரவேற்பு கழகத்தலைவர், **அன்னை சத்தியவாணிமுத்து** - மாநாட்டுத் திறப்பாளர், **ஆர்.பி. தங்கவேலன்** - மாநட்டுச் செயலாளர்

புலவர், வி.பி.எஸ். மணியர், கே.வி. கே.வி. அழகிரிசாமி, எஸ். முனிசாமியார், ஜோலார்பேட்டை வி. பார்த்தசாரதி ஆகியோர் பங்கேற்றனர்.

தாழ்த்தப்பட்டோரின் பிரதிநிதிகளைத் தாழ்த்தப்பட்டோர் மட்டுமே வாக்களித்துத் தேர்ந்தெடுக்கக்கூடிய 'தனி வாக்காளர் தொகுதி'யினையும், 'இரட்டை வாக்குரிமை'யையும் வாதாடி, போராடிப் பெற்ற புரட்சியாளர் அம்பேத்கரை பம்பாய்க்குச் சென்று சந்தித்தும் - தாத்தா ரெட்டமலை சீனிவாசனாரை சென்னைக்குச் சென்று சந்தித்தும் அப்பாதுரையார்வட்டமேசை மாநாடுகளின்கருத்துகளை, காரியங்களை நன்கு அறிந்து வந்தார். கோலார் தங்கவயல், பெங்களூர், வட தமிழ் நாட்டின் முக்கிய நகரங்கள் எல்லாம் வட்ட மேசை மாநாட்டினை விளக்கும் கூட்டங்களை நடத்தினார்.

பூனா ஒப்பந்தத்தை பவுத்த சங்கம் ஏற்கவில்லை என்பதை காந்திக்கு அறிவித்து, அப்பாதுரையார் கடிதம் எழுதினார். தாழ்த்தப்பட்ட மக்களும் இந்துக்கள்தான் என்று தீய நோக்கத்துடன் பூனா ஒப்பந்தம் மூலம் தீங்கிழைத்த காந்தியிடம், வரலாற்று ரீதியாகவும் கலாச்சார ரீதியாகவும் - எங்களை இந்துக்கள் என்று நிரூபிக்க முடியுமா? என்ற கேள்வியை முன்வைத்தார். பிறவிப் பவுத்தர்களான எங்களை இந்துக்கள் என்று நிரூபிக்க பொது மேடையில் என்னோடு விவாதிக்கத்தயாரா? என்று காந்தியிடம் சவால் விடுத்தார். அப்பாதுரையாரின் கடிதத்தை காந்தி கண்டு கொள்ளவே இல்லை. அப்பாதுரையார் காந்தியை விட்டுவிடுவதாக இல்லை. நீங்கள் மைசூர் சமஸ்தானத்திற்கு வரும் போது, எனக்குப் பதில் சொல்லியாக வேண்டும் என்று மீண்டும் கடிதம் எழுதினார். காந்திக்கு சிம்மசொப்பனமானார் அப்பாதுரையார்.

'தமிழன்' இதழைத் தொடங்கி அதன் வாயிலாக பகுத்தறிவு, சமத்துவப் பணிகளை சற்றும் தளராமல் எழுத்தோவியங்களாய் பதிய வைத்துக் கொண்டே முன்னகர்ந்த அப்பாதுரையார் - 'பண்டிதமணி' என்றும் 'தமிழ்ப் பெரியார்' என்றும் நாளடைவில் அழைக்கப்பட்டார். அப்பாதுரையாரின் புலமையைப் பாராட்டும் வண்ணம் மைசூர்சமஸ்தானத்தால் தங்கப் போர்வை அணிவிக்கப்பட்டு, சமஸ்தானத்தின் தமிழ்ப் புலவரெனகவுரவிக்கப்பட்டார்.

- அடுத்த இதழில் முடியும்



படிப்பகம்

www.padippakam.com

# தமிழ் நாடு - புதுவை
# தலித் இயக்கங்களின் கூட்டமைப்பு சார்பில்

⌘ பஞ்சமி நிலங்களை மீட்கக் கோரியும்

⌘ துப்புரவுத் தொழிலாளர் அவலநிலை மாற்றக் கோரியும்

⌘ எஸ்.சி./எஸ்.டி. வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தக் கோரியும்

⌘ தனியார் துறையில் இடஒதுக்கீடு கோரியும்

⌘ கோவை, சென்னை உள்ளிட்ட மாநகரச் சேரிகளை அப்புறப்படுத்துவதைக் கண்டித்தும்

## கோவை மாநகரில்

# பேரணி - பொதுக் கூட்டம்

## ஆகஸ்ட் 21

தலைமை : **கோவை ரவிக்குமார்**, மாநில அமைப்பாளர்

சிறப்புரை :

**சி. நிக்கோலசு**
ஒருங்கிணைப்பாளர்
த.பு. தலித் இயக்கங்களின் கூட்டமைப்பு

**பெ. தமிழினியன்**
பொதுச் செயலாளர்
விடுதலை இயக்கம்

**புதுவை மூர்த்தி**, Ex M.L.A.
தலைவர் - பீம்சேனா

**ஊ.பி. ராசு**
மாநில அமைப்புச் செயலாளர்
ஆதித் தமிழர் விடுதலை முன்னணி

**பூ. சந்திரபோசு**
பொதுச் செயலாளர்
தியாகி இமானுவேல் பேரவை

**சைதை அன்புதாசன்**
பொதுச் செயலாளர்
டாக்டர் அம்பேத்கர் பேரவை

**ஏர்போர்ட் மூர்த்தி**
தலைவர் - பறையர் பேரவை

**தமிழ் நாடு செல்வம்**
பொதுச் செயலாளர்
அண்ணல் அம்பேத்கர் து.பொ.தொ. சங்கம்

**அரங்க குணசேகரன்**
பொதுச் செயலாளர்
தமிழக மனித உரிமைக் கழகம்

**குரு விஜயன்**
அமைப்பாளர்
புரட்சி வேங்கைகள் இயக்கம்

**கு. இராமகிருட்டிணன்**
பொதுச் செயலாளர்
தந்தை பெரியார் திராவிடர் கழகம்

**ஆ. நாகராசன்**
பொதுச் செயலாளர், புரட்சிப் புலிகள்

ஒருங்கிணைப்பு

## ஆதித்தமிழர் விடுதலை முன்னணி, கோவை

113, காமராசர் நகர் II, இராமநாதபுரம் அஞ்சல், கோவை - 45

www.padippakam.com

# "தலித் எழுச்சியே தமிழ்த் தேசியத்தை உருவாக்கும்"

சென்ற இதழில் வெளிவந்த ஞான. அலாய்சியஸ் அவர்களின் பேட்டி இந்த இதழிலும்...

> **"சமுதாய முன்னேற்றத்தை விரும்பும் அறிவுஜீவிகள், அவர்கள் தலித்தாக இருந் தாலும் சரி, இல்லாவிட்டா லும் சரி, நேர்மையுள்ளவராக இருந்தால் - அயோத்திதாசர் சிந்தனைகள், வற்றாத ஊற்றாக வருங்காலத்தில் உதவும் என்பதை உணர்வார்கள்."**



**அயோத்திதாசர் ஒரு சிந்தனையாளராக மட்டுமின்றி - அவர் ஒரு மருத்துவராக, ஒரு பத்திரிகையாளராக, ஓர் இயக்கவாதியாக, பல்வேறு பரிமாணங்கள் உள்ளவராகத் திகழ்ந்திருக்கிறார். தாங்கள் ஆய்வு செய்த போது, அவருடைய பிற பரிமாணங்களைக் கண்டறிந்திருப்பீர்கள். அது குறித்துச் சொல்லுங்கள்.**

கிராம்சி என்னும் இத்தாலிய நாட்டு அறிஞர், அறிவுஜீவிகளை இரண்டு வகை யாகப் பிரிக்கிறார். ஒன்று Class Intellectuals அதாவது, வர்க்கத்தில் வேரூன்றியோர். தெரிந்தோ தெரியாமலோ, தனது வர்க்கப் பின்னணியில் மூழ்கி, அந்த வர்க்கக் கருத்து களையும் நலன்களையும் பிரதிபலிப்பவர். இரண்டாவது வகை, Organic Intellectuals அதாவது, தனது வர்க்கப் பின்னணியில் வேரூன்றியிருந்தாலும், அதனையும் கடந்து சிந்தித்து - முழு சமூகத்தின் நலன்களைத் தனது எண்ணங்கள் மூலம் நிலைநிறுத்து பவர்; தன் குழுமத்தின் நலன்களையும் பெரும் சமுதாயத்தின் நலன்களுடன் இணைத்தும் ஒன்றுபடுத்தியும் பார்ப்போர். அயோத்திதாசர் இந்த இரண்டாம் வகை யைச் சேர்ந்தவர். நீங்கள் சொல்வது போல, அவர் பல பரிமாணங்களைக் கொண்ட அறிவுஜீவியாகத் திகழ்கிறார். இப்பரிமாணங் கள் மேலோட்டமாகவே தென்படுகின்றன. ஆனால், இவற்றைத் தாண்டி அயோத்திதாசர் சிந்தனையில் பல தளங்கள் காணப்படுகின்றன. தன் குழும நலன்களை உள்ளடக்கிய இன்றைய பெரும் சமுதாயத்தின் நலன் என்னும் உரைகல் கொண்டு - தமிழ், இந்திய சமுதாயங்களின் பண்பாடு, வரலாறு, இலக்கியம், சமயம் ஆகியவற்றை அலசுகிறார். அவற்றை ஆய்ந் தெடுத்து இன்றைய தேவைக்காக கட்ட மைக்கிறார். அவருக்கென்று சிறப்புத்தளம் இல்லை. வாழ்க்கையின் எல்லாத் தளங்களுமே அவருக்குப் பாடம். ஏனெனில், அவரது நோக்கம், சமூகத்தின் ஒட்டுமொத்தமான நலனும் - முன்னேற்றமுமே.

அயோத்திதாசரை நான் இவ்வாறு வர் ணிக்கும்போது, நான் அவர் கூறும் எல்லா வற்றையுமே விமர்சனமின்றி ஏற்றுக் கொள் கிறேன்; அல்லது மற்றவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டுமென நினைக்கிறேன் என்றாகாது. ஆனால், அயோத்திதாசரின் எழுத்துகளை முழுமையாகப் படித்துணரும்போது, ஓர் புதிய கோணம் - முற்றிலும் நவீனமான கோணம், கண் ணோட்டம் உருவாகும் என்பது நிச்சயம். இன் றைய காலகட்டத்தில் எல்லா சமூக இயக்கங் களும், சிறப்பாக தலித் இயக்கங்களும் ஓரள வுக்கு மேல் முன்னேற முடியாமலும், முயற்சி செய்து பெற்ற சில நன்மைகளை நிலைநிறுத்த முடியாமலும் திணறுவதை நாம் காண்கிறோம். ஆனால், இரு துருவங் களாகப் பிரிந்துகிடக்கும், கலாச்சாரத் தளங்கள் அயோத்திதாசர் சிந்தனையால் கட்டாயமாக வளம் பெறும். மூன்றாவது உத்தி உருவாகவும் உறுதி பெறவும் வழிவகுக்கும்.

'அயோத்திதாசர் சிந்தனைகள்' வெளி வந்து அய்ந்தாண்டுகளுக்கு மேலாகின்றன. குறிப்பிட்ட அளவு பிரதிகளே அச்சடிக்கப் பட்டு வெளியாகியுள்ளதால் - பரவ வேண்டிய அளவுக்கு அது பரவவில்லை. பரவிய பிரதி களும் கவனமாக வாசிக்கப்படவில்லை என்றே தெரிகிறது. தமிழகத்தைப் பொருத்த மட்டிலும், சமுதாய முன்னேற்றத்தை விரும் பும் அறிவுஜீவிகள், அவர்கள் தலித்தாக இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி நேர்மையுள்ளவராக இருந்தால் - அயோத்தி தாசர் சிந்தனைகள், வற்றாத ஊற்றாக வருங் காலத்தில் உதவும் என்பதை உணர்வார்கள். இது, அவரைப் பின்பற்றிச் செல்வோருக்கும் - அவரிடமிருந்து மாறுபட்டுச் செல்வோருக் கும் பொருந்தும்.

**அயோத்திதாசர் முன்வைத்த தமிழ்த் தேசியம், இன்றைய நிலையில் எந்த அள வுக்குப் பொருந்தி வருகிறது?**

அய்யா ஆனைமுத்து அவர்கள், அயோத்தி தாசர் பற்றிய ஒரு மதிப்பீட்டுரையில், அயோத்திதாசரே முதன் முதலாக 'தமிழன்' என்ற அடையாளத்தை முன்வைத்தார் என்று குறிப்பிட்டார். அயோத்திதாசர் பணி செய்த காலம், கீழ்மட்டத்தினர் சிறப்பாக பறையர்கள் தங்களுக்கென நவீனத்தில் - புதியதொரு சமூக - அரசியல் அடையாளத்தைத் தேடி நின் றனர். திராவிடர், ஆதி திராவிடர், பஞ்சமர், பிள்ளை என்னும் பல்வேறு முன்வைப்புகளுக் கிடையே அயோத்திதாசர் 'தமிழன்' என்னும் அடையாளத்தை முன்வைக்கிறார். சாதியை விட்டொழித்தவன் தமிழன், ஆதித்தமிழன்; சாதியில் ஒட்டிக் கொண்டவன் பாதித்தமிழன், மீதித்தமிழன். ஏனென்றால் அவன் சாதித் தமிழன். இதுதான் பண்டிதர் பார்வை.

அதே காலகட்டத்திலும் அதற்குச் சற்றுப் பின்னும், இந்திய நாடெங்கும் உள்ள தாழ்த் தப்பட்ட குழுமங்களைச் சேர்ந்தோர், தங் களுக்கென புதுப் புது அடையாளங்களைத் தேடிக் கொண்டனர். 150க்கும் மேற்பட்ட அடையாள மாற்ற விண்ணப்பங்கள் செய்யப் பட்டதாக ஆராய்ச்சியாளர்கள் கணித்துள்ளனர். இவைகளில், ஒன்றிலாவது மொழி, பண்பாடு அனைத்தையும் சுற்றி வளைத்து உரிமை கொண்டாடும் அடையாளம் கோரப்படவில்லை.



படிப்பகம்

www.padippakam.com

ஆனால், அயோத்திதாசர் மட்டுமே 'தமிழன்' என்ற அடையாளத்தைத் துணிவுடனும் நம்பிக்கையுடனும் முன்வைக்கிறார்; சர்ச்சைக்கு உள்ளாக்குகிறார். ஓர் பரந்துபட்ட, தாழ்த்தப்பட்ட சமுதாயம், நவீன எழுச்சியின் காலகட்டத்தில் பெரியதொரு இனக்குழுவின் அடையாளத்தை மேற்கொள்ள முனைவது - அரசியல், தேசிய அரசியல் நடவடிக்கையாகும். தேசம் என்பது முன்னர் கூறியபடி, தள்ளப்பட்ட சமூகத்தினர் முன்னுக்கு இழுக்கப்பட்டு, எல்லாருக்கும் உரித்தான சமநிலையடைவதே. இந்த நிலைக்கு அயோத்திதாசர் தனது முன்னுரிமையைப் பிரகடனப்படுத்துகிறார்.

இது, இன்றைய நிலைக்கு எப்படிப் பொருந்தும் என்பதே கேள்வி! உலகமயமாகும் இந்நாளில் மொழிவழி தேசம், குறுகிய வட்டமாகாதா என்ற கேள்விக்கு இரண்டு பதில்கள் உள்ளன. ஒன்று, பண்பாட்டுக் கண்ணோட்டத்திலிருந்து; மற்றது அதிகாரக் கண்ணோட்டத்திலிருந்து. உலகமயமாகும் பொழுதே இன்னொரு இயங்கியலும் உடன்

**❝ தமிழ்த் தேசியமும், சமத்துவத்தை நோக்கிய தலித் எழுச்சியும் - ஒரே நாணயத்தின் இரண்டு பக்கங்கள். சமத்துவமில்லாத தமிழ்த் தேசியம், மேல் மட்டத்தினரின் வெற்றுக் கூக்குரலாகவே இருக்கும். ❞**

வருவது கவனிக்கத் தக்கது. நவீனத்தில் உருவான அரசியல் அமைப்புக்குப் பெயர் தேசம் - அரசு. சுருக்கமாக இதன் உட்கருத்து ஒரு அதிகாரம் - அரசு. இது கொள்கையளவில் உருவான ஒரு கற்பனை. ஆனால், உண்மையில் இன்று காணப்படுவது உலகெங்கும் பல பண்பாடு - ஒரு அரசு; அல்லது ஒரு பண்பாடு - பல அரசு. பொருளாதார ரீதியில் உலகம் ஓர்மையடையும் காலகட்டத்தில், பண்பாட்டு ரீதியில் ஒவ்வொரு பண்பாடும், இது காறும் ஒரு அரசுக்குள் இருந்தவை, தனக்கென தனியரசு கோரி போராட்டங்கள் நடத்துவது கண்கூடு. இப்போராட்டத்திலிருந்து வெகுசில தேச அரசுகளே தப்பியுள்ளன.

காரணம் என்னவெனில், தேசம் என்பது பண்பாடும், அதிகாரமும் ஒருங்கிணைந்த சமூக அமைப்பே. ஓர் அரசமைப்பில் பண்பாடுகளுக்கிடையில் பொருளாதாரம், தன்மானம் முதலியவற்றில் ஏற்றத்தாழ்வுகள் ஏற்படுவது தவிர்க்க முடியாததாகிறது. இதனைப் போக்க, தொடக்க காலத்தில் ஜனநாயகப் போராட்டங்கள் நடந்தாலும், இருக்கும் அரசியல் அமைப்புகளுக்குள் ஏற்றத்தாழ்வுகள் மறைய வழியில்லை. எனவே, தனிநாடு கோரிக்கை எழும்புகிறது. இது இன்றைய உலகில் ஏறக்குறைய எல்லா தேச - அரசுகளிலும் நடப்பவை. சமூக அறிவியலாளர் இதனை Internal Colonialism - உள்காலனியம் என்று கணித்திருக்கின்றனர். பன்னாட்டு அமைப்புக்குள் எல்லா பண்பாடுகளும், முன்னேற்றப்பாதை தடைபடுவதை உணர்கின்றனர். இது, பண்பாடு ரீதியான கண்ணோட்டம்.

ஆனால், தலித்துகளின் நிலையிலிருந்து பார்க்கும்போது, அதிகாரரீதியான கண்ணோட்டம் இதைவிட முக்கியத்துவம் அடைகிறது. பண்பாட்டுக் குழுக்கள் அதிகாரத்தின் சமபங்கீடே. அதிகாரம் சமநிலைப்படுத்தப்படுவதே தேசம் என்று முன்பு கண்டோம். நவீனத்திற்கு முற்பட்ட காலத்தில் படிநிலைப்படுத்தப்பட்ட சமூக அமைப்பு, மொழி - பண்பாடு மூலமாகவே உருவாக்கப்பட்டு, அவை மூலமாகவே நிலைநிறுத்தப்பட்டு, அவை மூலமாகவே திரும்பத்திரும்ப உருவாக்கப்படுகிறது. இந்நிலையை மாற்ற வரலாறு, மொழி, சமயம், பண்பாட்டு குறியீடுகளின் வாயிலாக உருப்பெற - ஏற்றத்தாழ்வுகள் ஒவ்வொன்றாக உருக்குலைக்கப்பட வேண்டும். இந்த உருக்குலைப்பு, எந்த வழியாக சமுதாயம் உருப்பெற்றதோ - அந்த வழியாகவே நடைபெற வேண்டும். அயோத்திதாசர் மொழியில் சொல்ல வேண்டுமானால், ''எந்த வழியாக நாம் தாழ்த்தப்பட்டோமோ - அதே வழியாகவே சென்றுதான் நாம் உயர முடியும்.''

இந்தியாவில் ஏற்றத்தாழ்வான வரலாற்று மூலம் உருவான சமுதாய அமைப்பு ஒன்றல்ல; பல. பிறப்பினால் ஏற்படும் ஏற்றத் தாழ்வுகளைக் கற்பிக்கும் சாதி / வர்ண முறைகள் ஒன்றல்ல, பல. சாஸ்திரங்களில் மட்டுமே ஓர்மையான வர்ண முறையைச் சந்திக்க முடியும். சமுதாயத்தில் அது பண்பாட்டுக்குப் பண்பாடு மாறுபட்டும் வேறுபட்டுமே வெளிப்படும். சாதியை ஒழிக்க, ஏற்றத் தாழ்வுகளை எதிர்கொண்டு சமூகத்தில் வெற்றி பெற முனையும் தனிநபர்களும், குழுக்களும் சாதி முறையை அதன் மாறுபாடான சமூகத் தளத்தில்தான் சந்திக்க வேண்டும். சாஸ்திரத்தில் அல்ல.

பெருவாரியான தலித் மக்களின் எதிர்காலம் சாதி ஒழிப்பில்தான் அடங்கியிருக்கிறது என்பதே என் முடிவு. இது உண்மையானால், சாதிமுறையின் பண்பாட்டு அம்சத்தை சந்தித்தே ஆகவேண்டும். பண்பாட்டுக்குள் அதிகார சமத்துவநிலை ஓங்குவதே தேசம் - தேசியம். எனவே, பண்பாட்டுக் குழுவின் அடிமட்டத்தில் இருக்கும் தலித்துகளின் முன்னேற்றமும் உயர்வுமே தேச உருவாக்கமும், தலித் விடுதலையுமாகும். இவை இரண்டும் ஒன்றேயன்றி இரண்டல்ல. படிநிலைப் படுத்தப்பட்ட பண்பாட்டை உருக்குலைத்து, சமநிலைப் பண்பாடு, அதாவது தேசம் உருவாவது தலித் எழுச்சியினால்தான் சாத்தியமாகும்.

மொழி, தனிப்பட்ட வரலாறு, பெருவாரி மக்களின் சமய நடவடிக்கைகள் இவற்றிற்குள்புகுந்தே இந்த தலித் எழுச்சி உயிரெடுக்க வேண்டும். அப்பொழுதுதான் பண்பாட்டுச் செயல்பாடுகள் மறைவதற்குப் பதிலாக மாறும்; சமநிலைநோக்கி உருவெடுக்கும், பண்பாட்டு அடிப்படையிலான சமத்துவமே நிலை நிற்கும். நவீன கொள்கையான சமத்துவம்,



அசமத்துவ பண்பாட்டுக்குள் ஆணியடித்து நிலைநிறுத்தப்பட வேண்டும். அப்பொழுதுதான் ஒட்டுமொத்தமாக எல்லா தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் விடுதலை கிட்டும்.

நமது சூழலில், தமிழ்த் தேசியமும் சமத்துவத்தை நோக்கிய தலித் எழுச்சியும் - ஒரே நாணயத்தின் இரண்டு பக்கங்களே. சமத்துவமில்லாத தமிழ்த் தேசியம், மேல் மட்டத்தினரின் வெற்றுக் கூக்குரலாகவே இருக்கும். தலித் போராட்டம், தமிழ்த் தேசியம் இல்லாவிட்டால் வரையறுக்கப்படாத, தனி நபர்களின் முன்னேற்றமாகவும், அடைந்த சாதனைகள் நிலைநிறுத்தப்படாமலே அழிந்து போகும். சமத்துவத்தை நோக்கிய போராட்டம், பண்பாட்டு வரையறுப்புக்குள் நிகழும்போது அதுவே தேசியமாகிறது.

- பேட்டி தொடரும்

நேர்காணல் : பாண்டியன்



படிப்பகம்

www.padippakam.com

"சாட்டையால - சவுக்கால அடிக்கிறது, தலையில் மண்ணை வாரிக் கொட்டுறது, சாணிப்பால் ஊத்துறது... இதெல்லாம் அந்தக் காலங்க! இப்ப அடிக்கு அடி, ரத்தத்திற்கு ரத்தம், எந்தக் கொம்பனும் - பனையடிக்குப்பம், வீராணம், சொரப்பூர் மக்கள் மேல கை வைக்க முடியாது"

# வரலாறாகும் வாழ்க்கை

## வீரஞ்செறிந்த பனையடிக்குப்பம் மக்கள்

■ பூங்குழலி

மக்களின் கிளர்ந்தெழுந்த போராட்டத்தின் மூலமே உரிமைகளை வென்றெடுக்க முடியும் என்பது, வரலாறு நமக்குச் சொல்லும் பாடம். ஒடுக்கப்பட்ட மக்களின் போராட்ட வரலாறு இன்னமும் முடிந்தபாடில்லை. அவர்களின் போர்க் குணமும் சற்றும் குறையவில்லை. மாறாக, அது கூர்மை பெற்றிருக்கிறது என்பதற்கு சாட்சியாகத் திகழ்கின்றன - பனையடிக்குப்பம், வீராணம் மற்றும் சொரப்பூர் கிராமங்கள். புதுவை மாநிலம் பாகூர் கொம்யூனைச் சேர்ந்த கிராமம் பனையடிக்குப்பம். அந்தக் கிராமத்தை ஒட்டியவாறே இரு புறமும் இருக்கின்றன - தமிழகத்தைச் சேர்ந்த கிராமங்களான வீராணமும் சொரப்பூரும். இந்த கிராமங்களின் பெயர்கள் வெளி உலகிற்குத் தெரிய வந்தது 1989 இல்தான்.

1989 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் தமிழக காவல் துறையினர், புதுவை மாநில எல்லைக்குட்பட்ட பனையடிக்குப்பம் கிராமத்தில் அத்துமீறி நுழைந்து, துப்பாக்கிச் சூடு நடத்தியதில் அக்கிராமத்தைச் சேர்ந்த ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த கந்தன், சேகர் ஆகியோர் கொல்லப்பட்டனர். அந்த ஆண்டு சொரப்பூர் திரவுபதியம்மன் கோயில் தீமிதி திருவிழாவை முன்னிட்டு துப்பாக்கிச் சூடு நடந்ததற்கு முன்னர், இருபது நாட்களாகவே ஊர் மக்களுக்கும் - சேரி மக்களுக்கும் சிறு சிறு மோதல்களும் சச்சரவுகளும் இருந்து வந்திருக்கின்றன. அதே நேரத்தில், இரு தரப்பினருக்குமிடையே சமரச முயற்சிகளும் நடந்திருக்கின்றன. பாதுகாப்பிற்காக இருபது காவலர்களும் சொரப்பூர் கிராமத்தில் நிறுத்தப்பட்டிருந்தனர்.



இந்நிலையில், 1.9.1989 அன்று பிற்பகல், ஊருக்கும் சேரிக்கும் இடையில் ஒரு பதட்டமான சூழல் நிலவியிருக்கிறது. சொரப்பூர் சேரிக்கு ஆதரவாக, வீராணம் மற்றும் பனையடிக்குப்பம் சேரி மக்களும் சென்றிருக்கின்றனர். கலவரம் ஏற்படாமல் தடுத்த காவலர்கள், மறுநாள் 2.9.1989 அன்று காலை சமரசம் பேசலாம் என்று அனைவரையும் கலைந்து போகச் செய்திருக்கின்றனர். ஆனால், 2.9.1989 அன்று அதிகாலை, மூன்று கிராம சேரி மக்களும் புதுவையைச் சேர்ந்த பனையடிக்குப்பத்தில் கூடி இருந்த நிலையில் - தமிழக காவல் துறையினர், சொரப்பூர் சேரி மக்களைத் தேடிக் கொண்டு பனையடிக்குப்பம் கிராமத்தில் புகுந்தனர்.

எதிர்பாராத இந்தத் தாக்குதலால் திகைத்த பனையடிக்குப்பம் மக்கள், 'இது புதுவைப் பகுதி, இங்கு ஏன் பிரச்சனை செய்கிறீர்கள்?' என்று கேட்டதை காதில் வாங்காமல் காவல் துறையினர் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர். அதில் பனையடிக்குப்பத்தைச் சேர்ந்த கந்தன் மற்றும் சட்டக் கல்லூரி மாணவரான சேகர் ஆகியோர் கொல்லப்பட்டனர். அதிலும், கந்தன் குண்டடிபட்டு அந்த இடத்திலேயே மரணமடைந்தாலும், சேகருக்கு காலில் மட்டுமே குண்டடிபட்டு இருக்கிறது. நகர முடியாமல் அமர்ந்துவிட்ட சேகரை - காவல் துறையினர் சூழ்ந்து கொண்டு, துப்பாக்கியின் பின்புறத்தால் அடித்தே கொன்றுள்ளனர்.

"காலங்காத்தால திடீர்னு ஒரே சத்தம். தடதடன்னு போலிசுகாரங்க ஓடி வந்தாங்க. எங்களுக்கு ஒண்ணுமே புரியல. தமிழ் நாடு போலிசு ஏன் நம்ம ஊருக்குள்ள நுழையுதுன்னு திகைச்சுப் போயிட்டோம். முன்னால வந்த போலிசுகாரங்க கிட்ட போய், எங்க ஊரு பெரிய மனுசங்க - இது புதுவை பகுதி இங்க எதுக்கு வந்திருக்கீங்கன்னு கேட்டதுக்கு, அவங்களுக்கும் ஒரே அடி. திடீர்னு பார்த்தா வேட்டுச் சத்தம், சுடறாங்க சுடறாங்க ஓடு ஓடுன்னு சனம் எல்லாம் சிதறி ஓடுது. கொல்லி வேலைக்குப் போன கந்தன் சத்தத்த கேட்டு ஓடி வந்தபோது, குண்டு அவன் மேலே பாய்ஞ்சிருச்சு. அந்த எடத்துலேயே கீழ விழுந்துட்டான்" சம்பவத்தை நேரில் பார்த்த பனையடிக்குப்பத்தைச் சேர்ந்த அறுபது வயதான லட்சுமி விவரிக்கிறார்.

காவல் துறையினர் அத்துடன் நிற்கவில்லை. கலவரம் நடந்ததாகவும்,



படிப்பகம்

www.padippakam.com



சின்னராசு

❝ உழுபவனுக்கே நிலம் என்ற சட்டத்தை இயற்றிய அரசு, அதனை நடைமுறைப்படுத்தாமல் சாதி இந்துக் கள் பக்கமே நின்றது. நாங்களும் விடல. வைக்கோல் போர கொளுத்துவோம். அறுவட செய்ய விட மாட்டோம்; செஞ்ச பயிர தூற்ற விட மாட்டோம். அதனால விளைச்சல் பூரா அப்படியே மக்கிப் போச்சு. நாங்கள் ஒரு நூறு இருநூறு பேரு திரண்டு, ரெட்டி மாருங்க அறுத்து வைச்சிருந்த நெல்ல வாரிட்டு வந்துட்டோம். அப்புறம்தான் அவுங்க வழிக்கு வந்தாங்க. ❞



கந்தனின் தாய் கமலம்

அதனால்தான் துப்பாக்கிச்சூடு நடத்த வேண்டி வந்ததாகவும் காட்டுவதற்காக, சொரப்பூரில் இருக்கும் சில வீடுகளை காவல்துறையினரே கொளுத்தியுள்ளனர். இச்சம்பவத்தைப் பற்றி விசாரிக்க பல்வேறு அமைப்பினரும் சேர்ந்து உண்மை அறியும் குழு ஒன்றை அமைத்தனர். இக்குழுவினர், சம்பவம் நடந்த அய்ந்து நாட்களுக்குள் அக்கிராமங்களுக்குச் சென்று மக்களைச் சந்தித்து, நடந்த உண்மைகளைக் கண்டறிந்து ஓர் அறிக்கையை வெளியிட்டனர்.

அந்த அறிக்கையின் அடிப்படை யில், மனித உரிமை அமைப்புகள், அரசி யல் கட்சிகள் மற்றும் சமுதாய இயக்கங் களும் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதர வாகப் போராடின. துப்பாக்கிச் சூடு நடத்திய தமிழக காவல் துறை மீது நட வடிக்கை எடுக்கவும், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நீதி கிடைக்கவும் தொடர் போராட்டங்கள் நடத்தப்பட்டன. அதன் பிறகு புதுவை அரசு - இறந்த கந்தன், சேகர் ஆகியோரின் குடும்பத்தினருக்கு வேலை அளித்தது. ஆனால், துப்பாக்கிச் சூடு நடத்திய தமிழக காவல்துறையினர் மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இந்த துப்பாக்கிச் சூடு ஒரு நாள் சம் பவம் அல்ல. இதற்குப் பின்னால் ஒரு நெடிய போராட்ட வரலாறே இருக்கிறது. 1970 களில் தொடங்கி நில உரிமை மற்றும் கூலி உயர்வு கிளர்ச்சிகளை இக்கிராமத்தினர் தொடர்ந்து நடத்தி வந்திருக்கின்றனர். ''ஒண்ணா ரெண்டா, எல்லாத்துக்கும் போராட்டம் நடத்துவோம். எந்தப் பிரச்சி னையானாலும் மூணு சேரிய சேர்ந்த இளை ஞர்களும் ஒண்ணு சேர்ந்து பிரச்சனை பண்ணுவோம்'' இப்படிச் சொல்லும் சந் திரசேகரனுக்கு அய்ம்பத்தி மூன்று வய தாகிறது. வீராணம் கிராமத்தைச் சேர்ந்த இவர், மக்கள் போராட்டத்தில் தீவிரமாகப் பங்கேற்றதற்காக சிறைவாசம் அனுப வித்தவர். அவரது குடும்பம் சுதந்திரத்திற்கு முந்தைய காலகட்டத்திலேயே - கம்யூ னிஸ்டு குடும்பமாக இருந்திருக்கிறது.

''அந்தக் காலத்திலேயே எங்க வீட்டுக்கு 'சோவியத் நாடு', 'சோவியத் பலகணி' போன்ற பத்திரிகைகளும், காரல் மார்க்ஸ், ஏங்கெல்ஸ், லெனின் போன்ற வர்களின் புத்தகங்களும் வரும். 69 - 70க்கு முன்னால வீராணத்தில எங்க வீட்டை யும் சேர்த்து மூணு பேரு கிட்டதான் நிலம் இருந்தது. பனையடிக்குப்பத்தில ஒரே ஒருத்தரு; சொரப்பூருல யாருக்கும் கிடையாது'' விவரிக்கிறார் சந்திரசேகரன்.

''எல்லாரும் கூலி வேலைக்குதான் போவோம். ஒரு ரெட்டிமாரு வீட்டுல நாலு பேரு அஞ்சு பேருன்னு எங்க ஆளுங்க வேலை பார்ப்பாங்க. பணக் கூலிய வாங்கி என்னங்க செய்யறது? வாங்குனதுல பாதிய குடிச்சே அழிச்சிரு வாங்க நம்ம ஆளுங்க. அதனால ஒரு கட் டத்துல, அதாவது 1971 இல் தானியத்த கூலியா கேட்டோம்'' என்கிறார் பனை யடிக்குப்பத்தைச் சேர்ந்த அய்ம்பத்தி ரெண்டு வயதான சின்னராசு.



லட்சுமி

''தானியம் தர முடியாதுன்னு ரெட் டிமாருங்க அவங்களே களத்தில் இறங்கி வேல செஞ்சாங்க. நாங்க விட மாட்டோம். அவங்க நாத்து நட்டா, நாங்க அதக் கலைச் சிட்டு நாங்க புதுசா நடுவோம். அதென்ன எங்க வேலைய அவுங்க செய்யறதுன்னு செய்ய விடமாட்டோம். அறுவடையை எதிர்த்து மறியல் பண்ணோம்'' என்கிறார் முத்துலட்சுமி, நாற்பத்தியெட்டு வய தாகும் இவரும் பனையடிக்குப்பத்தைச் சேர்ந்தவர்தான்.

பல மாதங்கள் தொடர்ந்து போராடிய பிறகு ஒரு வழியாக இறங்கி வந்த சாதி இந்துக்கள், ஆளுக்கு அய்ந்து லிட்டர் நெல் தர ஒப்புக் கொண்டனர். ஆனால், அதிலும் சிக்கல் எழுந்தது. எட்டு ஆட்கள் வேலை செய்ய வேண்டிய இடத்தில் முப்பது பேரை வேலைக்கு அமர்த்தி, எட்டு பேருக்கு உண்டான கூலி நெல்லை முப்பது பேரையும் பங்கிட்டுக் கொள்ளச் செய்தனர். இதனால் ஆளுக்கு ஒரு லிட்டர் ஒன்றரை லிட்டர் நெல் மட்டுமே கிடைக் கும். லிட்டர் கணக்கில் என்பதால், தலை தட்டி மட்டமாகவே அளப்பார்கள். கிடைத்த நெல்லை பிற பொருள்கள் வாங்க கடைகளில் பண்டமாற்று செய்தால், அங்கு குவித்து அளந்தே எடுத்துக் கொள் வார்கள். அதனால் மக்கள் பெரும் நட்ட மடைந்தனர். அதற்காக குவித்து அளந்தே கூலி கொடுக்க வேண்டும் என ஒரு போராட் டம் நடத்தி அதிலும் வெற்றி பெற்றனர்.



படிப்பகம்

www.padippakam.com

''இந்தப் போராட்டத்தில்தான் அது வரைக்கும் ஒதுங்கியே இருந்த சொரப்பூர் மக்களும் சேர்ந்துக்கிட்டாங்க'' என்கிறார் சந்திரசேகரன். இந்த நிலையில் தான் 1976 ஆம் ஆண்டு 'உழுபவனுக்கே நிலம்' என்ற சட்டம் இயற்றப்பட்டது. அதே சமயத்தில் புதுவை அரசு, குத்தகைச் சட்டம் கொண்டு வந்தது. அதன்படி, விளைச்சலில் நிலவுடைமையாளர்களுக்கு நாற்பது பங்கும், குத்தகைக்காரர்களுக்கு அறுபது பங்கும் உரிமை உண்டு என சட்டம் கூறியது. இந்தச்சட்டம், ஒடுக்கப்பட்ட மக்கள் அணிதிரள தூண்டுகோலாக இருந்தது. தங்களுக்கு உரிமையான பங்கை அவர்கள் கேட்டபோது, நிலவுடைமையாளர்களான சாதி இந்துக்கள், இந்த ஏற்பாட்டை



முத்துலட்சுமி

ஒப்புக் கொள்ளவில்லை. சட்டத்தை இயற்றிய அரசு, அதனை நடைமுறைப்படுத்தாமல் சாதி இந்துக்கள் பக்கமே நின்றது.

இந்நிலையில் புதுவையிலேயே முதன் முதலாக பனையடிக்குப்பம் கிராம மக்கள்தான் அச்சட்டத்தை நடைமுறைப் படுத்தக் கோரி கிளர்ந்தெழுந்தனர். ஆனாலும், சாதி இந்துக்கள் எளிதில் இணங்கி விடவில்லை. ''நாங்களும் விடல. வைக்கோல் போர கொளுத்துவோம். அறுவடை செய்ய விடமாட்டோம். அறுவடை செஞ்ச பயிர தூற்ற விட மாட்டோம். அதனால அறுவடை செய்யாமலும், செஞ்சத தூற்றாமலும் விளைச்சல் பூரா அப்படியே மக்கிப் போச்சு. ஒரு முடிவே வராம இழுத்துக்கிட்டே இருந்துச்சு'' என்கிறார் சந்திரசேகரன்.

''ஒரு நாள் நாங்கள் ஒரு நூறு இருநூறு பேருதிரண்டோம். பக்கத்துல வீராணம், சொரப்பூர்ல சேரி மக்களும் எங்களுக்கு ஆதரவா வந்தாங்க. எல்லோரும் நம்ம கம்யூனிஸ்டு தலைவரு வையாபுரி தலைமையில போயி, ரெட்டிமாருங்க அறுத்து வைச்சிருந்த நெல்ல வாரிட்டு வந்துட்டோம். அப்புறம்தான் அவுங்க வழிக்கு வந்தாங்க. ரெட்டிமாருங்க அவுங்க கிட்ட வேலை செய்யறவங்களுக்கு ஆளுக்கு காணி நிலம்னு பிரிச்சு கொடுத்தாங்க'' என்கிறார் சின்னராசு.

வாழ்வாதாரமான நில உரிமைக்கானப் போராட்டங்கள் ஒரு புறம் நடந்த அதே வேளையில், கோயில் உரிமை போன்ற சமூகப் பிரச்சனைகளுக்காகவும் - மிகப் பெரிய போராட்டங்களை

**❝ மூணு சேரியையும் சேர்ந்த இளைஞர்கள் வெளிப்படையா அறிவிச்சுட்டு, பத்தாம் நாள் திருவிழா அன்னைக்கு கோயிலுக்குள்ள போனோம். எங்களுக்கு ஆதரவா மூணு சேரி சனமும் இருக்குங்கிற பயத்தில - மேல் சாதிக்காரங்க ஒண்ணும் பிரச்சினை பண்ணாம ஒதுங்கி நின்னாங்க. ❞**

நடத்தியிருக்கின்றனர் இந்த மக்கள்.

''அந்தக் காலத்தில ஊருல இருக்கிற திரவுபதியம்மன் கோயில் திருவிழான்னா சேரி மக்கள் யாரும் கிட்டகூட போக முடியாது. தூரத்தில இருந்தே சாமிய கும்பிட்டு வந்திரணும். சாமி ஊர்வலம் சேரிய சுத்திட்டுப் போகும். அப்ப சேரி எல்லைல எங்க சனம் எல்லாம் - ரோட்டையே கழுவி கோலம் போட்டுக் காத்திருப்பாங்க. ஆனா அந்தப் பக்கம் வந்தவுடன மேளம் அடிக்கிறதகூட நிறுத்திட்டு, சத்தம் இல்லாம சாமிய தூக்கிட்டு ஓடுவாங்க. எங்க சாமி மாரியம்மன் திருவிழா சமயத்தில அவங்க தெரு வழியா வந்தா, கதவு சன்னல் எல்லாம் இறுக்க மூடிட்டு உள்ள உட்காந்துக்குவாங்க. தீமிதி நடக்கும். நாங்க அந்தப் பக்கம் கூட போக முடியாது. மேல் சாதிய சேர்ந்த ஒராளு கையில சாட்டையோட தீமிதி நடக்கிற இடத்த சுத்தி நடந்துட்டு இருப்பாரு. சேரி ஆளுங்க யாராவது கண்ணுல பட்டா போதும். உடனே சாட்டையால அடி வெளுத்திடுவாரு.

1971 க்கு அப்புறம் கூலி உயர்வுக்காக நிறைய போராட்டங்கள நடத்தி எங்களுக்கு ஓரளவு தைரியம் வந்திருந்த நேரம். முதன் முதலா 1976 இல் ஞானப்பிரகாசங்கிறவரும் அவருடைய மச்சான் பக்கிரிங்கிறவரும், பண்டசோழ நல்லூர் திரவுபதி அம்மன் கோயிலுக்குள்ள போனாங்க. அதப் பார்த்த மேல் சாதிக்காரங்க, அவங்கள அடிக்கிறதுக்குத் துரத்துனாங்க. தொரத்திட்டு வந்தவங்க, செயின



தமிழரசன்

அறுத்துட்டு ஓடுறான்னு கத்திட்டே வந்தாங்க. அதக் கேட்டு உண்மையிலேயே திருடன்தான் போலன்னு எங்க ஆளுங்களே அவுங்கள பிடிச்சு கொடுத்துட்டாங்க. அன்னைக்கு அவங்கள கட்டி வெச்சு செம அடி. அதோட திருடன்னு போலிசுலயும் பிடிச்சு கொடுத்திட்டாங்க.

அடுத்த வருசம் ஒரு பிரச்சினையும் இல்ல. ஆனா அதுக்கு அப்புறம் 1978 இல் நாங்க, மூணு சேரியையும் சேர்ந்த இளைஞர்கள் வெளிப்படையா அறிவிச்சுட்டு, பத்தாம் நாள் திருவிழா அன்னைக்கு கோயிலுக்குள்ள போனோம். எங்களுக்கு ஆதரவா மூணு சேரி சனமும் இருக்குங்கிற பயத்தில - மேல் சாதிக்காரங்க ஒண்ணும் பிரச்சினை பண்ணாம ஒதுங்கி நின்னாங்க. அதோட இனிமே கோயிலுக்குள்ள வாங்க. நாங்க ஒண்ணும் வர வேண்டான்னு சொல்லலியேன்னு சொல்லிட்டு, பத்து நாள் திருவிழால ஒரு நாள் திருவிழாவ நாங்களே நடத்தவும் ஒத்துக்கிட்டாங்க. அன்னைக்கு நாங்க தீமிதி நடக்கிற இடத்துக்கும் போனோம். தேரையும் வடம் பிடிச்சு இழுத்தோம். எங்கள யாரும் சாட்டையால அடிக்கல. போலிசுகாரங்களுக்கு எங்க மேல எப்போதுமே கடும் கோபம் உண்டு. அதுக்குக் காரணம் இருக்கு. நாங்க மேல் சாதிக்காரங்கள மட்டும் எதிர்த்துப் போராடல. பலமுறை போலிசுகாரங்ககிட்டயும் மோதியிருக்கோம்'' என்கிறார் சின்னராசு.

அக்காலங்களில் காவல் துறையினர், இரவு நேரங்களில் சேரிகளில் புகுந்து வீட்டு வாசலில் உறங்கிக் கொண்டிருக்கும் மக்களை எழுப்பி, குடித்திருக்கிறார்களா என்பதைக் கண்டறிய வாயை ஊதச் சொல்வார்கள். குடித்திருந்தால் உடனே



படிப்பகம்

www.padippakam.com

அவர்களைக் கைது செய்து வழக்கும் போட்டு விடுவார்கள். மக்கள் எவ்வளவு கெஞ்சினாலும் கேட்க மாட்டார்கள்.

''ஒரு நாள் ராத்திரி அப்படித்தான் போலிசுகாரங்க வந்து குடிச்சிருக்காங்களான்னு - எங்க ஆளுங்க ஒரு நாலஞ்சு பேர கூட்டிட்டுப் போயிட்டாங்க. அப்ப அந்த போலிசுகாரரு ஒருத்தர் தனியா எங்க சனங்க கிட்ட மாட்டிக்கிட்டாரு. அவர வாய ஊதச் சொல்லி எங்க சனங்க கேட்டாங்க. அவரும் குடிச்சிருந்தாரு. அவ்வளவுதான். அவர சனங்க பிடிச்சு வெச்சுக்கிட்டாங்க. வண்டிக்குப் போன மத்த போலிசுகாரங்க, அவங்க ஆளுல ஒருத்தர காணோம்னு தேடிட்டு வந்தாங்க. மக்கள் இவர கொண்டு போய் அங்க நிறுத்தி, இவரும்தான குடிச்சிருக்காரு; அதனால நீங்க எங்க ஆளுங்கள விட்டாதான் நாங்க இவர விடுவோம்னு தகராறு பண்ணி மக்கள் விடுவிச்சாங்க'' என்கிறார் சந்திரசேகரன்.

தமிழக காவல் துறையினருடன் அடிக்கடி பிரச்சனை ஏற்பட்டதால், அம்மக்கள் மீதும் கோபம் கொண்டிருந்த அவர்கள் ஒரு நாள் திட்டமிட்டு ஒரு வேன், மற்றும் ஒரு லாரியில் வந்து அவ்வூரைச் சூழ்ந்து கொண்டனர். அப்போது ஒரு அதிகாரி மட்டும் ஊருக்குள் சென்று சாட்டையை எடுத்து சுழற்றியவாறு - 'வாங்கடா இப்ப' என்றபடி மிகவும் கேவலமாகப் பேசியிருக்கிறார். பொறுத்துப் பொறுத்துப் பார்த்த மக்கள், அவரைச் சுற்றி நெருங்கியிருக்கின்றனர். அவர் சாட்டையை சுழற்றிய வேகத்தில் நெருங்கிய அனைவருக்கும் அடி விழுந்தது. அதையும் மீறி ஒருவர் சாட்டையை இறுக்கமாகப் பிடித்துக் கொள்ள, மக்கள் அனைவரும் அந்தக் காவல் துறை அதிகாரியைச் சூழ்ந்து கொண்டு அடித்திருக்கின்றனர். அதைப் பார்த்த அவரைக் காப்பாற்ற வந்த பிற காவலர்களுக்கும் சரியான அடி விழுந்திருக்கிறது. அவர்கள் வந்த வாகனங்களும் சேதமடைய, உயிர் பிழைத்தால் போதுமென தமிழக காவல் துறையினர் வாகனங்களை கிளப்பிக் கொண்டு தப்பி ஓடியிருக்கின்றனர்.



சேகர்

இப்படி பல நிகழ்ச்சிகளை சொல்லிக் கொண்டே போகிறார்கள் அக்கிராமத்து மக்கள். ஆனால், வேறு எந்த மக்களுக்கும் இல்லாத துணிச்சல் இவர்களுக்கு மட்டும் எப்படி வந்தது? இது எப்படி சாத்தியமானது?

''இன்னைக்கு நாங்க இந்த அளவுக்கு நல்லா இருக்கோம்னா, அதுக்கு காரணம் ஒரே ஒருத்தர்தாங்க - தோழர் தமிழரசன்'' சொல்லும்போதே குரல் உடைந்து அழத் தொடங்கிவிட்டார் சின்னராசு. இவர் குறிப்பிடும் தமிழரசன் வேறு யாருமல்ல. நக்சலைட் இயக்கத் தலைவராக தமிழகத்தின் கிராமங்களில் எல்லாம் - ஒடுக்கப்பட்ட மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி, 1987 இல் பொன் பரப்பியில் கொல்லப்பட்ட அதே தமிழரசன்தான். அவர் இறந்து பதினெட்டு ஆண்டுகளுக்குப் பிறகும் அவரை நினைவுகூர்ந்து, அவரது இழப்பை நினைத்து கண்ணீர் சிந்துகின்றனர். 1969 இல்தான் முதன் முதலாக வீராணத்திற்கு வந்திருக்கிறார் தமிழரசன். அன்று முதல் கிட்டத்தட்ட பத்து ஆண்டுகளுக்கும் மேலாக மூன்று கிராம மக்களுடனும் பழகி, அவர்களது உரிமைகளை எடுத்துரைத்து, அவர்களின் அனைத்துப் போராட்டங்களுக்கும் துணை நின்றிருக்கிறார்.

''அப்பல்லாம் வீராணம், சொரப்பூர், பனையடிக்குப்பம் மூணும் தனித்தனியா ஒண்ணுக் கொண்ணு சம்பந்தம் இல்லாமதான் இருக்கும். இங்கிருந்து பக்கத்துல இருக்கிற மத்த ஊருக்குப் போறதுன்னாகூட, ஏதோ வேற நாட்டுக்குப் போற மாதிரி மலைப்பா இருக்கும். தமிழரசன் வந்த பின்னாலதான் மூணு ஊரு இளைஞர்கள் கிட்டயும் ஒரு ஒத்துமைய உண்டு பண்ணாரு. எந்த

**❝ போலிசுகாரங்களுக்கு எங்க மேல எப்போதுமே கடும் கோபம் உண்டு. அதுக்குக் காரணம் இருக்கு. நாங்க மேல் சாதிக்காரங்கள மட்டும் எதிர்த்துப் போராடல. பலமுறை போலிசுகாரங்ககிட்டயும் மோதியிருக்கோம் ❞**

## “என் கண்ணு முன்னாலயே கொன்னுப் போட்டாக”

கூலி விவசாயியான கந்தன், காவல் துறையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட போது அவருக்கு வயது 28. அவரது மனைவி ஏகவள்ளிக்குபுதுவைஅரசுவேலை கொடுத்தது. தற்போது அவர் கரையாம் புத்தூர் பள்ளியில் கடைநிலை ஊழியராகப் பணிபுரிந்து வருகிறார். கந்தனின் தாய் கமலமும் தங்கை நாகவள்ளியும் தற்போது பனையடிக்குப்பத்தில் வசித்து வருகின்றனர். ''என்ன அனாதையாக்கிட்டு என் புள்ளைய என் கண்ணு முன்னாலயே சுட்டுக் கொன்னுப் போட்டாங்க பாவிங்க'' என கதறுகிறார் கந்தனின் தாய் கமலம். நாகவள்ளி கூலி வேலைக்குப் போய் அதில் வரும் வருமானத்தில் தன் தாயையும் தனது இரு குழந்தைகளையும் கவனித்துக்கொள்கிறார். ''என் அம்மாவுக்கு மாசம் ஒரு பத்து ரூவாய்க்கு வழி ஏற்படுத்துனா போதாதாங்க. அவங்க பாட்ட அவங்க பார்த்துக்குவாங்க'' என்கிறார் நாகவள்ளி. ''இன்னைக்கு நான் இந்தக் கூரை வீட்ட மராமத்து பண்ணகூட வழியில்லாம ஒழுகிற வீட்டுல பொண்ணு சம்பாதியத்துல உட்கார்ந்திருக்கேன். வீடு கட்ட அரசாங்கம் ஏதோ காசு கொடுக்குதாமே. அது கிடைச்சாலாவது பரவாயில்ல. பாண்டிக்குப் போய் ஏம்.எல்.ஏ.வப் பார்த்து சொல்லலாம்னா பஸ்சுக்குகூட காசு இல்ல'' அழுகையினூடே சொல்கிறார் கமலம்.

அதைப் போலவே, சட்டக் கல்லூரி மாணவரான சேகர் இறக்கும் போது, அவருக்கு வயது 25. அவரும் பனையடிக்குப்பத்தைச் சேர்ந்தவர்தான். புதுவை அரசு அவரது அண்ணன் சந்திரனுக்கு வேலை கொடுத்தது. மடுகரை பள்ளியில் காவல்காரராகப் பணிபுரிந்தார். ''அவரு 1992 இல் இறந்துட்டாருங்க. அதுக்கப்புறம் ரொம்ப நாளா அலஞ்சதுக்கு அப்புறம் 1997இல் தான் எனக்கு வேலை கொடுத்தாங்க. அதுவும் பார்ட்டைம்தான். என் பிள்ளைங்க நாலும் படிக்குதுங்க. இந்த வருமானத்துல தான் எல்லாத்தையும் பார்த்துக்க வேண்டியிருக்கு. வேலய பெர்மனண்டு பண்ணிக் கொடுத்தாங்கன்னா நல்லாயிருக்கும்'' என்கிறார் சேகரின் அண்ணி பாப்பாத்தி. தற்போது அவர் கல்மண்டபம் பள்ளியில் பகுதி நேர கடைநிலை ஊழியராகப் பணி புரிந்து வருகிறார். ■



படிப்பகம்

www.padippakam.com

பனையடிக்குப்பம், வீராணம், சொரப்பூர் கிராமங்களில் ஏறக்குறைய 700 குடும்பங்கள் உள்ளன. இது, செழிப்பான விளைநிலங்கள் கொண்ட விவசாய பூமி. புதுச்சேரி விடுதலைப் போராட்டத்தின் போது, பொதுவுடைமை இயக்கத் தலைவர் வ. சுப்பையா அவர்களுக்கு அடைக்கலம் கொடுத்துப் பாதுகாத்தது இக்கிராம மக்கள்தான். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி செல்வாக்குடன் இருந்த பகுதி. நக்சலைட் இயக்கம், இங்கு ஆழமாக வேரூன்றியதும் குறிப்பிடத்தக்கது. தமிழக - புதுச்சேரி காவல் துறையின் "போர்க்குணமிக்க கிராமங்களுக்கான" வரைபடத்தில், இக்கிராமங்களுக்கு நிரந்தர இடமுண்டு.

ஊருல பிரச்சனைனாலும் மூணு ஊரும் சேர்ந்து போராடுறதுங்கிறது, அவரு ஏற்படுத்திக் கொடுத்ததுதான். அதுதான் இன்னைக்கு வரைக்கும் எங்களக் காப்பாத்துது'' என்கிறார் சந்திரசேகரன்.

ஏற்கனவே சாதி ஆதிக்கம், நிலவுடைமை சமுதாயத்தின் அழுத்தம் ஆகியவற்றினால் பாதிக்கப்பட்டிருந்த அம்மூன்று கிராமங்களும், நக்சலைட் இயக்கம் அங்கு வேரூன்றிய பிறகு - தமிழக காவல் துறை மற்றும் உளவுத் துறையின் கண்காணிப்பையும் அடக்குமுறையையும் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. இதுவே அம்மக்களிடையே ஓர் ஒற்றுமையையும் விழிப்புணர்வையும் அடக்குமுறைகளை சந்திக்க துணிவையும் ஏற்படுத்தியது. அதிகார பலம் மட்டுமின்றி ஆயுத பலமும் கொண்ட காவல் துறையையே எதிர் கொண்டு வெற்றி பெற முடியுமானால், வேறு எந்த ஆதிக்கச் சக்தியையும் நிச்சயம் எதிர்கொள்ள இயலும் என்ற நம்பிக்கையை அச்சூழல் அம்மக்களுக்கு அளித்தது.

''தமிழரசன் மட்டும் இல்லைன்னா, நாங்க இன்னைக்கும் அதே பணக்கூலிக்குதான் கஷ்டப்பட்டுக்கிட்டு இருந்திருப்போம். அவருதான் எங்களுக்கு தைரியம் கொடுத்து, ஊக்கம் கொடுத்துப் போராட்டம் நடத்த வைச்சாரு. அரைக் காணி நிலத்துக்கு இவ்வளவு கூலின்னு அவங்க பேசினா, டேப் வெச்சு அளந்து சரியா வேல பார்ப்போம். அவங்க மட்டும் கூலிய அளந்துதான் கொடுக்கிறாங்க. இப்படி நாங்க தொடர்ந்து ஒவ்வொண்ணுக்கும் போராட்டம் நடத்துனதால, மேல் சாதிக்காரங்களால இங்க வாழவே முடியாம போச்சு. அவங்க கிட்ட வேல செஞ்சவங்களையே கூப்பிட்டு, இருக்கிறத கொடுன்னு நிலத்த எல்லாம் பிரிச்சு வித்துட்டு டவுனுக்குப் போயிட்டாங்க. இப்ப தொண்ணூறு சத நிலம் எங்க ஆளுங்க கையிலதான் இருக்கு'' என்கிறார் சின்னராசு.

இதனால் வீராணம், பனையடிக்குப்பம், சொரப்பூர் கிராமங்களில் உள்ள ஒடுக்கப்பட்ட மக்களில் பெரும்பான்மையோர், குறைந்த பட்சம் ஆளுக்கு அரைக் காணி நிலமாவது வைத்துக் கொண்டு விவசாயம் செய்து வருகின்றனர். ஊரின் நீர் நிலைகளான ஏரி, குளம், குட்டை போன்றவை தற்போது இவர்களின் கட்டுப்பாட்டிலேயே இருக்கின்றன. இன்னமும் கூலி விவசாயிகளும் உள்ளனர் என்ற போதும் - தற்போது கூலிப் பிரச்சனைகள் பெரிதாக எழுவதில்லை. ஆதிக்க சாதியினரை சார்ந்திருக்க வேண்டிய அவசியமில்லாத நிலையில், அடுத்த தலைமுறையினர் கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் கவனம் செலுத்தி வருகின்றனர். ஒவ்வொரு குடும்பத்திலும் கல்வி பயிலும் பிள்ளைகள், பரவலாக அரசு வேலையில் இருக்கும் மக்கள் என ஒரு நம்பிக்கையான சூழல் இங்கு நிலவுகிறது. நில உரிமை என்பது அம்மக்களுக்கு அளித்திருக்கும் இத்தன்னம்பிக்கை ஒன்றே, பஞ்சமி நில மீட்பு போன்ற போராட்டங்களின் தேவையை மிக அழுத்தமாக உணர்த்துகிறது.

''ஒரு ஏழெட்டுத் தலைமுறைக்கு முன்னால எங்கிருந்தோ இங்க வந்தவங்க, எங்க நிலத்த பூரா பிடுங்கிக்கிட்டாங்க. அவங்களா நிலத்த சீர் செஞ்சு, ஏரி குளம் வெட்டி விவசாயம் பண்ணாங்க? எங்க மக்களோட மண்ணுங்க அது. அவங்க உழைப்புல விளைஞ்ச மண்ணு. அது இன்னைக்கு திரும்பவும் எங்க கைக்கே வந்திருச்சு'' என்கிறார் சந்திரசேகரன்.

இந்த உரிமைகளை அடைய அவர்கள் பட்ட அடிகளும், இழப்புகளும் சாதாரணமானவை அல்ல. தங்களின் உரிமைகளுக்காகப் போராடி, பல தியாகங்கள் செய்தவர்களையும் உயிர் நீத்தவர்களையும் அவர்கள் இன்னமும் நினைவு கூர்கிறார்கள். 1989 இல் கொல்லப்பட்ட கந்தன், சேகர் இருவருக்காக ஊர் மய்யத்தில் ஒரு நினைவுத் தூணை, அடுத்த ஆண்டே எழுப்பியுள்ளனர். அம்பேத்கர் நூற்றாண்டைத் தொடர்ந்து ஒடுக்கப்பட்ட மக்களின் எழுச்சியின் தாக்கம், இக்கிராமங்களிலும் ஏற்பட்டுள்ளது. சில ஆண்டுகளுக்கு முன் இத்தியாகிகளின் நினைவுத் தூணிற்கு அருகே அம்பேத்கர் சிலை நிறுவப்பட்டுள்ளதே இதற்கு சான்று.


சேகர், கந்தன் நினைவாக...

இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகும் அவர்களின் போராட்டம் ஓயவில்லை என்பதுதான் வேதனை. இன்னமும் அங்கு தீண்டாமைக் கொடுமை நிலவுகிறது. சாதி இந்துக்கள் வீடுகளில் சேரி மக்கள் அனுமதிக்கப்படுவதில்லை. சொரப்பூர், பண்டசோழநல்லூர் உள்ளிட்ட இந்துக் கோயில்களில் தீமிதி போன்ற சடங்குகளில் பங்கேற்க, சேரி மக்களை அனுமதிப்பதில்லை. இப்படி சாதி ஆதிக்கம் பல்வேறு வடிவங்களில் தொடர்ந்தாலும், இதற்கு எதிரான இம்மக்களின் போராட்டமும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது.

கடந்த காலப் போராட்ட நினைவுகள், அம்மக்களின் மனதில் மிக ஆழமான பாதிப்பை ஏற்படுத்தியிருக்கின்றன. இன்றும் அதை நினைவு கூறும் நொடிகளில், அம்மக்களின் கண்கள் கடந்த காலத்தைப் பற்றிய பெருமையிலும், எதிர்காலத்தைப் பற்றிய நம்பிக்கையிலும் மின்னுகின்றன.

''நாம் நமது போராட்டத்தின் மீது ஆழ்ந்த நம்பிக்கை கொள்ள வேண்டும். இந்த நம்பிக்கை நமது போராட்டம் வெற்றி பெற, நமக்குத் தேவையான நெஞ்சுரத்தையும் மனவலிமையையும் அளிக்கும். இந்தப் போராட்டத்தில் தம்மை ஈடுபடுத்திக் கொள்பவர்கள் என்றும் வாழ்வர்''

- அண்ணல் அம்பேத்கர்



படிப்பகம்

www.padippakam.com



## தலித் பெண்ணியம்

விலை ரூ.90

"இந்தியச் சூழலில் சாதியமும், பெண்ணடிமை முறையும் ஒன்றுக்கொன்று இணைந்து பிரிவினையை வலுப்படுத்தியுள்ளன. சாதி, பெண் பற்றிய கருத்தாக்கங்களும், மதரீதியான விளக்கங்களும் இதற்கு உறுதுணையாக இருந்துள்ளன. குடும்பம் என்ற சிறு அலகிலிருந்து, அரசு போன்ற பெரிய நிறுவனங்கள் வழியாகக் கருத்தாக்கங்கள், அதிகாரமாகவும், சட்டங்களாகவும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இந்நிலையில், இங்குள்ள பெண் அமைப்புகளின் வரதட்சணை ஒழிப்புப் போராட்டங்கள் என்பவை, கொசு மருந்து தெளிப்புதான்."

■ தொகுப்பு : அன்புக்கரசி, மோகன் லார்பீர்
■ வெளியீடு : தலித் ஆதார மய்யம், 32, பாரதிதாசன் சாலை, அரசரடி, மதுரை - 625 016 ■ பக்கங்கள் : 284



## நேரில் கண்ட ருஷ்யப் புரட்சி

விலை ரூ.140

"நாங்கள் விரும்புவது, எங்களுடைய விடுதலை மட்டும் அல்ல. உலகம் முழுவதிலும் உள்ள தொழிலாளிகளின் விடுதலை. அவர்களும் விடுதலை அடையாவிட்டால், சுரங்கங்களுக்குச் சொந்தக்காரர்கள் ஆகவும், அவற்றை நாங்களே நடத்தவும் உள்ள சுதந்திரத்தை, எங்களால் நிலைநிறுத்தி வைத்துக் கொள்ள முடியாது. உலக ஏகாதிபத்தியவாதிகளின் பேராசை பிடித்த கைகள், கடல்களுக்கு அப்பாலிருந்து ஏற்கனவே நம்மை நோக்கி நீட்டப்படுகின்றன. உலகத் தொழிலாளர்களின் கரங்கள்தாம் அந்தப் பிடிகளை, நமது குரல்வளைகளிலிருந்து இழுத்து அகற்ற முடியும்."

■ ஆசிரியர் : ஆ. ரைஸ்வில்லியம்ஸ் ■ வெளியீடு : அலைகள் வெளியீட்டகம், 25, தெற்கு சிவன் கோயில் தெரு, கோடம்பாக்கம், சென்னை - 24
■ பக்கங்கள் : 366



## நமக்கான குடும்பம்

விலை ரூ.5

"கேள்விகள் கேட்காமல் குடும்ப மனிதர்களாக மாறிவிடும்படி, நாம் பல்லாயிரம் ஆண்டுகளாக வளர்க்கப்பட்டிருக்கிறோம். ஆணும் பெண்ணும் இப்படிப் 'பயின்றதை' கழற்றி எறிவதுதான் இன்றைய முதல் தேவை. தயாரிக்கப்பட்ட மூளைகளுடன் உருவாகியுள்ள நாம், அறிவியல் பூர்வமாக கேள்விகள் கேட்கத் தொடங்க வேண்டும். ஏன் ஆண்களால் 'பார்க்கப்படுகிற' ஒரு கவர்ச்சிப் பொருளாக பெண் இருக்கிறாள்? அதே பெண் திருமணம் என்று வரும்போது, வரதட்சணையோடு வந்தால் மட்டுமே - அதே ஆணால் விரும்பப்படுபவளாக மாறுவது எதனால்? பத்தினித் தெய்வமாகப் பெண் இருக்க வேண்டும். ஆனால், ஆண் கொஞ்சம் அப்படி இப்படி இருந்துவிட்டால்கூட பரவாயில்லை என்கிற சமூக ஒப்புதலை எப்படி உடைப்பது?"

■ ஆசிரியர் : ச. தமிழ்ச் செல்வன் ■ வெளியீடு : பாரதி புத்தகாலயம், 2, குயவர் வீதி, ஜோன்ஸ் சாலை, சைதாப்பேட்டை, சென்னை - 15 ■ பக்கங்கள் : 16



## எதிர்ப்பும் எழுத்தும்



விலை ரூ.350

"சகோதர சகோதரிகளே, தோழர்களே! முதலாளித்துவத்திற்கும் புதிய தாராளவாதத்திற்கும் எதிராக, மனித குல எதிர்காலத்திற்கு ஆதரவாக, உலகம் முழுவதும் நடைபெறும் போராட்டங்களுடன் எங்களை நாங்கள் இணைத்துக் கொள்வோம். இந்த நிலத்தையும் இந்த வானத்தையும் எங்களைப் போலவே நேசிப்பவர்களை நாங்கள் தேடிக் கண்டறிவோம். நம் அனைவருக்கும் மக்களாட்சியும் விடுதலையும் நீதியும் கிடைக்க வேண்டும் என்பதற்காகவே நாங்கள் போராடுகிறோம். இடதுசாரிகளின் வேலைத்திட்டத்தை நிறைவேற்றுவதற்காகவும், புதிய அரசியலமைப்புச் சட்டத்திற்காகவும் - ஒரு புதிய அரசியலை முன்வைத்து நாங்கள் போராடுகிறோம்."

■ ஆசிரியர் : துணைத்தளபதி மார்க்கோஸ் ■ வெளியீடு : விடியல், 11, பெரியார் நகர், மசக்காளிபாளையம் (வடக்கு), கோயம்புத்தூர் - 641 015 ■ பக்கங்கள் : 900



## புத்தம் சரணம்

விலை ரூ.50

"சாதி ஒழிப்புப் போராளிகளாலும், இடதுசாரிச் சிந்தனையாளர்களாலும் முன்னிறுத்தப்பட்ட புத்தர் மற்றும் புத்த தம்மத்தின் அரசியல் முக்கியத்துவம், இங்கே அறிமுகமான அளவிற்கு அது ஒரு வாழ்நெறியாக இங்கே அறிமுகமாகவில்லை. பவுத்தம் வெறும் வேத மறுப்பு மதம் மட்டுமன்று; மிகவும் நடைமுறை சார்ந்த மக்கள் மதம் அது. பார்ப்பனியத்திலிருந்தும் இந்துத்துவத்திலிருந்தும் போதிசத்துவம் பல்வேறு புள்ளிகளில் வேறுபட்டு நிற்கிறது. அந்த அம்சங்களை நான் புரிந்து கொண்ட அளவிற்கு, இந்த நூலுக்குள் கொண்டு வந்துள்ளேன். புத்த மதத்தைக் கடவுள் மறுப்பு மதம் என்று சொல்வதைக் காட்டிலும் கடவுள், பக்தி முதலியவற்றிற்கு அப்பாற்பட்ட ஒரு நெறி எனச் சொல்வதே பொருத்தம்."

■ ஆசிரியர் : அ. மார்க்ஸ் ■ வெளியீடு : கறுப்புப் பிரதிகள், 45 அ, இஸ்மாயில் மைதானம், லாயிட்ஸ் சாலை, சென்னை - 5 ■ பக்கங்கள் : 108



## ரானடே - காந்தி - ஜின்னா

விலை ரூ.15

"பார்ப்பனன் செய்த புரோகிதத் தொழில் எல்லாவித மேன்மையையும் இழந்திருந்தது. அவன் ஒரு தின்றழிக்கும் பிராணியாக இருந்தான். பதுங்கிப் பாய்ந்து உயிர்களை வேட்டையாடும் விலங்கு போன்று சமூகத்தின் மீது பாய்ந்தான். அவன் டன் கணக்கில் உற்பத்தி செய்த புராணங்களும், சாஸ்திரங்களும் அவனது மோசடித் திட்டங்களுக்கு வற்றாத சுரங்கமாகக் கைகொடுத்தன. கபடமற்ற ஏழை மக்களை, கல்வியறிவற்றவர்களை, மூடநம்பிக்கைகளில் ஆழ்ந்திருந்த இந்துக்களை - முட்டாள்களாக்குவதற்கும், வஞ்சிப்பதற்கும், கொள்ளையடிப்பதற்கும் - சாஸ்திரங்களையும் புராணங்களையும் பயன்படுத்தினான்."

■ ஆசிரியர் : டாக்டர் அம்பேத்கர் ■ வெளியீடு : புத்தா வெளியீட்டகம், 3, மாரியம்மன் கோயில் வீதி, உப்பிலிபாளையம், கோயம்புத்தூர் - 641 015 ■ பக்கங்கள் : 56



படிப்பகம்

www.padippakam.com

# தமிழ்த் தொன்மை மாயைகளை உடைத்த முதல் சிந்தனையாளர்

■ இன்குலாப்

தமிழ்ச் சிந்தனைகள், வரலாற்று அடிப்படையில் இன்னும் முழுமையாகத் தொகுக்கப்படவில்லை. பிறதுறைகளில் காணப்படும் வரலாற்று வறட்சிக்குத் தமிழ்ச் சிந்தனை மரபும் தப்பியதாகத் தெரியவில்லை. ஆளும் வர்க்கங்களின் கருத்துகளே தமிழ்ச் சிந்தனையின் ஆதியும் அந்தமுமாய் காட்டப்படும் போக்கு, இன்றும் அதிகாரத்தில் இருக்கிறது. இந்தப் பழமைப் பிடிப்பு, காலமாற்றங்களை மறுதலிக்கும் ஒரு நோய் மனோபாவத்தை உண்டாக்கி வருகிறது.

சாதியொழிந்த விடுதலை பெற்ற மானுடம் என்ற கோட்டில் - அம்பேத்கரும் பெரியாரும் கைகோர்த்தே செல்லுவதை நாம் பார்க்க முடியும். இப்படி மானுட விடுதலையை முன்னிறுத்திய இந்தச் சிந்தனையாளர்கள் மீது விமர்சனம் என்ற பெயரில், அவதூறுகளும் கண்டனங்களும் எழுவது புதிதல்ல. இத்தகைய அவதூறுகளுக்கு பதிலுரையாக - பெரியாரியத்தின் பகுத்தறிவு, தன்மானம், பெண் விடுதலை, சமத்துவம், தமிழர் விடுதலை முதலிய பன்முகப் பார்வைகளின் தொகுப்பு நோக்காக - 'பெரியாரின் இடதுசாரித் தமிழ்த் தேசியம்' என்ற நூலை சுப. வீரபாண்டியன் எழுதியுள்ளார்.

'இந்திய விடுதலையும் பகத்சிங்கும்' - நூலுக்குப் பிறகு சுபவீயின் ஆய்வு முயற்சியுடன் கூடிய நூலாக இந்நூல் அமைந்திருக்கிறது. அய்ந்து இயல்களாக இயங்கும் இந்நூலில் 2, 3, 4 இயல்களில் பெரியாரியத்தின் தேசியப் பார்வை, பல்வேறு தரவுகளுடனும் தர்க்கங்களுடனும் விளக்கப்படுகிறது. 'தேசிய இனச் சிக்கலும் தமிழ்த் தேசியமும்' என்ற முதல் இயலும், 'தமிழ்த் தேசியம் இன்றைய சூழலில்' என்ற இறுதி இயலும், நூல் நுதலும் பொருளுக்கான முன்னுரைகளாகவும், முடிவுரைகளாகவும் அமைந்திருக்கின்றன. முதல் இயலில், தமிழ்த் தேசியம் என்ற கருத்தாக்கம் எவ்வாறு வளர்ச்சி பெற்று வந்தது என்பதை - இலக்கியத்தரவுகளிலிருந்து கட்டமைக்கிறார். இக்கட்டமைப்பு, மரபுவழிப்பட்ட புலவர்களின் பார்வையை ஒத்தே தொடக்கத்தில் செல்கிறது.

சமண - பவுத்தர்களை தமிழறியாதவர்கள் என்று சைவக் குரவர்கள் சொல்வதை சுபவீ சுட்டிச் செல்கிறார். இந்தக் கூற்றின் மீது வரலாற்று வகைப்பட்ட திறனாய்வைச் செய்திருக்க வேண்டும். ஏனெனில், அய்ம்பெருங் காப்பியங்களும், அய்ந்து இலக்கணங்களும் சமண - பவுத்தர் தொட்டதனால் தோன்றியவை. அதற்கும் அப்பால், வேள்வியாலும் வேதங்களாலும் அதிகாரத்தில் அமர்ந்து வைதீகத்துக்கு அறைகூவல்களாகவும் விளங்கியவை சமண பவுத்தங்களே.



**❝ ருஷ்ய மொழியின் தனித்துவத்திலும் தூய்மையிலும் அக்கறை கொண்ட லெனின், ருஷ்ய மொழி ருஷ்யா முழுவதுக்கும் ஆட்சி மொழியாக வேண்டும் என்ற கோரிக்கை வைக்கப்பட்டபோது, அதை அவர் மறுத்தார். ❞**

சைவ வைணவத்தின் பெயரால், பார்ப்பனிய அதிகாரம் தன்னைப் பதுக்கிக் கொண்டது - தமிழ்ச்சமுதாயம் இன்றளவும் உணராமல் இருக்கிற அறியாமையாகும்.

இந்நூலின் தலைப்பு, இரண்டு வகையான விளக்கங்களைப் பெறுதல் வேண்டும். 'பெரியாரின் இடதுசாரித் தமிழ்' என்றும், 'பெரியாரின் இடதுசாரித் தமிழ்த் தேசியம்' என்றும் அவ்விளக்கங்கள் அமைதல் வேண்டும். இடதுசாரித் தமிழ் என்பது, மொழிவகைப்பட்ட, பண்பாட்டு வகைப்பட்ட அனைத்து மூடத்தனங்களுக்கும் எதிராக நிற்பது. மொழித் தோற்றம் என்பதை தெய்வீகம் சார்ந்ததாக சைவம் உள்ளிட்ட வைதீக நோக்கர்கள் கதைகட்டிய காலத்தில், மொழிக்கு அறிவியல் அடிப்படையில் விளக்கம் சொன்னது சமணமும் பவுத்தமும்தான். 'மொழி முதற்காரணமாம் அணுத்திரள் ஒலி எழுத்து என்பது சமணர் தேற்றம்' அதனால் பெரியாரின் இடதுசாரித் தமிழ் குறித்த தேடுதலுக்குச் சமண பவுத்த சமயங்களின் பங்களிப்புதான் பேரளவுக்கு உதவும்.

எனினும், தமிழ் உணர்வை சைவ மரபில் தேடும் ஆய்வாளர்கள், சமணம் பவுத்தம் - தமிழுக்கும், கலைகளுக்கும் எதிராக நின்றன என்ற கூற்றை தமிழ்ச் சிந்தனை மரபில் உடுக்கடித்துப் பதிய வைத்துள்ளனர். சமயம் தவிர்த்த மொழியை முன்னிறுத்திய பெரியாரின் பார்வையை - இன்றளவும் தனித்தமிழ் ஆர்வலர்களும், அறிஞர்களும் புறந்தள்ளுவதற்கான மூல வித்து இங்குதான் அமைந்திருக்கிறது.

விரிவான இந்த இயலில் வேறொரு செய்தியும் பேசப்பட்டிருக்க வேண்டும். செவ்விலக்கிய தமிழ் மரபுக்கு உழைக்கும் மக்கள் வழங்கிய பங்களிப்பு, இன்னும் விரிவாக ஆராயப்பட வேண்டும். வடமொழியும், தெலுங்கும், உருதும், ஆங்கிலமும், பிரெஞ்சும் அதிகாரமொழிகளாகக் கோலோச்சிய காலங்களில், பீடத்திலிருந்தோர் எல்லாம் இம்மொழிகளின் அன்பர்களாக நின்றார்கள். பக்தி சுவை நனி சொட்டச்சொட்டப்பாடிய புலவர்களுக்கு, வடமொழியின் இருப்பும் பயன்பாடும் உறுத்தியதாகத் தெரியவில்லை.

இக்கால கட்டங்களில் எல்லாம், தமிழின் தனித்தன்மையைக் காப்பாற்றி நின்றவர்கள் உழைக்கும் வெகுமக்களே. அவர்கள் 'நீரை' - 'ஜலம்' ஆக்கவில்லை. 'சோற்றை' - 'சாதம்' ஆக்கவில்லை. செவ்விலக்கியங்களாக அவர்கள் எதையும் வழங்கவில்லைதான். இருந்தாலும், முத்தமிழின் இசையை அவர்கள் வயல்களிலும் வாய்க்காலிலும், கடலிலும் கரையிலும், தொட்டிலிலும் கட்டிலிலும் வளர்த்தார்கள். ஒருபோதும் எழுத்தாக்கப்படாத நாடகத்தை, தங்கள் வாழ்வின் ஒவ்வொரு தருணத்திலும் கூத்தாக ஆடினார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

❝ தீண்டாமைதான் ஒழிஞ்சிப் போச்சிங்கிறாங்களே, இந்தக் கோயிலுக்குப் போனா மாத்திரம் ஏன் வெளியில நில்லுங்கிறான்? சாமியத் தொட்டா தீட்டாகும்னு சொல்றான்! அப்போ, தீண்டாம எங்கப் போச்சு? ஏமாத்தறான்! ஆகயினாலே 'தீண்டாம இல்லே'ண்ணு சட்டத்திலேயும் சொல்லிட்டான், தத்துவத்திலியும் சொல்லிட்டான்; காரியத்தில சில இடங்களில வச்சிக் கிட்டு அதுக்கும் இதுக்கும் சம்பந்தம் இல்லேங்கறான். அநியாயமாயில்ல இருக்கு. ❞ - பெரியார்

இந்நூலில் மிகச் சரியாக விமர்சிக்கப்படும் ம.பொ. சிவ ஞானத்தின் வடமொழி ஆதரவு, அவர் காங்கிரஸ் இயக்கத்தில் இணைந்து நின்றதிலோ, தமிழரசுக் கழகத்தைத் தொடங்கியதிலோ தோற்றம் கொள்ளவில்லை. பழஞ் சைவ மரபின் புதுக் கொழுந்து தான் சிவஞானம் என்பதைச் சேர்த்துச் சுட்ட வேண்டும். தமிழ்த் தேசியத்தின் தோற்றுவாய்களை சுப. வீரபாண்டியன் பெரு முயற்சி செய்து தொகுத்திருக்கிறார். எனினும், மேற்சொல்லப் பட்ட திறனாய்வுப் பார்வைகள், இன்னும் வாய்க்கவிருக்கும் கருத்துகள், இந்த இயலுக்கு வலுவூட்டும். உ.வே.சா.வின் பதிப்பு முயற்சிகளை நன்றியோடு நினைவுகூறும் சுபவீ, அவரின் வடமொழிச் சார்பையும் சாதியத் தள்ளாட்டத்தையும் தெளிவாகவே அடையாளம் காட்டுகிறார். இத்தகைய அடை யாளம் காட்டும் முயற்சிகள்தாம், ஒரு இடதுசாரித் தமிழ்ப் பார்வையை அடைய உதவும்.

மொழி குறித்தும், தேசிய இனத்தின் உரிமை குறித்தும், உலக இடதுசாரிகள் கொண்டிருந்த கருத்துகள் பெரியாரிடம் தீவிரம் கொள்கின்றன. ருஷ்ய மொழியின் தனித்துவத்திலும் தூய்மையிலும் அக்கறை கொண்டவர் லெனின். அது அவரது தாய்மொழி. ஆனால், ருஷ்ய மொழி ருஷ்யா முழுவதுக்கும் ஆட்சி மொழியாக வேண்டும் என்ற கோரிக்கை வைக்கப்பட்டபோது, அதை லெனின் மறுத்தார். ''சின்னஞ்சிறு சுவிட்சர்லாந்து ஒரேயொரு ஆட்சி மொழியை கொண்டது அல்ல - ஜெர்மன், பிரெஞ்சு, இத்தாலியன் ஆகிய மூன்று ஆட்சி மொழிகளைப் பெற்றுள்ளது. இதனால், அதற்கு எந்தக்கேடும் ஏற்பட்டு விடவில்லை; நன்மையே உண்டாகி இருக்கிறது'' ('தேசிய இனப் பிரச்சினை களும் பாட்டாளி வர்க்க தேசியவாதமும்' - பக்கம்: 20).

தமிழின் மீது சமஸ்கிருத அதிகாரத்தை எதிர்த்தது போலவே, தமிழின் சைவ - வைணவ - சாதிய அதிகாரத்தையும் பெரியார் எதிர்த்தார். தமிழின் தொன்மை என்பதும், வளம் என்பதும் - தமிழ் மக்களின் விடுதலைக்கும் முன்னேற்றத்துக்கும் எந்த வகையில் உதவும் என்று கேட்டார். இதுதான் அவரை, மறை மலை அடிகள் போன்ற வலதுசாரித் தேசியவாதிகளில் இருந்து துல்லியமாக அடையாளம் காட்டுகிறது. பெரியாரின் இந்தத் தனித்தன்மையை சுபவீ, எவ்விதத் தயக்கமுமின்றி விளக்குகிறார்:

*''முதலாவதாக, தமிழ் முன்னேற்றமடைந்து உலக பாஷை வரிசை யில் அதுவும் ஒரு பாஷையாக இருக்க வேண்டுமானால், தமிழையும் மதத்தையும் பிரித்துவிட வேண்டும். தமிழுக்கும் கடவுளுக்கும் உள்ள சம்பந்தத்தைக் கொஞ்சமாவது தள்ளி வைக்க வேண்டும்...''* இது தொடர்பான கருத்துகளை இன்னும் நெடிதாகவே மேற்கோள் காட்டி ஏற்கும் சுபவீ, இதைத் தொடர்ந்து கூறுவது மிக மிகச் சரியானதாகும்: *''தமிழரின் முன்னேற்றம், தமிழரின் மேம்பாடுபற்றியே காலமெல்லாம் எண்ணிக் கொண்டிருந்த பெரியார், அதற்குத் தடையாக எது வந்தாலும் அது தமிழாகவே இருந்தாலும் எதிர்த்தார் என்பதைத்தான் மேற்காணும் வரிகள் நமக்கு உணர்த்துகின்றன''* (பக்கம்: 138).

பெரியாரின் மனித விடுதலையை அடிப்படையாகக் கொண்ட இத்தகைய பார்வைதான், பெண் விடுதலை என்ற நோக்கில் - திருக்குறளையும் கேள்வி கேட்க வைத்தது. வள்ளுவர் பாராட்டும் கற்பு, கணவனைத் தொழுதெழுதல், பரத்தைமை யைக் கண்டித்தல் இவற்றையெல்லாம், எவ்விதத் தயக்கமு மின்றிப் பெரியார் கேள்வி கேட்டார். திருக்குறளை அவர் பாராட் டினார் என்பது உண்மைதான் - ஆனால் நிபந்தனைகள் எதுவு மில்லாமல் பாராட்டவில்லை.

மொழி பற்றிய பெரியாரின் இந்த அணுகுமுறை, பெர்டோல்ட பிரக்ஸ்ட் என்ற ஜெர்மானிய நாடகாசிரியரின் ஒரு கூற்றை எனக்கு நினைவுபடுத்துகிறது: ''ஜெர்மானிய மொழியை நாம் சலவை செய்ய வேண்டும்.'' இதை நான் அடிக்கடி மேற்கோள்காட்டுகிறேன். அத்துடன் கூட ஒன்றையும் சேர்த்துச் சொல்கிறேன்: ''தமிழ் மொழியையோ வெறும் சலவை செய்தால் போதாது; அதை வெள்ளாவிப் பானையில் வைத்து அவிக்க வேண்டும்.''

பெரியாரின் ஆங்கில ஆதரவு, தமிழன்பர்களால் கண்டனம் செய்யப்படுகிறது. இது குறித்தும் சுபவீ தெளிவான வாதங்களை முன்வைக்கிறார். இதில் சுபவீ, மறைமலை அடிகளின் ஆங்கில நாட்குறிப்பு, தேவநேயப் பாவாணரின் ஆங்கிலம் குறித்த கருத்து (பக்கம்: 142), ''தமிழர் தமிழையும் ஆங்கில மொழியையும் அமிழ்தெனக் கற்க ஆங்கிலம் பெறுகவே'' என்று பெருஞ்சித் திரனாரைக் காட்டும் மேற்கோள் ஆகியவை, ஆங்கிலத்தை முதன் மைப்படுத்தும் நோக்கிலானவை அல்ல; தமிழுக்குரிய தலை மையை உறுதிப்படுத்த வேண்டும், அதே நேரத்தில் உலகத் தொடர்புகளை மேம்படுத்த ஆங்கிலத்தின் தேவையை மறுதலிக்க முடியாது என்ற நோக்கில்தான்.

இந்நூலின் மிக முதன்மையான பகுதி - 'பெரியாரின் இடது சாரித் தமிழ்த் தேசியம்' என்பதுதான். இதில் பெரியாரின் தமிழ் குறித்த பார்வை, திராவிடம் - திராவிட நாடு என்று முதலில் கூறினாலும், அது தமிழ்த் தேசியமாகவே உருவான தன்மை,




தனித் தமிழ் இயக்கம் கண்ட மறைமலையடிகளோடு பெரி யார் முரண்பட்ட நிலை, பெரியா ருக்கு முந்தியே தமிழின உணர்வு, சமூக விடுதலை ஆகியவற்றை முன் மொழிந்த அயோத்திதாசப் பண்டி தரின் பங்களிப்பு, அதன் நிறை குறைகள், இப்படி நிறையவே பெரியாரியத்தை வகைப்படுத் திக் கொண்டு வந்தவர், பெரி யாரியத்தின் சாரமாகப் பின் வரும் முடிவைக்கண்டடைகிறார்:

*''...சமூக மொழித் தேசியவாதத்தை, இடதுசாரித் தன்மையுடன் முன் னெடுத்த பெரியார், சாதி ஒழிப்பு,*

**வெளியீடு: தமிழ் முழக்கம், 345, அண்ணா சாலை, சென்னை - 6, பக்கங்கள்: 264, விலை: ரூ. 100**


படிப்பகம்

www.padippakam.com

*பெண் விடுதலை ஆகிய இரண்டினையும் தமிழ்த் தேசியத்தின் இரு கூறுகளாகக் காலம் முழுவதும் எடுத்துச் சென்றுள்ளார்.''*

இத்துடன் கூட ஒன்றையும் சேர்த்துச் சொல்ல வேண்டும். புராண மாயைகளை மட்டுமின்றி, தமிழ்த் தொன்மை குறித்த மாயை களையும் உடைத்த முதல் சிந்தனையாளர் பெரியார்தான். தமிழ் மாயைகளை மறுத்த பெரியாரை, தமிழ்த் தேசிய மறுப்பாளராகவே சித்தரிக்க முயலும் அ. மார்க்சையும் - உரிய வகையில் சுபவீ மறுத்துள்ளது குறிப்பிடத்தக்கது. தாழ்த்தப்பட்ட மக்களுக்காகப் பெரியார் எழுதியதையும் பேசியதையும் போராடியதையும் - சுபவீ விரிவாகவே எழுதியுள்ளார். ரவிக்குமாரின் பெரியார் மறுப்பு வாதங்களுக்கு இப்பகுதியும் வலுச்சேர்க்கும். பெரியார், பிற்படுத்தப்பட்டவர்களுக்குதான் தலைவர் என்ற வாதத்தை சுபவீ, சரியான தர்க்கத்தினால் மறுக்கிறார்:




*''... ஒரு சாதிக்குள்ளேயே பல குழுக்களும் தலைவர்கள் பலரும் இருக்கும்போது - பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட அனைத்துச் சாதிகளுக்கும் ஒரு தலைவர் என்பது கற்பனை. சாதிகள் அல்லது தொகுப்புகளின் அடிப்படையில் - 'ஒற்றைத் தலைவர்' ஒரு நாளும் வர முடியாது. இன்றைக்கும் தங்களின் 'சாதிவட்டம்' என்பதுதான் சாதித் தலைவர்களின் பலமும் பலவீனமும். அவர்கள் ஒரு சாதியை விட்டு ஒரு சாதிச் சங்கத்தை விட்டு - வெளியில் வரும் வரை, எல்லாச் சாதியினருக்கும் தலைவராக முடியாது'' (பக்கம்: 168 - 69).*

பெரியார், 'பிற்படுத்தப்பட்ட மக்களின் தலைவர்' என்று முத்திரை குத்தும் தலித்தியச் சிந்தனையாளர்கள், இது குறித்து ஆழ்ந்து ஆராய வேண்டும். பெரியார் செருப்படி பட்டது, ஒரு குறிப்பிட்ட சாதி வெறிகொண்ட பிற்படுத்தப்பட்டோர் மத்தியில் தான் என்ற உண்மையை மறந்துவிடக் கூடாது. முதுகளத்தூர் கலவரத்தின் போது பெரியார் எடுத்த நிலைப்பாடு, கம்யூனிஸ்டு களால் கூடத் துணிய முடியாதது. வெண்மணி குறித்து 'விடுதலை' தலையங்கம் எழுதியதை ஏற்றுக் கொண்டுதான் - அவரை விமர்சிக்க வேண்டும்.

பெண்ணியம் குறித்த நிலைப்பாட்டில், ஒட்டுமொத்த தமிழ் மரபுச் சிந்தனையாளர்களுக்கும் எதிராக ஒலித்த ஒரு குரல் - பெரியாருடையது மட்டும்தான். பெரியாரை ஆழ்ந்து பயிலும்போது, பெண் விடுதலை குறித்து அவர் வெளியிட்டது வெறும் அதிர்ச்சி மதிப்புச் சார்ந்தது என்பது, நியாயமற்ற குற்றச்சாட்டாகவே நிற்பது புலனாகும். அவருடைய தேடலில் அவர் கண்டடைந்த முடிவுகள் - ஆணாதிக்கத்துக்கும், சாதியத்துக்கும் அதிர்ச்சியளிப்பவைதான். கோப்பர் நிகசும், கலிலியோவும் கண்டடைந்த முடிவுகளை அறிவியலாளர்கள் - வெறும் அதிர்ச்சி மதிப்புக்குரியவை என்று கூறுவார்களா? எனினும், பழமைவாதிகளுக்கு அவை அதிர்ச்சியளித்தது உண்மைதான். சிந்தனையாளர்களின் ஆய்வு முடிவுகள், எத்தகைய தரவுகளின் பரிசீலனையில் உருவானவை என்பதை நோக்குவதுதான் முதன்மையானது. பெரியாரியத்தை வசைபாடும் தோழர்கள், மானுட விடுதலை குறித்த பெரியாரியப் பார்வைக்கு நியாயம் செய்யவில்லை.

உண்மையான பெரியாரியவாதிகளுக்கும் பல செய்திகளைச் சொல்ல வேண்டும். 1967 இல் இருந்து பெரியாரை ஏற்றுக் கொண்டதாகச் சொல்லும் கழகங்கள்தாம் தமிழகத்தை ஆளுகின்றன. இதற்கு முந்திய காங்கிரஸ் ஆட்சியில் நடந்ததை விடக் கூடுதலாக தலித்துகள் அவமானப்படுத்தப்படுவதும் - தாக்கப்படுவதும் கொலை செய்யப்படுவதும் - கழகங்களின் ஆட்சியில்தான். இந்தக் கொடுமைகளைக் கட்டவிழ்த்து விடுவதில் கழக முன்னோடிகளின் பங்கு கணிசமானது. ஆட்சிக்குக் கட்டுப்பட்ட காவல் துறையின் அத்துமீறல்கள், நாகரிக உலகைத் தலை குனியச் செய்யும். இந்தக் கொடுமைகளை முதன் முதலாக தலித்துகள்தான் எதிர்த்துக் குரல் கொடுக்கிறார்கள் - போராடுகிறார்கள். பொதுவுடைமைக் கட்சிகள் அவ்வப்பொழுது கண்டனம் செய்கின்றன.

ஆனால், தி.மு.க., அ.தி.மு.க., ம.தி.மு.க. முதலிய ஆட்சி அதிகாரத்தைக் கையில் எடுத்துக் கொண்ட கட்சிகள், இந்தக் கொடுமைகளுக்கு எதிரான சமரசமற்ற ஒருபோராட்டத்தை ஏன் முன்னெடுக்கவில்லை? இந்தக் கட்சிகள் அனைத்தும் - 'பெரியார் சுழி'யோடுதான் தங்கள் வரலாற்றைச் சொல்கின்றன. எனில், சாதியக் கொடுமைகள் தலைவிரித்தாடும்போது, மவுனம் காக்க வேண்டும் என்று பெரியார் கற்பித்தாரா? இந்தக் கழகங்களைச் சேர்ந்தவர்களின் சாதிய ஈடுபாடு, தமிழக வரலாற்றை நாறச் செய்கிறதே! இதற்கு இக்கழகங்களின் தலைவர்கள் என்ன பரிகாரம் செய்யப் போகிறார்கள்?

சோவியத் யூனியனில் கம்யூனிஸ்டு கட்சியின் பெயரால் பல அத்துமீறல்கள் நடந்தன; ஊழல் புரையோடிப் போனது; உரிமைகள் மறுக்கப்பட்டன. இவற்றுக்கெல்லாம் காரணமான கட்சித் தலைவர்கள், லெனினை முன்னிறுத்தியே தங்கள் தவறுகளைத் தொடர்ந்தனர். சினம் கொண்ட இளைஞர்கள் கட்சியை வெறுத்தனர். கட்சி கேடயமாகப் பயன்படுத்தப்பட்ட லெனினை வெறுத்தார்கள். இந்த வெறுப்புணர்ச்சியை வளர்ப்பதில் உலக முதலாளியம் முன்னின்றது என்பது உண்மைதான். ஆனால், அதற்கு கட்சியின் தவறுகள் இடங்கொடுத்தன. சோவியத் யூனியன் சிதறியபோது, லெனினுடைய சிலையும் சேர்ந்தே சிதறியது.

கழகங்களின் ஆட்சிக் காலத்தில் நடைபெறும் சாதியக் கொடுமைகளால், தன்னுணர்வு பெற்ற தலித்துகள் வெறுப்படைந்து போயிருக்கிறார்கள். அந்த வெறுப்பு, பெரியார் எதிர்ப்பாக மாறக்கூடிய எல்லா வாய்ப்புகளும் இருக்கின்றன. இதற்கு, பார்ப்பனியம் தூபம் போடலாம். அதற்கு முன்பு கழகங்கள் தன்நெஞ்சறிவது பொய்க்கக்கூடாது. பெரியாருக்கு நியாயம் செய்வது, இன்று தலித்துகளுக்கு நியாயம் செய்வதுதான். ●



படிப்பகம்

www.padippakam.com

# நல்ல புத்தகங்கள் மனிதனைச் செதுக்கும் உளிகள்

# அகில் புத்தகாலயம்

எங்களிடம் அனைத்து வகையான முற்போக்கு இலக்கியங்கள், வரலாறு, அரசியல் - தத்துவ ஏடுகள், சிறுவர் நூல்கள் மற்றும் பருவ இதழ்கள் உள்ளிட்ட தமிழகத்தின் அனைத்துப் பதிப்பகங்களின் நூல்களும் சிறப்புத் தள்ளுபடி விலையில் கிடைக்கும்.

4/107, ரத்னா காம்ப்ளக்ஸ் எதிரில், 5- ரோடு, சேலம் - 636 004
தொலைபேசி - 0427 - 5547073


---

தனி இதழ் : ரூ. 25
ஆண்டு சந்தா : ரூ. 100

புது

## விழை

கலாச்சார காலாண்டிதழ்
ஜுலை - செப் 2005



உள்ளே

சிறுகதை

ஆற்றங்கரை - ச. பாலமுருகன்
மானாவாரி - ஜே. ஷாஜகான்
பனைகளின் காலம் - காலபைரவன்

கட்டுரை

அலையும் தமிழ்க்குடிகள் : நாடோடியம் - கார்மேகம்
கோலம் - தொ. பரமசிவன்
பதிவு : வீரவநல்லூர் கலவரம் - ச. தமிழ்ச் செல்வன்
நாத்திகம் : அயோத்திதாசரை முன்வைத்து - அ. ஜெகநாதன்
தர்மசிறி பண்டார நாயக : ஆர்டில்லெரிகளுக்கிடையே ஒரு வெண்புறா - எஸ்.வி. ராஜதுரை
சைவம் உறிஞ்சிய முன்னோர் வழிபாடு - ஆ. சிவசுப்பிரமணியன்
மறைவிலிருந்து வெளித்தோன்றும் மநுவாதிகள் - சு. வெங்கடேசன்

மற்றும் கவிதைகள்

தொடர்புக்கு : பி-2, டெலிகாம் குடியிருப்பு, ஒசூர் - 635 109
பேசி : 04344 - 244933

---

## உன்னதம்



'உன்னதம்' இனி இருமாத இதழாக குறிப்பிட்ட காலத்தில் வெளிவரும்

இப்பொழுது விற்பனையில்
உன்னதம் - 12 ( ஜுலை - ஆக 2005)

விலை : ரூ. 10/-

தலித் மக்களுக்கு தனி வாழிடம்தான் தீர்வா? தொல். திருமாவளவனிடம் ஒரு கேள்வி

பெண்மொழி விவாதம் தொடர்கிறது... சுகிர்தராணி

பெண்மொழி சர்ச்சையில்... மாலதிமைத்ரி

சிறப்புக் கட்டுரைகள் : தலித் படைப்பு என்பது என்ன?- ரவிக்குமார்

பாப்பாபட்டி, கீரிப்பட்டி வன்கொலைச் சடங்குகள் - சண்முகராஜா

மதுரைவீரன் கதைப்பாடலில் மறைந்துள்ள அரசியல் - மைத்ரேயி

பத்திகள் : சிவகாமி, தேவதேவன்

சிறுகதைகள் :
கௌதம சித்தார்த்தன், ஆதவன் தீட்சண்யா, அரவிந்தன்

தலித் நாவலிலிருந்து ஒரு பகுதி : சோ. தர்மன்

'உன்னதம்', ஆலத்தூர் அஞ்சல், கவுந்தப்பாடி - 638 455, ஈரோடு மாவட்டம்
தொலைபேசி : 04256 - 243125, செல்பேசி : 94432 24945



படிப்பகம்

www.padippakam.com

# பறை வெல்லும்

விடுதலைப் பார்வையில்
தலித் கலைகள் - III



**■ கே.எஸ். முத்து**

தீண்டாமையின் ஓர் வடிவமாகவும், இழி தொழிலாகவும் 'பறையடித்தல்' கருதப்படுவதால், அதை அடியோடு ஒழிக்க வேண்டும் என உறுதி கொண்டு - பறையடிக்கும் தொழிலை அழித்தொழிக்கும் போராட்டத்தில் தலித் முன்னோடிகளில் சிலர் தீவிரமாகக் களமிறங்கினர். குறிப்பாக, வட தமிழகத்தில் இந்திய குடியரசுக் கட்சி, தமிழக மனித உரிமைக் கட்சி போன்ற இயக்கங்கள் இம்முயற்சியில் முழுவீச்சில் ஈடுபட்டன. அவர்களின் முயற்சி வீண் போகவில்லை. பல கிராமங்களில் பறையடிக்கும் பழக்கத்தை ஒழித்தனர். இருப்பினும், அதையே தொழிலாகக் கொண்டிருப்போர் தொடர்ந்து பறையடிப்பதை நிறுத்த முடியவில்லை.

தமிழகத்தில் ஆங்காங்கே சில பகுதிகளில் பறையிசை, சத்தமின்றி ஒலித்துக் கொண்டுதான் இருந்தது. புரட்சியாளர் அம்பேத்கரின் நூற்றாண்டுக்குப் பிறகு மீண்டும் பலத்த ஒலியுடன் பறையிசை அதிரத் தொடங்கியது. அண்டம் கிடுகிடுக்க ஆர்ப்பரித்து எழுந்த பறையொலி, சாதி இந்துக்களை அச்சுறுத்துவதற்கு முன் தலித்துகளில் சிலரை அச்சுறுத்தியது. எங்கே மீண்டும் பறையடிப்பை அடிமைத் தொழிலாக நம் தலைமேல் சுமத்தி விடுவார்களோ என்றெண்ணி, தங்களுடைய எதிர்ப்புக் குரல்களைத் தெரிவிக்க முன்வந்துள்ளனர்.

அவர்களுடைய நியாயமான உணர்வு வரவேற்கத்தக்கது என்றாலும் - 'பறை' குறித்த சில தகவல்களை, அந்த இசை ஏற்படுத்தியுள்ள விளைவுகளை கவனத்தில் கொள்ள வேண்டியிருக்கிறது. முதலில், 'பறை' என்ற சொல் பேச்சைக் குறிப்பதாகும். 'பேசு' எனப்பொருள் படும் 'அறை' என்ற சொல்லினின்று 'பறை' தோன்றியது. (நன்னூல் : 458) பேசுவதை இசைக்கவல்ல தாளக் கருவி 'பறை' எனப்பட்டது. 'பறை என்பது ஓடும் இசையை ஒழுங்கு பெற நிறுத்தி ஓர் அளவோடு சீரோடு, ஒத்த அழகோடு நடக்க, இசைக்கு நடை கற்பிக்கும் கருவி' என முனைவர் வளர்மதி தன்னுடைய 'பறை' ஆய்வு நூலில் விளக்குகிறார்.

பண்டைய காலத்தில் வாழ்ந்த தொல்குடித் தமிழர்களின் நிலவியல் பாகுபாட்டின் அடிப்படையிலும் 'பறை' பயன்படுத்தப்பட்ட வரலாறு உண்டு. குறிஞ்சிப்பறை, முல்லைப்பறை, மருதப்பறை, நெய்தற்பறை, பாலைப்பறை என அய்ந்திணைகளிலும் பறை முழக்கிய செய்திகள் காணக் கிடைக்கின்றன. 'பறை' என்ற சொல்லே இசைக் கருவியையும், செய்தி அறிவிக்கும் முறையையும் குறித்தது என தொல்காப்பியம் கூறுகிறது.

பெருகிவரும் புனலை அடைக்க, உழவர் மக்களை அழைக்க, போர்க்கெழுமாறு வீரர்களை அணிதிரட்ட, வெற்றி தோல்வியை அறிவிக்க, வயல்களில் உழவு வேலை செய்வோருக்கு ஊக்கமளிக்க, விதைக்க, அறுவடை செய்ய, காடுகளில் விலங்குகளை விரட்ட, மன்னரின் செய்திகளை மக்களுக்குத் தெரிவிக்க, இயற்கை வழிபாட்டில், கூத்துகளில், விழாக்களில், இறப்பில் என வாழ்வியல் கூறுகளுடன் இணைந்து இயங்கியுள்ளது 'பறை'. உற்பத்தி செய்யும் தொழிற்களங்களில்தான் நிகழ்த்துக் கலைகள் பிறந்தன - உருவாயின எனக் கொள்ளலாம். ஆனால், இக்கலைகளை வளர்த்த பெருமை கோயில்களையே சாரும். ஏனெனில், கோயில் கொடைகள், விழாக்கள் நடைபெறும் நேரத்தில் தான் இக்கலைகள் அரங்கேற்றப்பட்டுள்ளன.

> **❝ தாழ்த்தப்பட்டோரை சரிசமமாக எண்ணுகிற மனநிலை, சாதி இந்துகளுக்கு எள்ளளவும் இல்லாதபோது - அவர்கள் செய்கின்ற தொழிலை மட்டும் எப்படி உயர்வாகவோ, பெருமையாகவோ ஏற்றுக் கொள்வார்கள்? ❞**

இன்று செத்த பிணத்திற்கு முன்பு அடிக்கப்படும் பறை, ஒரு காலத்தில் கோயில்களில் நடைபெறும் திருவிழாக்களில் முதன்மையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக, தஞ்சை பிரகதீஸ்வரர் கோயிலில் நடைபெறும் திருக்கொடி ஏற்றும் நாளில் பறை முழக்க நிகழ்ச்சி, முக்கியமான நிகழ்வாகும். இப்பறை முழக்கும் நிகழ்வுக்கு 'திருப்பறையறைவு' எனப் பெயர் வழங்கப் பட்டது. இப்பறை இசைக்கும் நிகழ்வுக்குப்பிறகுதான் திருவிழா நடை



படிப்பகம்

www.padippakam.com

பெறும். ஆக கோயில்களில் வாசிக்கப்பட்ட பறை இடைக்காலங்களில் நிறுத்தப்பட்டு - பிணத்திற்கு முன் இசைக்கும் ஒரு கருவியாக மாற்றப்பட்டுள்ளது. இதன் பின்புலங்களை அலசி ஆராய வேண்டியுள்ளது.

புரட்சிக் கவிஞன் பாரதிதாசன்கூட தன்னுடைய வீரியமிக்க எண்ணங்களை பறை, முரசு, சங்கு போன்ற தமிழருக்குரிய கருவிகளைக் கொண்டு - தமக்கே உரிய பாணியில் எழுதியுள்ளார்.

- அன்னியர் நூலைத் தொடோம் என்ற சேதி
  அறைந்திடடா புவி முற்றிலும் - எங்கள்
  அறுபது கோடித் தடக்கைகள் ராட்டினம்...
  சுற்றும் - சுற்றும் - சுற்றும்
  இன்னும் செல்லாது பிறர் செய்யும் சூழ்ச்சிகள்
  என்று சொல்லிப் புயம்தட்டு - அட
  யானையின் மேல் வள்ளுவா சென்று நீ பறை
  கொட்டு - கொட்டு - கொட்டு
- நான்கு கோடித் தமிழர் பட்டாளம்
  நாட்டை மீட்கக் கிளம்பிற்றுக் கண்டாய்
  தீங்கு செய்யும் வடவரின் ஆட்டம்
  செல்லாதென்று கொட்டு வெற்றிப்பறை!
- தூங்கும் புலியை பறை கொண்டெழுப்பினோம்
  தூய தமிழரைத் தமிழ் கொண்டெழுப்புவோம்

இவ்வாறு பன்னெடுங்கால வரலாற்றைத் தன்னகத்தே கொண்டுள்ள பறை, ஓர் இசைக் கருவி மட்டுமல்ல - தொல்குடித் தமிழ்ச்சமூகத்தின் சொத்து; தோலிசைக் கருவிகளின் தாய்; தமிழினத்தின் தொன்மையான அடையாளம்; உழைக்கும் மக்களின் இசைக் களஞ்சியம்; தமிழர் வாழ்வியலின் முகம்; ஒடுக்கப்பட்ட மக்களின் பண்பாட்டுச் சின்னம்; கற்காலத்தின் முதல் தகவல் தொடர்பு சாதனம்; இன்று ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக் குரல். இசையறிவை விளக்கும் இக்கருவி தாழ்ந்து வீழ்ந்தது எப்படி? ஒரே பதில் சாதி வெறி.

சாதிய படிநிலைக் கட்டமைப்பில் தலித் மக்கள் அடி மட்டத்தில் இருப்பதாகக் கருதப்படுவதுதான் காரணமே தவிர, பறையடிப்பதால் அவர்கள் கீழானவர்கள் என்று பொருள் கொள்ள முடியாது. தாழ்த்தப்பட்டோரை சரிசமமாக எண்ணுகிற மனநிலை, சாதி இந்துகளுக்கு எள்ளளவும் இல்லாதபோது - அவர்கள் செய்கின்ற தொழிலை மட்டும் எப்படி உயர்வாகவோ, பெருமையாகவோ ஏற்றுக் கொள்வார்கள்? இந்திய சாதியச்சமூகத்தில் எந்த ஒரு தொழிலும் அல்லது உற்பத்தி செய்யப்படுகின்ற ஒரு பொருளின் தரம் அதற்கான அங்கீகாரம் என்பது - அது பயன்படுத்தப்படும் தன்மை, சூழல், நபர் இவைகளைக் கொண்டே தீர்மானிக்கப்படுகின்றன. அதுபோலவே, தாழ்த்தப்பட்டோர் செய்யும் தொழிலும் அதே அளவுகோலால் கவனிக்கப்படுகிறது.

ஓர் இனத்தின் வாழ்வும் தாழ்வும், பெருமையும் சிறுமையும் அம்மக்களின் பண்பாட்டு அடையாளங்களில்தான் புதைந்து கிடக்கின்றன. இந்தியாவில் அய்ந்திலொரு பகுதி மக்களின் முகவரி அழிக்கப்பட்ட நிலையில் - அம்மக்களின் பண்பாடுகளும் இழிவானது, அவமானச் சின்னமானது என்றுதான் சொல்லப்பட்டுள்ளது. மண்ணைப் பிடுங்கி, அடிமைப்படுத்தியது போல் இன்று அவர்களின் சிந்தனையையும் அடிமைப்படுத்தப்பட்ட சூழ்நிலைக்குத் தள்ளிவிட்டனர். பறையடிப்பது இழிவான தொழில் என்பது சாதி இந்துக்களின் கருத்து. அக்கருத்தை சில தலித்துகளும் தலையாட்டி ஏற்றுக் கொள்கிறார்கள். சாதி இந்துக்களின் மனதில் இழிவு என்று பதிவு செய்யப்பட்டிருக்கும் செயலை, நாம் செய்யக் கூடாது என்று தலித்துகளில் சிலர் உறுதியாக இருக்கின்றனர்.

அமெரிக்க நிறவெறியால் வெள்ளையர்கள் அந்நாட்டின் பூர்வகுடி மக்களான கருப்பர்களைப் பார்த்து - 'கருப்பு அசிங்கமான நிறம், கருப்பர்கள் இழிவானவர்கள்' என எள்ளி நகையாடினர். வெள்ளையர்களின் இப்பிரச்சாரத்தைக் கண்டு கருப்பர்கள் முடங்கி அடங்கி ஒடுங்கி விடவில்லை. வெள்ளையர்களின் கருத்துக்கு எதிராக 'கருப்பு மேன்மையானது, கருப்புதான் அழகு, கருப்பர்கள் அழகானவர்கள்; ஆற்றல் மிகுந்தவர்கள்' என மாற்றுக்கருத்தை முன்வைத்து அணி திரண்டுப் போராடினர். கல்வியிலும், விளையாட்டிலும், அறிவிலும், ஆற்றலிலும் வல்லமை பொருந்தியவர்கள் கருப்பர்கள் என்பதை இன்று உலகுக்கே பறைசாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.



செந்தில் செல்வன்

அதுபோல பறையடிப்பது இழிவு என்று கருதினால், அந்த இழிவைத் துடைத்தெறிய வழிவகை காண வேண்டுமே தவிர - அதை விட்டு விட்டு தப்பித்து ஓடி மறைவதால் முத்திரை குத்தப்பட்ட பார்வை நீங்கிவிடாது. பறையைக் கொண்டு அடிமைப்படுத்துகிற சமூகத்தில், அதையே தங்களை விடுவிக்கிற ஆயுதமாகக் கையாள்கிற வகையில்தான் 'பறை' மீண்டும் கரங்களில் தவழ்கிறதே தவிர, செத்த பிணத்திற்கு முன்பு அடித்தாட வேண்டும் என்பதற்காக அல்ல.



பார்ப்பனியப் பண்பாடுதான் உயர்ந்தது என சாதியை ஏற்றுக் கொண்ட அனைத்துச் சாதியினரும் - அக்கழிசடைப் பண்பாட்டைப் பின்பற்றி, தங்களையும் பார்ப்பனர்களாக அடையாளப்படுத்திக் கொள்ளத் துடிக்கும் ஆபத்தான சூழல் நிலவுகிறது. அதற்கெதிரான பண்பாட்டை முன்னிறுத்த வேண்டியது, சாதியத்திற்கு எதிரானவர்களின் சமூகக் கடமையாக இருக்கிறது. மாட்டுக் கறி உண்பது, எப்படி இந்துத்துவத்திற்கு எதிரான பண்பாடாகக் கருதப்படுகிறதோ, அதுபோலவே பறையடித்தலும் இந்துத்துவத்திற்கு எதிரான ஒரு பண்பாட்டு யுத்தமாகவே இசைக்கப்படுகிறது. பறை இசைத்தல் என்பது மனித குலத்திற்கு எதிரான நடவடிக்கை அல்ல. மாறாக, அது சாதிகளற்ற - சமத்துவ - மானுட உலகைப் படைக்கும் ஆற்றல்மிகு பேரிசை என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

இன்னும் 'பறை' என்பது ஏதோ சாவுக்கு மட்டுமே அடிக்கின்ற இசைக் கருவியாகப் பார்ப்பது தவறான அணுகுமுறையாகும். திருமணம், சடங்கு, காதுகுத்து, ஊர்வலங்கள், அரசியல் கட்சிக் கூட்டங்கள், கல்லூரி பல்கலைக் கழக நிகழ்வுகள், கோயில் திருவிழாக்கள், கலை விழாக்கள் போன்ற அனைத்து நிகழ்வுகளிலும் பறை இடம் பெறுகிறது என்பதை நினைவில் கொள்ள வேண்டும். அது மட்டுமல்ல, ஏராளமான ஒலி நாடாக்களில் பறையிசை இடம் பெற்றுள்ளது. வெகுஜன ஊடக இசையில் பறையிசை தனக்கென ஓர் தனி இடம் பிடித்துள்ளது. தம்புராவும், வீணையும், மிருதங்கமும், தபேலாவும் ஆக்கிரமித்திருந்த தமிழ்த் திரையிசையில் பறையொலி இணைந்துள்ளது. தமிழ்த் திரையில் பறையாட்டக் கலைஞர்கள் அடித்தாடுவது போன்ற காட்சிகள் வந்து போகின்றன. குறிப்பாக 'சங்கமம்' படத்தில் ஒரு பாடல் முழுக்க பறையிசை எழுப்புகின்ற ஓசை, ரசிகர்களுக்கு இசை விருந்தாக அமைந்திருக்கும்.



படிப்பகம்

www.padippakam.com

அதுபோலவே, 'தென்றல்' படத்தில் ஒரு பாடல் முழுக்க பறையிசைக் கருவியின் பெருமைகளைக்கூறி பறையை வர்ணிக்கும் - ஓர் அற்புதமான பாடலை வித்யாசாகர் அளித்திருக்கிறார். அண்மையில் சென்னை பிரசாத் ஸ்டுடியோவில், அலங்காநல்லூர் பறையாட்டக் கலைஞர்கள் ஒரு சாதனையை நிகழ்த்திக் காட்டினார்கள். அதாவது, பாடல் ஒலிப்பதிவில் இரண்டு முறைகள் கையாளப்படுகின்றன. ஒரே நேரத்தில் இசைக் கலைஞர்கள், பாடகர்கள், இவர்களைக் கொண்டு நேரடியாக ஒலிப்பதிவு செய்வது ஒரு முறை. இன்னொன்று தனித்தனியாக இசை, பாடல், இவைகளைக் கோர்த்து ஒன்றன்பின் ஒன்றாக இணைத்து ஒலிப்பதிவு செய்வது ஆகும். பொதுவாக, பறையிசைக் கலைஞர்கள் முதல் வகை ஒலிப்பதிவில்தான் அதிகம் பயன்படுத்தப்படுவார்கள். ஏனெனில், அவர்களால் இரண்டாம் வகை ஒலிப்பதிவு முறையில் இசைக்கத் தெரியாது என்பது இசையமைப்பாளர்களின் கருத்து. ஆனால், கடந்த ஜூன் 11 அன்று இசையமைப்பாளர்களின் எண்ணத்தை உடைத்தெறியும்வகையில், இசைஞானி இளையராஜாவின் மகன் கார்த்திக் ராஜா இசையமைக்கும் புதிய படத்தின் பாடலொன்றிற்கு பறையிசைக் கலைஞர்கள், தடுமாற்றமின்றி தெளிவான முறையில் பறையிசைத்து முடித்தார்கள்.

வடதமிழகத்திலுள்ள தலித்துகள், பறையிசைக் கருவியை அடிமைப்படுத்தப்பட்ட தீண்டாமையின் ஓர் வடிவமாகவே பார்க்கிறார்கள். ஏனெனில், 'பறை'யடிப்பது, இப்பகுதிகளில் நிகழும் சாவுகளுக்கு மட்டுமே பயன்படுத்தப்படுகிறது. வேறு எந்த நிகழ்வுக்கும் பறையைப் பயன்படுத்துவதில்லை. அதனால் பறையை இழிவான தொழில் கருவியாகப் பார்க்கிறார்கள். ஆனால், தென் மாவட்டத்தில் 'பறை' - சாவுக்கு மட்டுமல்ல; எல்லா நிகழ்ச்சிகளிலும் பயன்படுத்தப்படுகிறது. இழவுக்கு அடித்த தொழில் கலையை மேடையில் நிகழ்த்தும் ஆட்டக்கலையாக மாற்றி விட்டனர். வடமாவட்டங்களில் 'பறை' - மேடையேறும் நிகழ்ச்சியாக மாறவில்லை. வழக்கத்திலிருந்த தொழில் கலையை இப்பகுதி கலைஞர்கள் நிகழ்த்துக் கலையாக மாற்றி, அதற்கு வேறு முகத்தை ஏற்படுத்தி விட்டனர்.

'தலித் கலை விழா' தொடங்கி பத்தாண்டுகள் முடிந்த பிறகும் தலித் கலைகள் - தலித் அல்லாதோரிடம் ஒருசில அசைவுகளையும், மாற்றங்களையும் உருவாக்கியுள்ளன. தலித் கலைகளை ஏற்றுக் கொண்டு அவற்றைக் கற்றுக் கொள்ள முன்வந்துள்ளனர். இன்று தமிழகத்தில் தலித் அல்லாதோர் இக்கலைகளை கற்றுக் கொண்டு, கலைக் குழுக்களாகவும் இயங்கி வருகின்றனர். தலித் அல்லாதோரும் பறையடிக்கின்றனர். ஆனால், அவர்கள் சாவு நிகழ்வுகளுக்கு அடிப்பதில்லை. மேடை நிகழ்ச்சிகளில் மட்டுமே பறையடிக்கின்றனர். மேடை நிகழ்ச்சியைத் தொடர்ந்து, தொலைக் காட்சி, திரையரங்கம் போன்ற வெகுசன ஊடகங்களிலும் நிகழ்த்தி வருகின்றனர்.




'பறை' மேடைக் கலையாக, நிகழ்த்துக்கலையாக பரிணாம வளர்ச்சி பெற்றதால் அதைக் கற்றுக் கொள்ளும் தேவையும் அதிகரித்திருக்கிறது. செவ்வியல், மேற்கத்திய கலைகளைக் கற்றுக் கொள்வதற்கு எவ்வாறு முறையான பயிற்சிகள் மேற்கொள்ளப்படுகிறதோ, அதுபோல பறையாட்டத்தைக் கற்றுக் கொள்வதற்கும் முறையான பயிலரங்குகள் திட்டமிட்டு உருவாக்கப்பட்டு பயிற்சிகள் நடைபெறுகின்றன. இப்பயிலரங்குகளில் பறையாட்டக் கலைஞர்களே கற்றுக் கொடுக்கும் ஆசிரியர்களாக, கலை ஆசான்களாக அடையாளப்படுத்தப்படுகின்றனர். இதுபோன்ற அரிய வாய்ப்புகள், பறையாட்டக் கலைஞர்களிடையே புதிய ஆளுமைப் பண்புகளையும், தலை நிமிர்வையும் ஊட்டுகின்றன.

இதனால், பறையிசைக் கருவியின் விலையும் உயர்வடைந்துள்ளது. பத்தாண்டுகளுக்கு முன் ரூ. 100, ரூ. 150 என ஒரு பறையின் விலை இருந்தது. ஆனால், இன்று அதே பறை 700 ரூபாய் என உயர்ந்துள்ளது. பறை உற்பத்தி செய்யும் கலைஞர்களுக்கு இதன் மூலம் வருமானம் அதிகரித்திருக்கிறது. செவ்வியல் கலைகளும், மேற்கத்திய, மெல்லிசைக் கலைகளும் பயிற்றுவிக்கக் கூடிய அரசு இசைப் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் பறையை ஒரு பாடமாகச் சேர்த்து பறையிசையை கற்றுக் கொடுக்க முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இசைக்கல்லூரிகளின் பாடத்திட்டத்தில் 'பறை'யும் ஒரு பாடமாக இணைக்கப்பட்டிருப்பது, தொடர்ந்து பறையிசை முழங்கியதன் விளைவால் ஏற்பட்ட பயனாகும்.

இன்றும் சிலர், 'பறை' நமது கைகளில் திணிக்கப்பட்ட ஒன்று என்கிறார்கள். தாழ்த்தப்பட்ட மக்கள் நிலத்தோடும், உற்பத்தி உறவுகளோடும் தொடர்புடைய உழைக்கும் மக்கள் என்பதை ஏற்றுக் கொண்டால், அவர்கள் இசைக் குடிகள் என்பதையும் ஒப்புக் கொள்ள வேண்டும். ஏனெனில், உழைக்கும் மக்களிடமிருந்துதான் இசையும், கலையும், இலக்கியமும் பிறக்கின்றன. தொழிற்களங்களில் ஒவ்வொரு தொழிலும் - செயலும், சூழலும் எடுத்துக் கொள்ளும் கால அளவுதான் கலையை, இசையைத் தீர்மானித்திருக்கின்றன. எனவே, பறை நம்மீது திணிக்கப்பட்ட ஓர் இழிநிலைக் கருவியல்ல; மாறாக இசையறிவை விளக்கும் ஓர் தொன்மையான இசைக் கருவி.

எனவே, பறையை மீண்டும் கையிலேந்தி இசைப்பதா? அல்லது விட்டொழிப்பதா என்பதை மறுபரிசீலனை செய்ய வேண்டியுள்ளது. சாவுக்குப் பறையடிக்க யாரும் யாரையும் கட்டாயப்படுத்தவில்லை என்று கூற முடியாது. சாதியத்தை ஆழமாய் உள்வாங்கிய பகுதிகளில் இந்நிலை இன்னும் நீடிக்கிறது. ஆனால், பெரும்பாலான பகுதிகளில் பறையிசை விடுதலைத் திசைகளை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது என்பதையும் உற்று நோக்க வேண்டியுள்ளது. சமகால பண்பாட்டுத் தளத்திலிருந்து 'பறை'யை உற்று நோக்குவோருக்கு அது அடிமைப்படுத்தப்பட்ட கருவியா? அல்லது விடுதலைக்கான கருவியா? என்ற கேள்விகள் மீண்டும் மீண்டும் எழலாம். ஆனால், பறை வெல்லும்போது தீர்வுகளும், தீர்ப்புகளும் மாற்றியமைக்கப்படும். மறுபார்வை விரியும்! •



படிப்பகம்

www.padippakam.com

# நன்றன்று

**ஈ. தனராஜ்**
முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்
4/196, துரைசாமி (கவுண்டர்) தெரு
தருமபுரி

'தலித் முரசு' சூலை இதழில் விடுத்த வேண்டுகோளின்படி, தலித் முரசின் வளர்ச்சி நன்கொடையாக ரூ. 1000/- வழங்குகிறேன். ஒரு தலித் கூட்டத்தை நடத்துவதற்குள் மிகவும் சிரமப்படும் நாங்கள், தொடர்ந்து 9 ஆண்டுகளுக்கும் மேலாக 'தலித் முரசு' நடத்துவது என்பது எவ்வளவு சிரமம் என்பதை நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை. இதில் எழுதும் எழுத்தாளர்கள் எவரும், இதற்கான மதிப்பூதியம் எதுவும் பெறுவதில்லை என்பது ஆச்சரியமான ஒன்று.

சிறு கூட்டங்கள் நடத்த, அதற்கான நிதி ஆதரவை - படித்த, பணியில் உள்ள தலித்துகள் தர மறுப்பதுமின்றி, அந்தக் கூட்டங்களில்கூட கலந்து கொள்வதைத் தவிர்க்கின்றனர். இம்மாதிரி பல நேரங்களில் நாங்கள் சலிப்படைவது உண்டு. அப்போதெல்லாம் நாங்கள் 'தலித் முரசை'தான் நினைத்துக் கொள்வோம். காரணம், 'தலித் முரசு' எவ்வித எதிர்பார்ப்புமின்றி, சலிப்படையாமல், தொடர்ந்து நாம் சமூகப் பணி ஆற்றுவோம் என நினைத்து - இப்பத்திரிகையை பல பிரச்சனைகளுக்கு இடையே வெற்றிகரமாக நடத்தி வருவது, மிகவும் பாராட்டுக்குரியது.

பேராசிரியர் அய். இளங்கோவன் போன்றவர்களின் அரும்பணி மெச்சத்தக்கது. நாங்கள் துவண்டு போகும் நேரத்தில், எங்களுக்கு உற்சாகம் தரும் 'டானிக்' 'தலித் முரசு' தான். எனினும், இன்னமும் படித்து பணியில் இருப்போர் - இதற்கு முழு ஒத்துழைப்பு அளிப்பதில்லை என நினைத்தால் - மிகவும் சங்கடமாக இருக்கிறது. மற்ற வார பத்திரிகைகளை வாங்கும் தலித்துகள், இதை வாங்காமல் உதாசினப்படுத்துவது மிகுந்த வேதனையை அளிக்கிறது. டாக்டர் அம்பேத்கர் பெற்றுத் தந்த இடஒதுக்கீட்டால் பயன் பெற்றவர்கள், சமுதாயத்தை மறப்பது மன்னிக்க முடியாத குற்றமே! ஏறத்தாழ 2 லட்சம் தலித் அரசு ஊழியர்களில் 1 லட்சம் பேர் வாங்கினாலே, இப்பத்திரிகையை சிறப்பாக நடத்த முடியும். என்ன செய்வது, நமது சமுதாயமே நன்றி மறந்த சமுதாயமாக உள்ளது. ●

***தோழர் தனராஜ் அவர்கள், தருமபுரி வாசகர் சந்திப்புக் கூட்டம் நடந்த ஒரு சில மாதங்களுக்குள் 150 'தலித் முரசு' ஆண்டு சந்தாக்களை அனுப்பியுள்ளார். அத்துடன் நிற்காமல், ஒவ்வொரு வீடாகச் சென்று இதழின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி, தொடர்ந்து சந்தாக்களை அனுப்பி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்க - போற்றுதலுக்குரிய பங்களிப்பாகும். இத்தகைய தோழர்களின் ஆதரவுடன்தான் 'தலித் முரசு' நம்பிக்கை இழக்காமல் போராடுகிறது.***

**- ஆசிரியர்**

## பவுத்தம் வளர ஒரே சங்கமாவோம் !



***'இந்திய புத்திஸ்ட் சங்கம்' மற்றும் 'அன்னை சாவித்திரி கவுதம் கல்வி அறக்கட்டளை'யின் சார்பில், 24.7.2005 அன்று வேலூர் மாவட்டம் கஸ்பாவில் - தம்ம சக்கர பரிவர்த்தன பவுர்ணமி தியான கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு, உபாசகர் என். சிவலிங்கம் தலைமையேற்றார். கே. அரசுமணி, ஈ. பவுத்த கருணாநிதி, அய். கதிர்வேலு, டி.கே.எஸ். பவுர்ணமி, ராமமூர்த்தி, துரைமுருகேசன், சிவமணி ஆகியோர் முன்னிலை வகித்தனர். புத்த துறவி எம். ரத்னஜோதி புத்தர் சிலையை திறந்து வைத்து, டாக்டர் அம்பேத்கரின் பவுத்த நெறி குறித்து உரை நிகழ்த்தினார். பல சங்கங்களாக பிரிந்திருக்கும் பவுத்தர்கள், ஒற்றுமையாக செயல்பட்டால்தான் - பவுத்தம் வளரும் என்ற கருத்தை அனைவரும் வழிமொழிந்தனர்.***

**- சுபேதார் டி. தர்மலிங்கம்**

### 'தலித் முரசு' வாழ்நாள் கட்டணம் செலுத்திய சமூக நீதிப் போராளிகள்

**மருத்துவர் சா.மா. அன்புமணி,**
களமருதூர்

**திரு. சூ. ரிச்சர்ட்,** திருச்சி

**திரு. தேவஅன்பு,** செங்கல்பட்டு

**திரு. ஏ.டி.எஸ். கென்னடி,**
கோயம்புத்தூர்

**திரு. லூர்து சாமி,** தருமபுரி

**திரு. ஜோசப் சேவியர்,**
திண்டுக்கல்

**திரு. சி. ராஜ்,** நாகர்கோயில்

**திரு. பிரைட் சிம்ஸ்ராஜ்,**
குழித்துறை

**திரு. அந்தோணி ஜோசப்,**
கும்பகோணம்

**திரு. ஏ. ஞானப்பிரகாசம்,** சென்னை

**திரு. அபோலின்,** மதுரை

**திரு. அலெக்சாண்டர்,** ஊட்டி

**திரு. ஜோசப் ஜான்சன்,**
திருநெல்வேலி

**திரு. அந்தோணி சகாயம்,**
நங்கத்தூர்

**திரு. குருசடி சகாயராஜ்,**
அழகாபுரம்

**திரு. அந்தோனிசாமி. டி,**
சாலிகிராமம்

**திரு. எம். ஆரோக்யசாமி,**
வடக்குப்பாளையம்

**திரு. சகாயராஜ்,** திருச்சி

**திரு. லியோ ஜெயசீலன்,**
தூத்துக்குடி

**திரு. எஸ். லூர்துசாமி,** வேலூர்

**திரு. ஏ. பாக்கியநாதன்,** திருச்சி

**திரு. ஜமுனா தாஸ்,** புதுடெல்லி

**திரு. மாற்கு,** எம். கோட்டூர்

**டாக்டர் அம்பேத்கர் பொருளியல் ஆய்வு மய்யம்,** சென்னை

**திரு. ஜெ. மதலை செல்வம்,**
புதுவடவள்ளி

**திரு. டி. தங்கராஜ், இ.ஆ.ப.**
பெங்களூர்



படிப்பகம்

www.padippakam.com

# சாதியை எதிர்ப்பதும் ஏகாதிபத்திய எதிர்ப்பே!


**ஆனந்த் தெல்தும்டே**

இந்தியாவில் இடதுசாரிகள் முன்னெடுத்த ஏகாதிபத்திய எதிர்ப்பில் பல குறைபாடுகள் உள்ளன. அதில் ஒன்று, அது ஏகாதிபத்தியத்துடன் முரண்படக் கூடிய அனைத்து மக்களையும் ஒன்று திரட்டி - ஏகாதிபத்திய எதிர்ப்பை ஊட்டாதது முக்கிய குறைபாடாகும். ஏகாதிபத்திய எதிர்ப்பில் அவர்களுடன் இணைந்து நிற்கக்கூடிய பெருந்திரளான மக்களை அது ஒதுக்கி விட்டது. இது அந்த இயக்கத்தை தரத்தின் அளவிலும், எண்ணிக்கை அளவிலும் பாதித்துள்ளது. இந்த நாட்டின் மக்கள் தொகையில் நான்கில் ஒரு பங்காக இருக்கக்கூடிய தலித் மக்கள், ஒதுக்கப்பட்ட மக்களில் பெரும்பங்கு வகிக்கின்றனர்.

ஒரு சமூகக் குழு என்ற அளவில், அவர்கள்தான் மிகச் சரியான பாட்டாளி வர்க்கமாக இருக்க முடியும். மேலும், உலகளவில் ஏகாதிபத்தியத்திற்கு எதிராக இருக்கக்கூடிய - விவசாயிகளாகவும், தொழிலாளர்களாகவும் அவர்கள் அங்கம் வகிக்கின்றனர். தலித்துகள் ஒதுக்கப்பட்டது ஒருபுறம் இருக்க, பிற பகுதி மக்களிடமும் ஏகாதிபத்திய எதிர்ப்புணர்வு பொதுவாகக் குறைந்தளவே காணப்படுகிறது. இந்த எதிர்ப்புணர்வு, இப்படிக் குறைந்தளவில் இருப்பதற்கு ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்திகளின் குறைபாடுதான் காரணமா என்பது ஆய்வுக்குரியது. பொதுவாக, காடுகளிலும் அதைச் சுற்றிலும் வாழும் பழங்குடியினர், நாகரிகத்திற்கு (என்று சொல்லப்படுகின்ற) தொலைவில் இருந்தாலும், அவர்கள் ஏகாதிபத்திய எதிர்ப்பில் முனைப்புடன் போராடி வருவதைக் காணமுடிகிறது. ஆனால், சமவெளியில் வாழக்கூடிய தலித்துகள் அல்லது பிற மக்களிடமிருந்து இத்தகைய குணத்தைக் காண முடிவதில்லை.

உலகெங்கும் உள்ள மக்களின் மிகப் பெரிய எதிரி ஏகாதிபத்தியமே என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. ஒவ்வொரு தனி மனிதரும், வாழ்க்கையின் அனைத்து அம்சங்களிலும் - வாழ்க்கையின் வழிமுறைகளிலும் ஏகாதிபத்தியத்தைக் கடைப்பிடித்து வருகின்றனர். இது, நாம் சுவாசிக்கும் காற்றைப் போல எங்கும் பரவியுள்ளது. வாழ்க்கையின் முக்கிய அங்கமான பண்பாடு மூலம் நுழைந்து, நமது வாழ்க்கையையே அது கட்டுப்படுத்திக் கொண்டிருக்கிறது. நாம் வாழும் முறை, நாம் நுகரும் பொருட்கள், நமது உறவு முறை, நமது மொழி, நாம் அனைத்தையும் எதிர்கொள்ளும் முறை என எல்லாமே - ஏகாதிபத்தியத்தால் வடிவமைக்கப்பட்டிருக்கிறது.

கடந்த காலத்தில் ஏகாதிபத்தியம், கண்ணுக்குப் புலப்படக்கூடிய சக்திகளுடன் தேசங்களைத் தன் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தது போல் அல்லாமல், இன்று நம் கண்ணுக்குப் புலப்படா வண்ணம் முழுவதுமாக மறைந்து நிற்கிறது. இன்று, தேசிய மற்றும் பன்னாட்டு நிறுவனங்களின் ஒருங்கிணைப்பு மூலம் ஏகாதிபத்தியம் இயங்கி வருகிறது. ஏழை நாடுகளின் மீது பரிவு காட்டுவது போல அவை நடித்துக் கொண்டு, நாட்டின் வளர்ச்சிக்கு உதவுவதுபோல பாசாங்கு செய்து, தன்னுடைய




ANTI - IMPERIALISM AND ANNIHILATION OF CASTES

by : *Anand Teltumbde*

*• Pages : 288 • Rs. 165*

Published by : *Ramai Prakashan, Ramai Ambedkar Pratishthan, C/o. Vaishali Sudhir Chaudhari, 'Ram Rahi', Prasad Society, Mahatma Phule Road, Dombivali (West), Thane - 421202*

“ஏகாதிபத்தியம் ஒழிக” என்ற விண்ணை முட்டும் முழக்கம், இயல்பாகவே பார்ப்பனியத்தைக் குறைத்து மதிப்பிடுவதாக அமைந்து விடுகிறது. இதன் மூலம் ஏகாதிபத்தியம், இந்தியாவில் தன்னை மேலும் வலுப்படுத்திக் கொள்ள முடிகிறது. பார்ப்பனியம் என்ற அடித்தளத்தின் மீதுதான் ஏகாதிபத்தியம் என்ற அமைப்பு கட்டப்பட்டிருக்கிறது. எனவே, பார்ப்பனியத்தை வலுவிழக்கச் செய்து விட்டால் - அதன் மீது கட்டப்பட்டுள்ள ஏகாதிபத்தியத்தை அழித்தொழிப்பது, மிகவும் எளிதானதாகிவிடும். ஆனால், இதை இன்றைய இளைய தலைமுறையினர் புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை.

ஏகாதிபத்தியத்தின் அதிகாரமும் வலிமையும், ஏகாதிபத்தியத்தால் ஆளப்படும் வர்க்கங்களின் வலுவற்றத் தன்மையிலேயே அடங்கியிருக்கிறது. இந்துக்களுடைய சமூக அமைப்பினால்தான் இந்தியா நலிவடைந்துள்ளது. நமது சமூகச் சட்டங்களும், மரபுகளும் - ஒற்றுமையை சீர்குலைப்பதாகவும், பிரிவினையை ஏற்படுத்துவதாகவும் உள்ளன. எனவேதான், ஏகாதிபத்தியம் இங்கு தன்னை பலப்படுத்திக் கொண்டு, இன்று வரை தனது ஆதிக்கத்தைத் தொடரவும் முடிகிறது.”

– டாக்டர் அம்பேத்கர்



படிப்பகம்

www.padippakam.com

சுரண்டலுக்கான தளமாக அது மாற்றிக் கொள்கிறது. ஏகாதிபத்தியம் - உலகத்தை ஆளுமை செய்யும் தொழில் நுட்பத்தோடும், நிதி, கல்வி, மத, மனிதாபிமான நிறுவனங்களை உருவாக்குவது போலவும் படர்ந்துள்ளது. மக்கள் இயக்கங்களை நடத்துவது போலப் பாசாங்கு செய்து, அவற்றைக் காயடிக்கும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களைப் பற்றி இங்கு குறிப்பிட வேண்டியதில்லை.

தரகு அரசியல்வாதிகள், அரசு அதிகாரிகள், கல்வியாளர்கள் இன்னும் சிலர் தேசப்பற்று என்ற பெயரிலும், தொழில்நுட்பம் மற்றும் அறிவார்ந்ததளம் என்ற பெயரிலும் - ஏகாதிபத்தியத்திற்கு தொண்டூழியம் செய்து வருகின்றனர். ஏகாதிபத்தியங்கள் என்று நாம் முன்பு பன்மையில் குறிப்பிட்டது போல இன்று பேச முடியாது. 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியின் தொடக்கத்திலிருந்து ஏகாதிபத்திய நாடுகளுக்கிடையில் வளர்ந்து வந்த போட்டி, இருபதாம் நூற்றாண்டின் முதல் ஆண்டுகளில் இரண்டு உலகப் போர்களாக வெடித்தன. ஏகாதிபத்திய நாடுகளிடையே இருந்த போட்டி என்பது, ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தின் மூல உத்திகளில் கருத்தில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய இன்றியமையாத அம்சமாக இருந்தது.



பெர்லின் சுவர் வீழ்ச்சிக்குப் பிறகும், சோவியத் அரசு வீழ்ந்த பிறகும், உலகமே ஒற்றை ஆட்சியின்கீழ் வருவது என்பது தவிர்க்க முடியாத உண்மையாகிவிட்டது. அமெரிக்கா உச்சியில் அமர்ந்து கொண்டு, தனது ராணுவ எந்திரத்தின் ஈடிணையற்ற ஏவுகணை பலத்தைக் கொண்டு அச்சுறுத்தி மற்ற நாடுகளை இரண்டாவது, மூன்றாவது நிலைகளில் வைத்து அவற்றைத் தனது போலிஸ்காரர்களாகச் செயல்பட வைக்கிறது. இந்தியாவின் சாதி அமைப்பைப் போலவே மய்யத்தில் உள்ள வாஷிங்டன், தனது ராணுவத்தின் பின்னல் அமைப்பு மூலம் தன்னகத்தே ஒருங்கிணைக்கப்பட்ட குணங்களுடன் இயங்குகிறது.

உண்மையில் இன்று ஏகாதிபத்திய நிறுவனத்தின் பல அம்சங்கள், சாதி அமைப்பைப் போன்றே இயங்குகின்றன. ஏனெனில், சாதி அமைப்பு மிகவும் ஆற்றல் வாய்ந்த ஏகாதிபத்திய சுரண்டல் தன்மையைத் தன்னகத்தே கொண்டுள்ளது. உலகில் வேறெங்கும் இத்தகையதொரு அமைப்பு இல்லை. இந்த வகையில், இரண்டு ஏகாதிபத்திய அமைப்புகள் உள்ளன: 1. வாஷிங்டன் 2. சாதி அமைப்பு. இவை இரண்டும் மிகவும் நெருக்கமாகப் பின்னிப் பிணைந்துள்ளன. எனவே, இந்தியாவில் உள்ள ஏகாதிபத்திய எதிர்ப்புச் சக்திகள் - தங்களது போராட்டத்தின் மூல உத்தியை வகுக்க, இந்த உண்மையிலிருந்து கற்றுக் கொள்ள வேண்டும்.

ஒரு ஜனநாயகப் போராட்டத்திற்கு, நிலப் பிரபுத்துவ, ஏகாதிபத்திய எதிர்ப்பு மிகவும் தேவையான ஒன்று என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. இந்தியா போன்ற பல நாடுகளில், இந்தப் போராட்டம்தான் தற்பொழுது நடந்து வருகிறது. ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டம் - தேசியத்துடன் தொடர்புடையது; நிலப்பிரபுத்துவ எதிர்ப்புப் போராட்டம் - ஜனநாயகத்துடன் தொடர்புடையது. இன்றைய யுகத்தில், ஏகாதிபத்தியமும், நிலப்பிரபுத்துவமும் - ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்துள்ளது. நம் நாட்டைப் போன்று அரை நிலப்பிரபுத்துவ - அரை காலனிய நாடுகள், ஏகாதிபத்தியத்தாலும், நிலப்பிரபுத்துவத்தாலும் சுரண்டலுக்கும் ஒடுக்குமுறைக்கும் உள்ளாக்கப்படுகின்றன. எனவே, இதற்கெதிரான ஜனநாயகத்திற்கான தேசியப் போராட்டமும், தேசியத்திற்கான ஜனநாயகப் போராட்டமுமே - இன்றியமையாததாகிறது.

**“ பல நூற்றாண்டுகளாகத் தனியாக ஒதுக்கப்பட்ட, மனிதத் தன்மை நீக்கப்பட்ட வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கும் தலித்துகளை - ஒடுக்கப்படும் தேசமாகக் கருதுவதற்கு எல்லா நியாயங்களும் உள்ளன. அவர்களைப் பொறுத்தவரை, அவர்கள் அனுபவிக்கும் ஒடுக்குமுறைக்கு மூலாதாரமாக விளங்கும் பார்ப்பனியக் கருத்துநிலைதான் - மிக மோசமான சுரண்டல் அமைப்பாகும். ”**

மேற்கூறிய ஆய்வு பொதுவாகப் பார்த்தால் சரியானதுதான் என்றாலும், ஏகாதிபத்திய எதிர்ப்பு நடவடிக்கைகளை ஒரே அச்சுவார்ப்பில் பார்ப்பதை இது தவிர்ப்பதில்லை. எடுத்துக்காட்டாக, நிலப் பிரபுத்துவத்திற்கு எதிரான போராட்டம், சாதிகளுக்கு எதிராகப் போராடாமல் பாராமுகமாகியிருப்பது ஏன்? வெளியில் உள்ள ஏகாதிபத்தியம் எதிரியாக அடையாளம் காணப்படுகின்றபோது, உள்நாட்டில் வளர்த்தெடுக்கப்பட்டு, மக்களை வெளிப் படையாக ஒடுக்கும் ஏகாதிபத்திய நிறுவனம் (சாதி) - மிகவும் வசதியாக அலட்சியப்படுத்தப்படுகிறது. ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டம், வெளியில் இருந்து வரும் ஏகாதிபத்தியத்தைத் தான் கருத்தில் கொள்ள வேண்டுமா? இது உண்மையெனில், உள்நாட்டு மக்களால் தாங்கள் ஒடுக்கப்படுவதாக நினைக்கும் மக்கள், இப்போராட்டங்களில் ஏன் பங்கேற்க வேண்டும்?

ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டம், தேசியத்தை அடிப்படையாகக் கொண்டது. இது உண்மையெனில், இப்போராட்டம் இந்தியாவை ஒரு தேசமாகக் கருத வேண்டும். ஆனால், இடதுசாரிகளின் பகுத்தாய்வுகள் இக்கருத்தை ஏற்கத் தடையாக உள்ளன. உண்மை என்ன? இந்தியா ஒரு தேசமல்ல; அது பல தேசிய இனங்களைக் கொண்ட நாடு. இந்தியர்களின் ஏகாதிபத்திய எதிர்ப்பு உணர்வு பலகீனமானதாக இருப்பதே இந்தக் கருத்துக்குச் சான்றாக விளங்குகிறது. இதைவிட வலுவான மற்றொரு காரணமும் இருக்கிறது. பல நூற்றாண்டுகளாக உள்நாட்டு ஏகாதிபத்திய அமைப்புடன் சேர்ந்து வாழப் பழகிக் கொண்டு, ஏகாதிபத்தியக் கருத்து நிலையையும் - ஏகாதிபத்தியப் பண்புகளையும் தங்கள் மனதில் பதிய வைத்துக் கொண்டுள்ள மக்கள், எந்த வகையான ஏகாதிபத்தியமும் தங்களைப் பாதிப்பதாகக் கருதுவதில்லை.

கருத்துநிலை அளவில் ஏகாதிபத்தியமும் பார்ப்பனியமும் ஒன்றே. உண்மையில், ஏகாதிபத்தியம் என்பதற்கான எல்லா அர்த்தங்களும் பார்ப்பனியத்திற்கும் பொருந்தும். ‘சமுதாயத்தின் ஒரு பிரிவு மற்றொரு பிரிவால் தொடர்ந்து ஒடுக்கப்படுவதுதான் ஏகாதிபத்தியமாகும்’



படிப்பகம்

www.padippakam.com

என்னும் லெனினின் வரையறை, பார்ப்பனியத்திற்கு முழுமையாகப் பொருந்துகிறது. மேலும், தேசியம் என்பதை வரையறுப்பதற்கும் பார்ப்பனியத்தைக் கருத்தில் கொள்ள வேண்டும். தேசியம் என்பது அரசு - எல்லையுடன் தொடர்புடையதாகவோ அல்லது புவிப்பரப்பு சார்ந்ததாகவோ இருந்தாக வேண்டும் என்பதில்லை. ''இந்தியாவில் ஒவ்வொரு சாதியும் ஒரு தேசம்தான்'' என்று பாபாசாகேப் அம்பேத்கர் கூறியதை நாம் நினைவு கூர்தல் வேண்டும்.

பல நூற்றாண்டுகளாகத் தனியாக ஒதுக்கப்பட்ட, மனிதத் தன்மை நீக்கப்பட்ட வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கும் தலித்துகளை - ஒடுக்கப்படும் தேசமாகக் கருதுவதற்கு எல்லா நியாயங்களும் உள்ளன. அவர்களைப் பொறுத்தவரை, அவர்கள் அனுபவிக்கும் ஒடுக்குமுறைக்கு மூலாதாரமாக விளங்கும் பார்ப்பனியக் கருத்துநிலைதான் மிக மோசமான சுரண்டல் அமைப்பாகும். அவர்களைப் பொறுத்தவரை, பார்ப்பனியம்தான் ஏகாதிபத்திய தேசம். மநுவின் ஆட்சியைத் தேர்வு செய்வீர்களா அல்லது அன்னியர் ஆட்சியைத் தேர்வு செய்வீர்களா என்று தலித் மக்களைக் கேட்டால், அவர்கள் அன்னியர் ஆட்சியைத்தான் தேர்வு செய்வர். ஏகாதிபத்திய எதிர்ப்பாளர்கள் இதைப் பிற்போக்கானது என்று கூறுவர். ஆனால், எதார்த்த நிலை இதுதான்.

ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கம், தனது மூல உத்தி நிலைப்பாட்டிலிருந்தும்கூட, உயர்சாதியினர் எனப்படுவோரின் உள்நாட்டு ஏகாதிபத்தியத்தையும் கருத்தில் கொள்ள வேண்டும். ஏனெனில், ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தின் மய்யக்கூறாக அமையக் கூடியவர்கள், இந்த உள்நாட்டு ஏகாதிபத்தியத்திற்குப் பலியாகியுள்ள தலித்துகளாவர். உள்நாட்டு, வெளிநாட்டு ஏகாதிபத்தியங்களால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள அவர்கள், இயல்பாகவே எந்த வகையான ஏகாதிபத்தியத்திற்கும் எதிரானவர்கள். வர்க்க அடிப்படையில் பார்த்தாலும், இந்த நாட்டின் அடிப்படையான பாட்டாளி வர்க்கமாக அவர்கள்தான் இருக்க முடியும்.



❝ வெளியில் உள்ள ஏகாதிபத்தியம் எதிரியாக அடையாளம் காணப்படுகின்ற போது, உள் நாட்டில் வளர்த்தெடுக்கப்பட்டு, மக்களை வெளிப்படையாக ஒடுக்கும் ஏகாதிபத்திய நிறுவனம் (சாதி) மிகவும் வசதியாக அலட்சியப் படுத்தப்படுகிறது. ❞

ஏகாதிபத்திய எதிர்ப்பியக்கம், இத்தகைய வாய்ப்பை சரியான முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். தலித்துகளுடைய சாதிய எதிர்ப்புப் போராட்டம், அடிப்படையில் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டமே. ஏகாதிபத்திய எதிர்ப்புவாதிகளின் நடவடிக்கைகளால்தான் தலித்துகள், ஏகாதிபத்திய எதிர்ப்பியக்கத்தில் தங்களை இணைத்துக் கொள்ள மறுக்கிறார்கள். சாதி ஒடுக்குமுறையை அலட்சியப்படுத்தும் எந்த இயக்கத்தையும் சந்தேகத்துடனேயே பார்க்கிறார்கள். ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தின் ஓர் ஒருங்கிணைந்த அங்கமே சாதி ஒழிப்புப் போராட்டம் என்பதை - ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கங்கள் உணர வேண்டும். தலித் இயக்கங்களும், ஏகாதிபத்திய எதிர்ப்பியக்கங்களும் ஒன்றிணைந்து போராட உறுதி எடுக்கவில்லை எனில், முழு வெற்றியை ஈட்ட முடியாது.

II

இடதுசாரி வட்டங்களில் முன்பு, சாதி ஒரு பிரச்சினையாகவே புரிந்து கொள்ளப்படாமல் இருந்தது. தற்பொழுது 'சாதியும் ஒரு பிரச்சினைதான்' என்ற அளவுக்கு அது புரிந்து கொள்ளப்பட்டிருக்கிறது. அதாவது பாலியல், தேசியம், சிறுபான்மையினர், மதவாதம் என்பது போல - சாதியும் ஒருவகைப் பிரச்சனை என்ற அளவில் அது புரிந்து கொள்ளப்படுகிறது. எல்லா நாடுகளிலும், சமூகங்களிலும் இருக்கும் பிரச்சினையைப் போலவே, சிற்சில மாறுதல்களுடன் சாதியும் இங்கு நிலவுகிறது என்று புரிந்து கொள்வது, சாதியின் தனித்தன்மையையும் - அதன் கொடூரத்தையும் குறைத்து மதிப்பிடுவதற்கு ஒப்பானதாகும்.

ஒவ்வொரு சமூகத்திலும் பல்வேறு முரண்பாடுகள் நிலவுகின்றன. ஆனால், இந்த முரண்பாடுகள் நிலவுகின்றன என்பதாலேயே, அவற்றின் வளர்ச்சிக் கட்டங்களைக் கருத்தில் கொள்ளாமல், அவற்றைத் தீர்க்க முடியாது; தீர்க்க வேண்டிய தேவையும் இராது. முரண்பாடுகள் சமரசத்திற்கு இடமில்லாத ஓர் உச்ச கட்டத்திற்குச் செல்லும்போதுதான் - அவற்றை வெற்றிகரமாகத் தீர்க்க முடியும் என்பதை இயங்கியல் நமக்குக் கற்பிக்கிறது. எனவே, எந்த ஒரு வளர்ச்சிக் கட்டத்திலும் புரட்சியின் மூலம் தீர்வு காண விழையும் ஒரு முதன்மை முரண்பாடு இருக்கவே செய்யும். இடதுசாரிகளின் புரிதலில், சாதி என்பது சமுதாயத்தில் உள்ள பல்வேறு முரண்பாடுகளில் ஒன்றேயொழிய, அடிப்படையான அல்லது முதன்மையான முரண்பாடு அல்ல. அவர்களைப் பொறுத்தவரை, அது வர்க்கப் போராட்டத்தின் போது தீர்க்கப்படும் முரண்பாடு அல்லது புரட்சிக்குப் பிந்தைய சமுதாயத்தில் கையாளப்பட வேண்டிய ஒன்று.

வரலாற்று ரீதியாக சாதியை ஒரு பிரச்சினையாகவே அங்கீகரிக்கத் தயாராக இல்லாத சூழல் நிலவுகிறது. இடதுசாரிகள் 80 ஆண்டுகளுக்கும் மேலாகப் புரிந்து கொள்ளாமல், தற்பொழுது மேலோட்டமாக மட்டுமே சாதிப் பிரச்சினையை விளங்கிக் கொள்கின்றனர். இது, சாதி அமைப்பால் கடும் பாதிப்புக்குள்ளாகி தவிக்கும் மக்களால் ஏற்க முடியாததாக இருக்கிறது. சாதி குறித்து இடதுசாரிகள் முன்வைத்த கீழ்க்காணும் வாதங்கள் அனைத்தும் காலாவதியாகிவிட்டன: சாதி என்பது நிலப்பிரபுத்துவத்தின் எச்சம்; முதலாளித்துவம் பரவும்போது இது இயல்பாகவே மறைந்து விடும்; சாதி என்பது பல்வேறு சமூகங்களிலும் நிலவுகிறது. எனவே, அதைப்பற்றி தனித்துச்சொல்ல ஏதும் இல்லை இத்தகைய அறிவற்ற வாதங்கள் இன்று அம்பலமாகியுள்ளன.

சாதிதான் பிரச்சனை என்பதை ஒப்புக் கொள்வதில் இடதுசாரிகள் காட்டி வந்த தயக்கம் என்னும் வரலாற்றுப் பின்னணியில் பார்க்கையில், கடந்த எண்பது ஆண்டுகளில் அவர்களது புரிதலில் ஏற்பட்டுள்ள சிறிய மாற்றம், சாதி அமைப்பால் கடும் பாதிப்புக்குள்ளான மக்களுக்கு எந்த விளைவையும் ஏற்படுத்துவதாக இல்லை என்பதைக் கூறியாக வேண்டும்.

இந்தியத் துணைக் கண்டத்தின் எல்லா இடங்களிலும் அச்சுறுத்தும் சக்தியாக விளங்கும் சாதி அமைப்பின் தன்மையைப் புரிந்து கொள்ள, சமுதாயத்தில் புரட்சிகர மாற்றத்தைக் கொண்டு வரவிரும்புபவர்கள் தனி முயற்சி எடுத்திருக்க வேண்டும். ஆனால், இடதுசாரிகளின் புரிதல் ஒரு நிலையிலிருந்து மற்றொரு நிலைக்குத் தாவுவதாகவே இருக்கிறது. ஒன்று, மேற்கு நாடுகளிலிருந்து கடன் வாங்கிய கருத்துகளூடாக சாதி அமைப்பைப்



படிப்பகம்

www.padippakam.com

பார்ப்பது; அல்லது சாதி என்பது தீமையல்ல என்று கருதும் பார்ப்பனியக் கண்ணாடியை அணிந்து கொண்டு, சாதி அமைப்பிற்கு ஒரு 'சுதேசி' விளக்கம் கொடுப்பது. இரு புரிதல்களும் தலித்துகளின் விடுதலை உணர்வுகளைப் புரிந்து கொள்ள முடியாமல் செய்துவிட்டன.

சாதி - சமுதாயத்தின் அடித்தளம், மேலடுக்கு ஆகிய இரண்டையும் உள்ளடக்கி, அதனை ஒட்டுமொத்தமாக ஒழுங்கமைக்கும் அமைப்பாகும். மேலும் சாதி, உற்பத்தி முறையின் ஓர் தவிர்க்க முடியாத அங்கமாகும். சமூகத்தின் ஒட்டுமொத்த உற்பத்தி மற்றும் மறுஉற்பத்தி முறையைக் கட்டுப்படுத்தும் தன்மையைக் கொண்டதாக சாதி இருக்கிறது. இன்றளவும்கூட, கிராமப்புறங்களில் சாதிகள்தான் உற்பத்தி முறையின் ஒருங்கிணைந்த பகுதியாக இருக்கின்றன. கிராமப்புறங்களுக்கு அப்பாலும், இச்சமூகத்தின் பொருளாதார நிறுவனங்கள், இன்றளவும் சாதியை ஒட்டியே அமைந்துள்ளன.

பெருக்குவது முதற்கொண்டு மலம் அள்ளுவதுவரை அனைத்து துப்புரவுத் தொழில்களையும், பண்டைய சாதிய சமூகத்தில் செய்தவர்களே இன்றும் செய்து வருகின்றனர். அதிக வருமானம் ஈட்டும் தொழில்கள், மரபு வழியாக உயர்த்தப்பட்ட சாதியினராலேயே செய்யப்படுகின்றன. பார்ப்பனர்களும் பிற மேல்தட்டு சாதியினரும், தலித்துகள் செய்து கொண்டிருந்த சில தொழில்களை நோக்கிப் போயிருந்தாலும், அது சாதியை ஒழிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் அல்ல. மாறாக, பணம் சம்பாதிக்கவே அந்த வேலையைத் தேர்வு செய்துள்ளனர் - எ.கா. செருப்புத் தைக்கும் வியாபாரம். ஆனால், இது தலைகீழாக மாறவில்லை. இந்த மாற்றம்கூட, ஏற்கனவே இந்தத் தொழில்களில் இருந்த தலித்துகளுக்கு வேலையில்லாமல் செய்திருக்கிறது. தலித் மக்கள் இன்னமும்கூட, பெருமளவுக்குப் பொருளாதாரப் பாகுபாட்டுக்கும், வெறுத்து ஒதுக்கப்படுதலுக்கும் ஆளாகி வருகின்றனர் என்பதைப் புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன.

தலித் மக்களின் நிலையை மற்ற மக்களின் நிலையோடு ஒப்பிட்டுப் பார்த்தால்தான் - அவர்களது அவலத்தைப் புரிந்த கொள்ள முடியும். தலித்துகளில் மூன்றில் இரண்டு பங்கு நிலமற்றவர்கள். ஆனால், மற்ற சாதியினரில் மூன்றில் ஒரு பங்கே நிலமற்றவர்கள். தலித்துகளில் மூன்றில் ஒரு பங்குக்கும் குறைவானவர்களே உழவுக் கருவிகள், பம்புசெட்டுகள் போன்றவற்றை வைத்திருக்கக் கூடியவர்களாக இருக்கிறார்கள். ஆனால், மற்ற சாதியினரில் 60 சதவிகிதம் பேர் இந்த வாய்ப்பினைப் பெற்றுள்ளனர். தலித்துகளில் 60 சதவிகிதத்தினர் தினக்கூலியை நம்பிக் கொண்டிருப்பவர்கள். மற்ற சாதியினரில் இத்தகையோர் நான்கில் ஒரு பகுதியினர்தான்.

இதற்கு இணையாகவே படிப்பறிவு, கல்வித் தகுதி மற்றும் சுகாதாரத் தரமும் அமைந்துள்ளன. இதன் விளைவு- அதிகளவு வறுமை. மற்றவர்களுக்கு 21 சதவிகித வறுமை எனில், தலித்துகளுக்கு அது 36 சதவிகிதமாக இருக்கிறது. தினக்கூலியைப் பொருத்தவரை, கிராமங்களில் இது 60 சதவிகிதமாகவும், நகர்ப்புறங்களில் இது 70 சதவிகிதமாகவும் இருக்கிறது. இடஒதுக்கீட்டு முறை ஓரளவுக்கு நன்மை அளித்திருப்பதால், தலித்துகளின் பிரதிநிதித்துவம் இன்று ஒவ்வொரு துறையிலும் ஓரளவுக்கு இருக்கிறது. ஆனாலும், இங்கு சாதி அவர்களின் முன்னேற்றத்திற்குத் தடை போடுகிறது. இடஒதுக்கீட்டு முறை, அதிகாரப் பங்கீட்டை உறுதிப்படுத்துவதாக இல்லை.

தலித்துகளை பொருளாதார ரீதியாக மேம்படுத்துவதற்கு எவ்விதத் திட்டங்களும் இல்லை என்பது மட்டுமல்ல; பண்பாட்டு ரீதியாக அவர்கள் பாகுபாட்டுடன் நடத்தப்படுவதைத் தடுப்பதற்கும் எந்த வழிமுறையும் இல்லை. அதிகார வர்க்கத்தின் மிக உயர்ந்த பதவிகளில் இருக்கக்கூடிய தலித்துகளுக்கும் - கிராமத்தில் வாழும் தலித்துகளுக்கும் சில வேறுபாடுகள் இருப்பினும், சாதி இழிவிலிருந்து அவர்களும் தப்பவில்லை. இவர்கள் வர்க்க ரீதியில் ஏற்றம் பெற்றிருந்தாலும், தலித் மக்களுக்கு அவர்கள் பயன்படவில்லை.

கல்வியைப் பரப்புவதன் மூலம் சாதிப் பண்பாட்டை ஒழித்துவிடலாம் என்ற நம்பிக்கையை சாதி அமைப்பு பொய்யாக்கி விட்டது. இந்நாட்டிலிருந்து வெளிவரும் எந்தவொரு செய்தித்தாளின் திருமணப் பகுதியை - மேலோட்டமாகப் பார்த்தாலே போதும்; மெத்தப் படித்தவர்களும், பல ஆண்டுகளாக வெளிநாட்டில் வசிப்பவர்களும் - தங்கள் சாதியை முதன்மைப்படுத்தி விளம்பரங்கள் கொடுப்பதையும், தங்கள் சொந்த சாதிகளிலேயே வரன் தேடுவதையும் காணமுடியும். இத்தகைய விளம்பரங்கள், உலகமயமாக்கலால் பணக்காரர்களானவர்களிடையே மிக வேகமாக அதிகரித்து வருகிறது.

அண்மைக் காலங்களில் இந்துத்துவத்தின் வளர்ச்சியால், மத அடிப்படைவாதம், சடங்குகள், கோயிலுக்குச் செல்வது, சாமியார்களைப் பின்பற்றுவது அதிகரித்து வருகிறது. இதுவும் சாதி உணர்வைத் தூண்டி விடுவதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். படித்த வர்க்கம்தான் இத்தகைய நவீன - மத மறுமலர்ச்சிக்கு ஆட்பட்டுக் கிடக்கிறது. இது, பண்பாட்டு ரீதியாக தலித்துகளை வெறுத்தொதுக்கும் தன்மைக்குத் தூண்டுகோலாக அமையும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. நாம் கடைப்பிடிக்கும் நாடாளுமன்ற அரசியலும், பல்வேறு முரண்பாடுகளைத் தோற்றுவித்துள்ளது. சாதி மற்றும் சமூக அடையாளங்கள் அரசியலில் மிகப் பெரும் பங்கு வகிக்கின்றன. சாதியை உயிர்ப்புடன் வைத்திருப்பதில் அரசியல் மிக முக்கிய கருவியாக விளங்குகிறது.



**❝ சாதி இன்றளவும் இந்நாட்டின் சமூக இயங்கியலைக் கட்டுப்படுத்தக் கூடியதாக இருக்கிறது; நவீன சமூகத்திலும் பழமைகளைப் பற்றிக் கொண்டு, அது முக்கிய பங்கு வகிக்கிறது. சாதி உணர்வு சாக மறுக்கிறது. இந்த வகையில் ஒரு புரட்சிகர மாற்றத்திற்கான தடைக்கற்களாக சாதிகள் விளங்குகின்றன. ❞**

---

ஆனந்த் தெல்தும்டே எழுதி அண்மையில் வெளிவந்துள்ள - *'ஏகாதிபத்திய எதிர்ப்பும், சாதிகளை ஒழிப்பதும்'* என்ற சிறப்பான ஆங்கில நூலின் முதல் இரண்டு அத்தியாயங்களின் சுருக்கம், இங்கு வெளியிடப்பட்டுள்ளது.



படிப்பகம்

www.padippakam.com



# துப்புரவுத் தொழிலை அகற்றுக

'புரட்சியாளர் அம்பேத்கர் தொண்டர் படை' மாநிலப் பொதுக்குழு 16.7.2005 அன்று, புதுச்சேரி கரிக்கலாம்பாக்கத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் 'பியூச்சர்' ராதா, கோ. சுகுமாரன், பேரா. கல்யாணி ஆகியோர் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில், சி. மூர்த்தி - புரட்சியாளர் தொண்டர் படையின் தலைவராகவும்; கிருஷ்ணவேணி, மகளிர் பிரிவு தலைவியாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பின்வரும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது: ''புதுச்சேரியில் உள்ள தனியார் தொழிற்சாலைகளில் உள்ளூர் மக்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படுவதில்லை. அரசுக்கு பலமுறை எடுத்துச் சொல்லியும் தனியார் தொழிற்சாலைகளில், நிறுவனங்களில் எஸ்.சி/எஸ்.டி. மக்களுக்குஉரிய வகையில் வேலைவாய்ப்பு அளித்திட, புதுவை அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பொதுக் குழு வற்புறுத்துகிறது. மனிதனே மனிதக் கழிவை அகற்றும் இழிவைப் போக்கி, நவீன முறையில் கழிவுகளை அகற்றிடும் வகையில் துப்புரவுத் தொழிலை மேம்படுத்த - புதுவை அரசு ஆவன செய்ய வேண்டுமென இப்பொதுக்குழு வற்புறுத்துகிறது.''

## கலை வழி விடுதலை அரசியல் படைப்பாக்க பயிற்சிப் பட்டறை

நாள் : ஆகஸ்ட் 25லிருந்து 29 வரை

இடம் : தீனபந்து பயிற்சி நிலையம், தீனபந்துபுரம், சித்தூர் மாவட்டம்

பயிற்றுநர்கள் :
புனிதா, செல்வி, பாரதி பிரபு, அமைதி அரசு

பயிற்சி ஒழுங்கமைப்பு :
'தென்னிந்திய தலித் எழுத்தாளர் மற்றும் கலைஞர் பேரவை' - 'அனிட்ரா'

தொடர்புக்கு :
இன்பக்குமார், மணிமாறன்
பேசி : 94434 48979,
98940 21677

# தடையை மீறி ஆர்ப்பாட்டம்

தீண்டாமை பல்வேறு உருவங்களில் வெளிப்படுகிறது என்பதற்கு, ஈரோடு மாவட்டம் - வெள்ளோடு காரைவாய்க்காலில் நடந்த நிகழ்வு ஒரு எடுத்துக்காட்டு. தலித் சமுதாயத்தைச் சேர்ந்த துளசிமணி, வெள்ளோடு காரைவாய்க்காலில் இடம் வாங்கி, குடிசை வீடு கட்டி வசித்து வந்தார். ஒரு தலித் தனது வீட்டிற்கு அருகில் குடிவந்ததை சீரணித்துக் கொள்ள முடியாத பழனியம்மாள், சாதி ஆதிக்கத்துடன் பொருமினார். தனது வீட்டருகில் சக்கிலியர் குடியிருக்கக்கூடாது என்றும், தனது மகன் காவல் துறையில் இருப்பதைக் கூறியும் தொடர்ந்து துளசிமணி குடும்பத்தினரை மிரட்டி வந்தார். எவ்வளவு மிரட்டியும் துளசிமணி குடும்பத்தினர் பணிய மறுத்ததால், அவரது வீட்டிற்கு 25.6.2005 அன்று பழனியம்மாள் தீ வைத்து விட்டார். ஆனால், துளசிமணி கொடுத்த புகாரை பதிவு செய்யாமல் புகார் கொடுக்க வந்தவர்களை காவல் நிலைய ஆய்வாளர் கேசவனும், உதவி ஆய்வாளர் தனலட்சுமியும்இழிவாக நடத்தியுள்ளனர். காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்ய மறுத்ததால், ஊர்மக்கள் அணிதிரண்டு சென்று டி.எஸ்.பி.யை சந்தித்துப் போராடி வழக்கைப் பதிவு செய்ய வைத்தனர்.



வழக்கைப் பதிவு செய்தாலும், காவல் துறை அவர்கள் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. காவல் துறையில் பணியாற்றும் பழனியம்மாளின் மகன் கணேசன், ஊர்மக்களை தொலைத்து கட்டிவிடுவேன் என மிரட்டியுள்ளார். எனவே, ஊர்மக்கள் அனைவரும் நியாயம் கேட்டு மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளரை நேரில் சந்தித்து, நடவடிக்கை எடுக்கக் கோரினர். இதன் விளைவாக வேறு வழியின்றி சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த மாவட்ட எஸ்.பி. பாலசுப்பிரமணியமும், டி.எஸ்.பி. கருணாகரனும் மக்களிடம் நடந்த சம்பவம் பற்றி எதையும் விசாரிக்காமல், சாதி ஆதிக்கவாதியை பாதுகாப்பதிலேயே குறியாக இருந்து கண்துடைப்பு நாடகம் நடத்தினர். இதை தட்டிக் கேட்ட மக்களை திமிரோடு பேசி விரட்டினர்.

காவல் துறை ஊர்வலத்திற்கு தடை விதித்ததால், ஆர்ப்பாட்டம் மட்டும் 11.6.2005 அன்று நடைபெற்றது. இதில் பெண்கள், குழந்தைகள் 200 பேர் உட்பட 500 பேர் கலந்து கொண்டனர். இந்த ஆர்ப்பாட்டத்திற்கு, வெள்ளோடு 'புரட்சிகர விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர் முன்னணி'யைச் சார்ந்த லோகநாதன் தலைமை தாங்கினார். துளசிமணி, சுரேசு, மாணிக்கம், தமிழினியன், சுப்பிரமணி, செல்வராசு, எழிலரசு, ஸ்டாலின்ராசு ஆகியோர் உரை நிகழ்த்தினர். ஆர்ப்பாட்டத்தை காவல் துறையினர் 1 மணிக்கு மேல் நடத்தக்கூடாது என திடீரென தடை விதித்தனர். காவல் துறையின் தடையை முறியடித்து மதியம் 2 மணிவரை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ●



படிப்பகம்

www.padippakam.com



சமூக மாற்றத்தை
விரும்பும் ஒவ்வொரு
வரிடமும் கண்டிப்பாக
இருக்க வேண்டிய
அரிய நூல்.

# டாக்டர் அம்பேத்கர் வாழ்க்கை வரலாறு

♦ ஆசிரியர் : தனஞ்செய் கீர் ♦ வெளியீடு : மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி
♦ பக்கங்கள் : 900 ♦ விலை : ரூ. 325/-
♦ டாக்டர் அம்பேத்கரின் 40 அரிய புகைப்படங்களை உள்ளடக்கியது.
'தலித் முரசு' அலுவலகத்தில் கிடைக்கும்



# 'குடி அரசு 1926'

## முன் வெளியீட்டுத் திட்டம்

பெரியார் 'எழுத்தும் - பேச்சும்' அடங்கிய 'குடி அரசு 1925' முதல் தொகுதியை ஏற்கனவே கழகம் வெளியிட்டுள்ளது. இப்போது 1926 ஆம் ஆண்டுக்கான தொகுப்பு தயாராகி வருகிறது. தொகுதியைப் பெற விரும்புகிறவர்கள், முன்வெளியீட்டுத் திட்டத்தின் கீழ் ரூ. 100 க்கான காசோலை / வரைவோலை / பண விடை மூலமாக - கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். சுமார் 450 பக்கங்களைக் கொண்ட ரூ. 150 விலையுள்ள இந்த நூல் முன் வெளியீட்டுத் திட்டத்தின் கீழ், பணம் அனுப்புவோருக்கு ரூ. 100 க்கு சலுகை விலையில் தரப்படுகிறது. **முன் வெளியீட்டுத் திட்டத்தின் கீழ் பணம் அனுப்பி வைப்பதற்கான கடைசி நாள் 31.8.2005.**

செப்டம்பர் 17 ஆம் தேதி - பெரியார் பிறந்த நாளன்று 450 பக்கங்களைக் கொண்ட 'குடி அரசு 1926' (சனவரி முதல் - சூன் வரை ) வெளியிடப்படுகிறது. அப்போதே, முன்பதிவு செய்தவர்களுக்கும் தொகுப்பு அனுப்பி வைக்கப்படும். காசோலையாகவோ, வரைவோலையாகவோ, அனுப்புகிறவர்களும், பணவிடை மூலமாக அனுப்புவோரும் கீழ்க்கண்ட பெயருக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

**தா.செ. மணி (THA.SE. MANI)**, பெரியார் படிப்பகம்
(பேருந்து நிலையம் அருகில்), மேட்டூர்

குறிப்பு : 1926 - இரண்டாம் தொகுதி - மூன்றாவது வெளியீடாக தொடர்ந்து வெளிவரும்

# முற்றுகை

அரையாண்டிதழ்

**வீ**ரியமாக எழுந்து வந்த
தலித் கலை, இலக்கிய மீட்டுருவாக்க
முயற்சிகள், அண்மைக்காலமாக
தேக்கமடைந்திருக்கின்றன.

மிகக் குறுகிய ஊடக வெளியும்,
தலித் படைப்பனுபவங்களில்
ஊடாடி கெடுத்த ஆதிக்க இலக்கிய
மதிப்பீடுகளுமே அதற்குக் காரணம்.

எனவே, தனித்துவமான
தலித் படைப்பனுபவங்களை
வெளிக் கொணர்ந்து பாதுகாக்கும்
தேவையுடன்
எல்லைகளால் மறிக்கப்பட்ட தலித்
கலை, இலக்கியத்திற்கு எல்லையற்ற
விரிந்த வெளியை உருவாக்கும்
நோக்குடன்

முற்றுகை
முன்னெடுக்கப்படுகிறது.

சுதந்திரமான படைப்புகளே
அழகும் தரமும் மிக்கவை.

அவற்றையே எதிர்நோக்குகிறோம்.

**வெளியீடு : டிசம்பர் 6, 2005**



தொடர்பு முகவரி :
'முற்றுகை',
1, அப்பாவு கிராமணி தெரு,
எல்லீசு சாலை,
சென்னை - 600 002
பேசி : 044 - 5215 6320



படிப்பகம்

www.padippakam.com

# மடல்கள்



■ 'தலித் முரசு' படிக்கப் படிக்க, என்னுடைய மூல வேர்களை - தொப்புள் கொடி உறவுகளைக் கண்டுபிடிக்க உதவியது. ஆதிதிராவிடர் சமூகத்தைச் சேர்ந்த நம்மை ஆரியர்கள், அவர்களுடைய ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டு வந்து இந்துவாக்கி விட்டனர். சூழ்நிலை காரணமாக முகமதிய மதத்தைத் தழுவ நேர்ந்ததால், எம்மை இப்போது முஸ்லிம்கள் என அடையாளம் காட்டுகின்றனர். ஆனால், நாங்கள் இஸ்லாமிய மத ரீதியான பண்பாட்டை மேற்கொண்ட தலித்துகளே என்பதை உணர்கிறோம். எனவே, என்னுடைய போர்ச்சமூகத்தை அடையாளம் காட்டிய 'தலித் முரசை' - முதல் கட்டமாக ஒவ்வொரு மாதமும் பத்து இதழ்களை வாங்கி பரப்ப இருக்கிறேன். உடனே அனுப்புக.

அ. அமீர் பாட்சா
*கந்தர்வக்கோட்டை*

■ தச்சூர் - தேவாலய சாதி வெறிக்கு ஒரு சான்று. 1725 அளவிலேயே தரங்கம்பாடி பகுதியில் கிறித்துவ மதத்தில் சாதி வெறி புகுந்து விட்டது. பீகார் - லோகனிபூர் கிஷோரிதாசின் சேரி மேம்பாட்டுப் பணியைப் போன்றே, 1920 களில் காஞ்சி அங்கம்பாக்கம் குப்புசாமி, துணிவான போராளியாக சாதி வெறியை வென்று சாதனை படைத்தார். அங்கம்பாக்கம் வழக்குச் செய்தியை வெளியிடுவதற்காகவே 'தமிழன்' ஏடு அப்பாதுரையாரால் தொடரப்பட்டது. ஏபி. வள்ளிநாயகத்தின் வரலாற்றுத் தொடர் அருமை.

மறக்குணத்து வே. பிரபாகரன்
*கோட்டூர்புரம்*

■ உள்ளூர் கோலிசோடா விற்பவனை விளக்கு மாற்றால் அடித்து, அவன் வாயாலேயே 'கூலிங்' என்றால் 'கோகோ கோலா'தான் என்று சொல்ல வைத்து, அவனையே அப்(விஷ) பானத்தை விற்பனை செய்யச் சொல்லும் - அந்நிய நாட்டுப் பொருளை அறைகூவி விற்கும் அறிவற்ற ஒருவனைக் கொண்டு தற்பொழுது வெளிவந்துள்ள 'அந்நியன்' படத்திற்கு எதிரான கண்டனக் குரல் வெடிக்க வேண்டும். மீண்டும் 'மநுதர்மம்' நிலைப் பெற்றால்தான் நாடு சீர்பெறும் என்பதுபோல இப்படம் எடுக்கப்பட்டுள்ளது.

கி. மணிமொழி, *குடந்தை*

■ 'தலித் முரசை' தொடர்ந்து ஆறு மாத காலமாக வாசித்து வருகிறேன். ஒடுக்கப்பட்ட மக்களின் வேதனையை வாசிக்கும் அனைவரும் உணர்ந்து அனுபவிப்பதாக ஆன நிலையைத் தருகிறது 'தலித் முரசு'. சூலை இதழில், 'இன்னுமா இந்துவாக இருப்பது?' - ஊடகங்களும் மற்ற இதழ்களும் தராத கண்டதேவி தேரோட்டப் பிரச்சினையை விரிவாக - உண்மைக் காரணங்களை அறியும் வண்ணம் வெளியிட்டிருந்தார் ஜெனிபர். இதுபோன்று இன்னும் பல கோயில் திருவிழாக்களில் தலித்துகள் புறக்கணிக்கப்படுவதும் தொடர்கிறது. குறிப்பாக, நெல்லை மாவட்டம் வாசுதேவ நல்லூரில் புகழ்பெற்ற மாரியம்மன் பூக்குழி திருவிழாவில் - தலித்துகளும் பூக்குழி இறங்குவோம் என்று அறிவித்ததால், கடந்த நான்கு ஆண்டுகளாக இத்திருவிழா நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

பெரியார் குமார், *ராசபாளையம்*

■ கண்டதேவி சூழ்ச்சி அல்ல; காக்கிச்சட்டைகளின் சூழ்ச்சி அது. மதம் வேண்டாம், சாதி வேண்டாம், கடவுள் வேண்டாம். ஆனால், வடம் பிடிப்பேன் என்பது, தலித் மக்களை மீண்டும் மீண்டும் அவமானப்படுத்த வேண்டும்; அவர்களை வைத்து அரசியல் நடத்த வேண்டும் என்பது தவிர வேறு இல்லை. நாம் அனைவரும் சாதியை ஒழிக்க, அதற்கு ஆதாரமான இந்து மதத்தை ஒழிக்க வடம் பிடிப்போம்.

என். சித்தார்த்தன்
*கடலூர் துறைமுகம்*

■ 'தலித் முரசு' படித்து விட்டுத் தூக்கியெறியக்கூடிய இதழல்ல. நான் வாங்கும் இதழ்களைக் கட்டடம் செய்து வைத்துக் கொள்வது வழக்கம். 'தமிழன்' பத்திரிகையைத் தொடர்ந்து நடத்திய ஜி. அப்பாதுரையார் பற்றிய விவரங்களைத் திரட்டித் தர, கருநாட்டிலுள்ள என் நண்பர்களைப் பலமுறை கேட்டும் விவரம் பெற முடியவில்லை. 'தலித் முரசு' மூலம் அவரைப் பற்றி தெரிந்து கொள்ள முடிந்தது.

ரா. பத்மநாபன், *மாதவரம்*

■ இந்தியாவில் உள்ள எந்தத் தலைவரின் சிலைக்கும் கூண்டுகள் அமைப்பதில்லை. ஆனால், இந்தியத் துணைக் கண்டத்தின் கோடானுகோடி ஒடுக்கப்பட்ட மக்களுக்குப் பாதுகாப்பு அரண் அமைத்துக் கொடுத்த புரட்சியாளர் அம்பேத்கருக்கு மட்டும் - தமிழ்நாட்டில் கூண்டு அமைக்கப்பட்டுள்ளது. மற்ற சிலைகளுக்கு மரியாதை தருகின்ற சமூகம், அம்பேத்கர் சிலைக்கு மட்டும் எந்த மரியாதையையும் தர மறுப்பது - மிகவும் கண்டனத்திற்குரிய செயலாகும். தலித்துகளுக்கு எதிரிகளாக இயங்கும் சக்திகள், இன்று தலித் இயக்கங்களுடன் இணைந்து பணியாற்றும் நிலையில், தலித் தலைவர்கள் இப்பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

அ. வாசுதேவன், *புதுச்சேரி*

## பிறர் துன்பத்தை உணரும் போதுதான்...

சொந்தங்களையும்கூட சுமையாக நினைக்கிற இந்தக் காலத்தில், ஆழக்குழிதோண்டி உரமிட்டதுபோல, துணைத் தளபதி மார்க்கோசின் கட்டுரையை, முதலில் வாசிக்கும்போது - உணர்வுகளால் ஏற்பட்ட ரசாயன மாற்றங்களால் சில நிமிடங்கள் அடுத்த பக்கத்தைப் புரட்டவே இல்லை. மீண்டும் மீண்டும் அதைப் படித்தேன். எனக்குள் ஏராளமான 'ஜபடிஸ்டாக்கள்' நுழைந்து கொண்டனர். மெக்சிகோ மலைகளுக்குச் சென்று நானே பேசுவது போல பேசினேன். அந்தக் கொடுமைகளுக்குக் காரணமானவர்களை ஏசினேன். துன்பப்படும் அந்த மக்களைப் போல நம்மை நாம் உணரும்போதுதான் - போராளிகள் உருவாவதில்லை; உருவாக்கப்படுகிறார்கள் என்ற உண்மையை உணர்ந்தேன். இத்தகைய உணர்வுகளை எம்முள் விதைக்கும் 'தலித் முரசு'க்கு கைம்மாறாக, இவ்விதழ் எனும் ஆயுதத்தைப் பயன்படுத்தாதவர்களுக்கு - இரவல் கொடுத்துப் படிக்க வைக்கிறேன்.

சு. ராவணன், *அரூர்*

Edited and Published by M. Punitha Pandiyan on behalf of Dr. Ambedkar Centre, 203, Jayam Block - Chitra Avenue, 9, Choolaimedu High Road, Chennai - 94, Printed by Y.S. Raj at Harijana Muzhakkam Printers, No. 46, Vizhagathottam, Saidapet, Chennai - 15



படிப்பகம்

www.padippakam.com

பெரியார் பேசுகிறார்

# ஜாதி அமைப்பு முறை இருக்கும் வரை ஒரு இஞ்ச் அளவுகூட முன்னேற முடியாது

ரஷ்யாபோன்ற நாட்டில் பார்ப்பானும் இல்லை; பறையனும் இல்லை. அந்த நாடுகளிலே என்னதான் அடக்குமுறைகள் இருந்ததாகச் சொல்லப்பட்டாலும், அறிவுக்கும் சிந்தனைக்கும் உரிமை இருந்தது. இந்த நாட்டைப் போல் அதை நினைத்தாலே கடவுள் கண்ணைக் குத்திவிடுவார்; அந்த சங்கதியை ஆராய்ந்தாயானால் நரகத்திற்குப் போய் விடுவாய்; இது கடவுளுக்கு விரோதம் என்கிற மாதிரியான நிலைமை இல்லை.

மார்க்ஸ், லெனின், ஏங்கெல்ஸ் முதலியவர்கள் இந்தப்படிதான் முயற்சி செய்ய வேண்டும் என்று சொன்னார்கள் என்பது, கம்யூனிஸ்டுகளின் வாதம். நம்முடைய வாதம் என்னவென்றால், இந்த நாட்டின் நிலைமையும் தன்மையும் காரல் மார்க்சுக்கோ, லெனினுக்கோ அல்லது ஏங்கெல்சுக்கோ தெரியாது. இந்த நாட்டிலே பார்ப்பான் என்று ஒரு ஜாதி - பிறவியிலேயே மேல் ஜாதியாகவும், மற்றவர்கள் எல்லாம் கீழ்ஜாதியாகவும் இருக்கிற சமுதாய அமைப்பு இந்த நாட்டிலே இருக்கிறது என்பது அவர்களுக்குத் தெரியாது. அதனால் மார்க்ஸ் வழியோ, லெனின் தலைமுறையோ இந்த நாட்டுக்கு ஒத்து வராது என்பது நம்முடைய வாதம்.

உண்மையாகவே இந்த நாட்டுக் கம்யூனிஸ்டுகள் நினைக்க வேண்டும்; அவர்களுடைய ஆதரவாளர்கள் என்பவர்களும் அறிய வேண்டும். முதன் முதலில் இந்த நாட்டில் சமதருமப் பிரச்சாரம் செய்து அதற்கு ஆகவென்றே சிறைக்குப் போனவன் நான். 30 வருடமாக இந்த அடிப்படையில் தானே நாங்கள் பொதுப்பணி புரிகிறோம்! கம்யூனிஸ்டுகள் வெறும் பொருளாதாரத்தை மட்டும் முன்னிறுத்திச் சொல்லுகிறார்கள். நாங்கள், பொருளாதாரத் துறையிலே இருக்கிற பேதம் ஒழிய வேண்டியதுதான் ஆனால், சமுதாயத் துறையிலே இருக்கிற பேதம் ஒழிந்தால் தான் சமத்துவம் கிடைக்கும் என்கிறோம். பொருளாதாரத்துறை பேதமொழிப்பு வேலை எங்களுக்கு விரோதமானதல்ல. ஆனால், சமுதாயத் துறையிலே இருக்கிற பேதம் ஒழிந்தால்தான் சமத்துவம் கிடைக்கும் என்கிறோம். ஆனால், சமுதாயத்துறை பேதமொழிப்புக் காரியத்தைக் கம்யூனிஸ்டுகள் ஒத்துக் கொள்வதில்லை.

தோழர்களே! பொருளாதாரப் புரட்சிக்கு சர்க்காரை (ஆட்சியை) ஒழித்தாக வேண்டும்; மாற்றியமைத்தாக வேண்டும். ஆனால், சமுதாயப் புரட்சியை சர்க்காரை ஒழிக்காமலேயே உண்டாக்க முடியும். மக்கள் உள்ளத்திலே, இன்றைய சமுதாய சம்பந்தமாக உள்ள உணர்ச்சியையும், பயத்தையும் போக்கி, பிரத்தியட்ச (உண்மை) நிலையை மக்களுக்கு உணர்த்தினால் போதும். நிலைமை தானாகவே மாறும். இந்தச் சமுதாய அமைப்பை, இன்றைய சர்க்கார் அமைப்பு இருக்கும் போதே மாற்றிவிட முடியும் - மக்கள் பகுத்தறிவு பெறும்படிச் செய்வதன் மூலமாக. 30 ஆண்டுகளுக்கு முன் இந்நாட்டில் ஜாதி ஆணவம், திமிர் எவ்வளவு இருந்தது! இன்று எங்கே போயிற்று அந்த ஜாதி ஆணவமும் திமிரும்?

30 ஆண்டுகளுக்கு முன் இந்த நாட்டுத் திராவிடப் பெருங்குடி மக்கள் எவ்வவு காட்டுமிராண்டித்தனமாக, கேவலமாக நடத்தப்பட்டார்கள்? அந்த நிலைமை இன்று எவ்வளவோ தூரத்துக்கு மாற்றமடைந்து விட்டதே! எப்படி முடிந்தது இவ்வளவும்? சர்க்காரைக் கவிழ்க்கும் முயற்சி செய்ததாலா? அல்லது அண்டர் கிரவுண்ட் (தலைமறைவு) வேலையாலா? இல்லையே! மக்கள் உள்ளத்திலே பகுத்தறிவு உணர்ச்சி ஏற்படும்படியாகச் செய்ததன் காரணமாக, நிலைமையில் வெகுவாக மாறுதல் ஏற்பட்டிருக்கிறது.

முதலில் இந்தக் காரியத்தைச் செய்வோம். பிறகு தானாகவே பொருளாதார உரிமையை ஏற்படுத்திவிட முடியும். பணக்காரத் தன்மைக்கும் அஸ்திவாரமாய், ஆதாரமாய் பேதத்தை ஒழிப்போமானால், தானாகவே பொருளாதார உரிமை வந்துவிடும். ஆகவே, இந்தத் துறையில் பாடுபட முன் வாருங்கள் என்று அன்போடு, வணக்கத்தோடு அழைக்கிறேன்.

இன்னும் சொல்லுகிறேன். இந்த ஜில்லாவையே எடுத்துக் கொள்ளுங்களேன்: யார் இந்த ஜில்லாவில் பணக்காரர்கள்? முதலாவது பணக்காரன் கோயில் சாமிகள்; அதற்கடுத்த பணக்காரன் நிலமுடையோன் பார்ப்பான்; அதற்கடுத்தபடியாக பணக்காரன், நிலமுடையோன் - சைவர்கள் என்ற சூத்திர ஜாதியிலே சற்று உயர்ந்தவர்கள் என்று சொல்லப்படுகிறவர்கள். அதற்கடுத்தபடி, தூக்கியவன் தர்பார் என்பது போல இருக்கிறவனுக்குக் கொஞ்சம் சொத்து. கடைசியிலே யாருக்கு ஒன்றும் இல்லையென்றால், சூத்திரனிலே தாழ்ந்த ஜாதி என்று சொல்லப்படுகிறவனுக்குக் கொஞ்சம் சொத்து. கடைசியிலே யாருக்கு ஒன்றும் இல்லையென்றால் சூத்திரனிலே தாழ்ந்த ஜாதி என்று சொல்லப்படுகிறவனுக்கும், பஞ்சமனுக்குந்தான் ஒன்றுமே இல்லை. இப்போது சொல்லுங்கள்: பணக்காரன் - ஏழை என்கிற பாகுபாடு, உயர் ஜாதி - தாழ்ந்த ஜாதி என்ற அமைப்போடு ஒட்டிக் கொண்டு, சார்ந்து கொண்டு இருக்கிறதா, இல்லையா?

இந்த அடிப்படைகளை நாம் புரிந்து கொள்ளாமலேயே இருக்கிறோம். யாரும் எடுத்துச் சொல்லுவதில்லை. காரணம், இந்த நாட்டின் எல்லாத் துறையும் மேல் ஜாதிக்காரர்கள் என்கிற பார்ப்பனர்களிடத்திலும் - பணக்காரர்களிடத்திலும் சிக்கிக் கொண்டதால், அவர்கள் இந்த அமைப்பு இருக்கிறவரையில் லாபம் என்று கருதி, இந்த அமைப்பின் மூலத்தில் கையே வைப்பதில்லை. மக்களை வேறு பக்கம் திருப்பிவிட்டு விடுகிறார்கள். அதனால்தான் 2000 வருடங்களாக இப்படியே இருக்கிறோம். இன்னமும் சொல்லுகிறேன், இந்தத் தொழிலாளி ஜாதி, முதலாளி ஜாதி அமைப்பு முறை அதாவது பார்ப்பான், சூத்திரன், பறையன் என்கிற ஜாதி அமைப்பு இருக்கிறவரையில், இந்த நாட்டில் ஒரு இஞ்ச் அளவுகூட முன்னேற்றம் காண முடியாது என்று உறுதியாகக் கூறுவேன்.

ஈ.வெ.ராமசாமி

*27.4.1953 அன்று, மன்னார் குடி - வல்லூரில் ஆற்றிய உரை. 'விடுதலை' - 5.5.1953*



**“ஸ்டாலின் இறப்பதற்கு கொஞ்ச நாளைக்கு முன் ஒருமுறை சொன்னார்: ''நாம் நினைக்க முடியாத, அறிந்திருக்க முடியாத சமுதாயக் கஷ்டங்கள் இந்தியாவிலே இருக்கின்றன. எனவே, அந்தச் சமுதாய கஷ்டங்களை ஒழிக்காமல், வெறும் பொருளாதாரப் பிரச்சினைகளை மட்டும் முன்னிறுத்திப் போராடுவதால், இந்தியாவில் கம்யூனிசத்தைக் கொண்டு வந்து விடமுடியாது.'' அப்படி அவர்களுக்கு இந்த நாட்டின் நிலைமை, கஷ்டம் அமைப்புகள் தெரியாது. அவர்களுக்கு இந்த மாதிரியான ஒரு அமைப்பு ஒரு நாட்டிலே இருக்கும் என்பதே அதிசயமாக இருக்கிறது. அறிந்த பிற்பாடுதான் அவர்களும் சொல்லுகிறார்கள் நம்மைப் போலவே.”**


படிப்பகம்

www.padippakam.com

Dalith Murasu, Tamil Monthly Regd. No. TN/CH(C)/43/04-06 Posted at Patrika Channel Egmore RMS/1 Periodicals. Registered with the Registrar of News Papers for India Under No. TNTAM/2003/11948. Licensed to Post without Prepayment Licence No. 32

பாடல் : தலித் சுப்பையா

ஓவியம் : எம்.ஃப்பூ. முத்துசாமி

தாழ்த்தப்பட்ட பொண்ணுக்கும்
தமிழகத்து மண்ணுக்கும்
வர்க்கபூர்வ உறவு இருக்குங்க - எங்க
வாழ்க்கை அதுல பின்னிக் கெடக்குங்க

மண்ணை நம்பி எங்க சன(ம்)
மாடுபோல உழைக்கையிலே
மண்ணத்தின்னு வளர்ந்தவக நாங்க
மணம்பரப்புர மண்வாச(னை)னப் பூங்க

மசக்கையாக இருக்கையிலே
மண்ணாங்கட்டி அம்மா தின்னும்
பொறந்தவுடன் எனக்கும் அதை
மருந்தா தந்த மரபு இன்னும்

முழங்காலு சகதிக்குள்ளே
மொகங்கவுந்து நடுகையிலே
முத்து முத்தா சேறு தெறிக்கு(ம்) - எங்க
மொகமெல்லாம் பூத்துச் செவக்கும்

மொறமாம(ன்) வரப்பு வெட்ட
மொச்சஉளுந்து நா(ன்) பதிக்க
மண்ணுகூட கர்ப்பந்தரிக்கும் - எங்க
மனசுபோல காய்ச்சுக் குலுங்கு(ம்)

கார்த்திகை மாசத்திலே
க(ளை)ளபுடுங்குற நேரத்திலே
பாதம்பட்டுப் பயிறு சிணுங்கும் - அந்தப்
பரவசத்துல பூப்புத் தொடங்கும்



அறுப்பறுக்கும் நேரத்திலே
அரிபோட்டு நடக்கையிலே
காஞ்சபூமி காலப் பொசுக்கும் - எங்க
கண்ணுக்குள்ளே அழுகை பொறக்கு(ம்)

கருது கட்டு சொமந்துக்கிட்டு
கையவீசி ஓடும்போது
வரப்பெல்லாம் தகர்ந்து சரியும் - எங்க
வயசு அதுல பத்துக் குறையும்

களத்துமேட்டு பொட்டலிலே
உழைப்பையெல்லாம் பறிகொடுத்து
தப்பு நெல்(லை)லத் தேடிப் பொடப்போம்
தப்பித் தப்பி நாங்க பொழப்போம்

படிப்பகம்